***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வேளாண் கரும்பு சாகுபடி செய்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிலுவைத் தொகை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட்டு, 2015–2016 ஆம் ஆண்டு அரவைப் பருவங்களுக்கு 349.49 கோடி ரூபாய் நிதி உதவி கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு ரூ.58.17 கோடி நிதி கோரப்பட்டுள்ளது. தமிழக அரசிடமிருந்து வழிவகைக் கடன் பெற்றவுடன், கரும்பு சாகுபடி செய்யும் வேளாண் பெருங்குடி மக்களுக்குண்டான நிலுவைத் தொகை வழங்குவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அவர்களுடைய ஆணையைப் பெற்று வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதி இல்லை, அவ்வளவுதான். நீங்கள் கேட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறிவிட்டார்கள், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) துணைக் கேள்விக்கெல்லாம் அனுமதி இல்லை, உட்காருங்கள். தகவல் கோரல் என்ற முறையில் நீங்கள் தகவல் கேட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சிக் கொறடா பேசுகிறார். எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் பேசுங்கள்.*

## 2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016-2017 ஆம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 5 முறை ஒட்டன்சத்திரம் தொகுதியில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கி, எனது வெற்றிக்குப் பெரிதும் உதவியாக இருந்து, என்னை அரசியலில் உருவாக்கிய எங்களது குடும்பத் தலைவர், முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*நமக்கு நாமே சுற்றுப் பயணத்தினை செப்டம்பர் 20 ஆம் நாள் அன்று ஆரம்பித்து, தமிழ்நாட்டிலுள்ள 234 தொகுதிகளிலும் பயணம் மேற்கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களின் பிரச்சினைகளையும் ஆராய்ந்து, சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராகவும், எங்களுக்கெல்லாம் அரசியல் வழிகாட்டியாகவும் திகழ்கின்ற கழகப் பொருளாளர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*எங்களது கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், ஆத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு அண்ணன்*

திரு. இ. பெரியசாமி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கழகத் தோழர்களுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும், வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10–15*

திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தளவிலே, இன்றைக்குக் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை நிலவி வருகிறது. 2008 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே, அண்ணன் தளபதி அவர்கள் துணை முதலமைச்சராக இருந்த சமயத்திலே, கரூர் அருகே காவேரி ஆற்றிலிருந்து வேடசந்தூர் தொகுதி முழுவதும், ஆத்தூர் தொகுதி, ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம் தொகுதியிலே ஒட்டன்சத்திரம் நகராட்சி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 2011 ஆம் ஆண்டு வேடசந்தூர் அருகே ஒட்டநாகம்பட்டி வரை தண்ணீர் வந்தது. ஆனால், இதுவரை முழுமையாக எல்லா கிராமங்களுக்கும் அந்தத் தண்ணீர் சென்று சேரவில்லை. இன்றைக்குக் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை அந்தப் பகுதியில் இருப்பதால், 1,000 அடி வரை ஆழ்குழாய்க் கிணறு அமைத்தாலும் தண்ணீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, ஏற்கெனவே செயல்பாட்டில் இருந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி, நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலாறு–பொருந்தலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம். 2009–ல் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே, துணை முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களால் அந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. பழனி மற்றும் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த சுமார் 175 கிராமங்கள் பயன்பெறக்கூடிய வகையிலே, சுமார் 18 கோடி ரூபாய் செலவிலே அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 2011–ல் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. அந்தத் திட்டத்தையும் இன்னும் முழுமையாக செயல்படுத்தாத காரணத்தால் மக்கள் குடிதண்ணீருக்காக மிகவும் சிரமப்படுகிறார்கள். இன்றைக்கு ஊராட்சி உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கையால் லாரிகள்மூலம் ஒவ்வொரு கிராமத்திற்கும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பாலாறு–பொருந்தலாறு கூட்டுக் குடிநீர்த்

திட்டத்தையும் முழுமையாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நங்காஞ்சி ஆற்றிலிருந்து 9 ஊராட்சிகளுக்குப் பயன்படக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டமும் இன்னும் செயல்பாட்டிற்கு வராமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

நல்லதங்காள் அணை. 2010 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே சுமார் 7 கோடி ரூபாய் செலவிலே தொடங்கப்பட்ட திட்டம். 2012–ல் 90 சதவிகித திட்டப் பணிகள் முடிவடைந்துவிட்டன. அங்கே சில நில உரிமையாளர்களுக்கு இன்னும் பணம் கொடுக்காத காரணத்தால், திட்டம் முழுமையடையாமல் 2012–லிருந்து இதுவரை சுமார் 10, 15 முறை நல்லதங்காள் ஆற்றிலேயிருந்து தண்ணீர் வீணாக அமராவதி ஆற்றிலே கலக்கிறது. எனவே, நல்லதங்காள் ஓடையில் குளம் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றினால், அங்கேயிருக்கின்ற சுமார் 50 கிராம விவசாயிகள் பயனடைவார்கள். நிலத்தடி நீர்மட்டமும் உயரும். ஏற்கெனவே அந்தத் திட்டம் குறித்து முன்பு பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்திலே சென்ற ஆண்டு கேட்ட சமயத்திலே, அந்த நில உரிமையாளர்களுக்கு உடனடியாகப் பணம் வழங்கி, மார்ச் 31 ஆம் தேதிக்குள் திட்டப் பணிகள் முடிக்கப்படும் என்று பதில் சொன்னார்கள். எனவே, நில உரிமையாளர்களுக்கு உடனடியாகப் பணத்தைக் கொடுத்து, அந்தத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றினால், அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வாதாரம் செழிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன், பின்னர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) உங்கள் துறை தொடர்பான இன்னும் 2 விஷயங்கள் இருக்கின்றன, அதை சொல்லிவிடுகிறேன்.

அடுத்து, பரப்பலாறு அணை. 1974 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, ஒட்டன்சத்திரம் அருகே வடகாடு வரையான ஊராட்சி மலைப் பகுதியிலே, சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் அணை கட்டப்பட்டது. அந்த அணையினுடைய கொள்ளளவு 90 அடி. இப்பொழுது 40, 50 அடிக்கு வண்டல் மண் படிந்து, அந்த அணையினுடைய முழு கொள்ளளவையும் எட்ட முடியாத சூழ்நிலை உள்ளது. அந்த

அணையைத் தூர் வாருவதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, மத்திய வனத் துறையின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக நான் கேள்விப்படுகின்றேன். அந்த அணையைத் தூர் வாரினால், அங்கேயுள்ள 10–க்கும் மேற்பட்ட குளங்கள் மற்றும் ஏரிகள் நிறையும். ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கும் மற்றும் பல்வேறு கிராமங்களுக்கும் குடிநீர் ஆதாரமாக விளங்கும் அந்த அணையை விரைவிலே தூர் வாருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்மூலம் 10,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறவிருக்கின்றன. எனவே, அந்தத் திட்டத்தையும் உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் தொகுதியிலே, நெடுஞ்சாலைத் துறைக்குட்பட்ட மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் போடப்பட்டு 7, 8 ஆண்டுகள் ஆகின்றன. இன்றைக்கு அந்தச் சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. எனவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், அந்தச் சாலைகளை எல்லாம் இந்த ஆண்டு C.R.I.D.P. திட்டத்திலே எடுத்து, சீர் செய்து தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தளவிலே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்கப்பட்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக முக்கியமான பிரச்சினையை அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கோத்தையம் கிராமம், நல்லதங்காள் ஓடையின் குறுக்கே குளம் அமைப்பது பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் இங்கே சில

கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கோத்தையம் கிராமத்தின் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைக்கும் பணிக்காக ரூபாய் 697 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டமானது கோத்தையம் கிராமத்தின், நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஏற்கெனவே உள்ள ஊராட்சிக் குளமான குயில் குளத்தை உள்ளடக்கிய திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய குளத்தின் கொள்ளளவு 36.10 மில்லியன் கன அடி. குளம் வருடத்திற்கு இருமுறை நிரம்புவதாகக் கணக்கிடப்பட்டு வருடந்தோறும் 72.20 மில்லியன் கன அடி தண்ணீர் பாசனத்திற்காக சேமித்து வழங்கத்தக்க வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணி துவங்கப்பட்டு, தற்போது 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நில எடுப்பிற்கான மொத்த இழப்பீட்டுத் தொகையும் பட்டுவாடா செய்த பிறகே பணி தொடர அனுமதிக்க முடியும் என சில நில உரிமையாளர்கள் தெரிவித்தார்கள். மீதமுள்ள 10 சதவிகிதப் பணிகள் முடிக்கப்படாமல் உள்ளன. கோத்தையம் கிராமத்தில் நிலத்தைக் கையகப்படுத்தும்போது வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையைப் போலவே, போளுவார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த நில உரிமையாளர்களுக்கும் இழப்பீடு வழங்க கேட்டுக் கொண்டுள்ளனர். இது அரசின் ஆய்வில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், பலமுறை அவர்களை அழைத்துப் பேசி இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள். ஆனால், நான் குறிப்பிட்டவாறு கோத்தையம் கிராமத்திற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையைப்போல தங்களுக்கும் வழங்க வேண்டுமென்று போளுவார்பட்டி கிராம மக்களும் தொடர்ந்து வற்புறுத்துகின்ற காரணத்தினாலே காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது. இது அரசின் ஆய்வில் உள்ளது. மீதமுள்ள நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை 31–7–2017–க்குள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் சில நில உரிமையாளர்களிடம் தனியார் பேச்சுவார்த்தை–Private Negotiation–மூலம் நிலத்தைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில், 5 வருடங்கள் ஆகிவிட்ட காரணத்தினாலே இனிமேல் அதே ஒப்பந்தத்தில் பணியை மேற்கொள்ள இயலாது என்று ஒப்பந்ததாரர் விண்ணப்பம் செய்ததால், ஒப்பந்த நடவடிக்கை–agreement முடிக்கப்பட்டிருக்கிறது. நில எடுப்புப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்ட பின்னர்

டெண்டர் விடப்பட்டு பணிகள் தொடரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல ஒட்டன்சத்திரம் புறவழிச் சாலையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) வேறு என்ன சொன்னீர்கள்? பரப்பலாறு அணையைத் தூர் வாருவது பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்; இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் புறவழிச் சாலை பற்றித்தான் அடிக்கடி பேசுவார். திண்டுக்கல் புறவழிச் சாலை குறித்து ஏற்கெனவே அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலேயிருந்து அடிக்கடி கேள்வி கேட்டு வருகின்றார்; அதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, குடிநீர்த் திட்டத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, அவருடைய தொகுதியிலும், நகராட்சியிலும், பேரூராட்சியிலும் இன்றைக்கு சரியான முறையிலே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒருசில இடங்களில் இருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினைகளுக்குக்கூட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தளவில் அவர்களுடைய தலைவர் ஆட்சிக் காலத்திலேதான் அத்திட்டம் கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர், கன்னிவாடி, ஸ்ரீராமபுரம் மற்றும் பாளையம் ஆகிய நான்கு பேரூராட்சிகள் மற்றும் ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் 764 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்

*தலைவி அம்மா அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.38.01 கோடி மதிப்பீட்டில் 4.22 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கடந்த 12–1–2006–ல் நிருவாக அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு நிருவாக அனுமதி வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதேபோல கடந்த தி.மு.க. ஆட்சியிலே 28–8–2006 அன்று பணி ஆணை வழங்கப்பட்டிருந்தாலும், 3 ஆண்டுகள் ஆகியும் 40 சதவிகிதப் பணிகளே முடிக்கப்பட்டிருந்ததால், அவர்கள் ஆட்சிக் காலத்திலே 12–9–2009–ல் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளை 8 சிப்பங்களாகப் பிரித்து 2009–ல் பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்றன. இது* Main *திட்டம்; அதேபோல கிளை திட்டங்களுக்கான வேலை நடந்தது; அதையும் முழுமையாக முடிக்கவில்லை.* Main *திட்டத்தை முடிக்கவில்லை.* Main *திட்டத்தின் வேலைகள் முடிவடைந்தால்தான் 5 கிளை திட்டங்களுக்கு அனுமதி கொடுக்க முடியும். அதற்குத்தான் முன்பு அவருக்குப் பதில் சொன்னேன். ஆகவே,* Main *திட்டமும், அதேபோல கிளை திட்டங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக அவர் குறிப்பிட்ட ஊர்களுக்கு, ஊராட்சிகளுக்கு மட்டுமல்லாது, எந்தெந்த ஊர்களை நாம் எடுத்து இருக்கிறோமோ அனைத்திற்கும் கண்டிப்பாக குடிதண்ணீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–25*

*அதேபோல் பாலாறு–பொருந்தலாறு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாலாறு மற்றும் பொருந்தலாறு ஆகிய ஆறுகளின் நீரை ஆதாரமாகக் கொண்டு பழனி மற்றும் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 175 ஊரகக் குடியிருப்புப் பகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள், கடந்த தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டாலும், பணிகளை அரைகுறையாக முடிக்காமல் விட்டுவிட்டதால், அப்பகுதி மக்களுக்குப் போதுமான குடிநீர் வழங்க இயலாத நிலைமை இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டில், மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மேற்கொண்ட பல சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, ஆங்காங்கே விட்ட குறை, தொட்ட குறையாக இருந்த அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, கடந்த 2012–ல், இத்திட்டம்*

பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. இந்நிலையில் கடந்த 2015–ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது, மேற்படி திட்டத்தில் மின் மோட்டார்கள் மற்றும் குடிநீர்க் குழாய்கள் சேதமடைந்துவிட்டன. இதனை உடனடியாக சீர்செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், சேதமடைந்த மின் மோட்டார்கள் மற்றும் குடிநீர்க் குழாய்கள் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, பழனி மற்றும் தொப்பம்பட்டியில் உள்ள 141 குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 34 குடியிருப்புகளுக்கும் விரைவில் குடிநீர் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் ஓர் அற்புதமான திட்டத்தை திண்டுக்கல் மாவட்டத்திற்கு அறிவித்தார்கள். திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த நத்தம், அம்மைநாயக்கனூர், நிலக்கோட்டை பேரூராட்சிகள் மற்றும் 1,276 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் திண்டுக்கல் நகராட்சிக்கென கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 636 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 11–2–2015 அன்று அனுமதி வழங்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நிதி ஒதுக்கப்பட்டது. இதற்கிடையே, திண்டுக்கல் மாநகராட்சிக்கென தனி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 14–5–2014 அன்று அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதால், திண்டுக்கல் மாநகராட்சிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 1.96 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். ஒட்டன்சத்திரம் சட்டமன்ற உறுப்பினர், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும்கூட, அங்கிருக்கக்கூடிய மக்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அற்புதமான திட்டத்தை அறிவித்துள்ளதால், இந்தத் திட்டத்தின்மூலமும் அவர்களுக்குத் தண்ணீர் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ஒட்டன்சத்திரம் பொதுமக்களின் நலன்களைக் கருதி ஒட்டன்சத்திரம், கீரனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 65 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு அனுமதி தந்துள்ளார்கள். இந்தத் திட்டம் 2017 ஆம் ஆண்டில், நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயன்பாட்டிற்கு வரும்போது, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட கீரனூர் பேரூராட்சிக்கு இந்தக் கூடுதல் குடிநீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை மூலமாக தன்னுடைய தொகுதியில் பெரும்பாலான சாலைகள் போடப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 187 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் ரூ.63.32 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் எட்டு பாலங்கள் அவருடைய தொகுதியில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பாலங்களின் விவரங்களை வேண்டுமானால் நான் தருகிறேன். இன்றைக்கு பழனி–தாராபுரம் சாலை 1.37 கோடி ரூபாய், மஞ்சநாயக்கன்பட்டி, பெரியபுதூர், கோத்தம்பட்டிமூனூர், ஜவ்வாதுபட்டி... (குறுக்கீடு) நீங்கள் தொடங்கியிருக்கலாம், கட்டியது நாங்கள்தான். இன்றைக்கு பொதுப் பணித் துறைமூலம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் நீர்வள ஆதாரத் துறையின் மூலமாக ரூ.20.09 கோடி மதிப்பீட்டில் எட்டு பணிகள், புதிய தடுப்பணைகளைப் புனரமைக்கவும், புதிய குளங்கள் அமைக்கவும், அணைக்கட்டுகள் அமைக்கவும் மற்றும் கால்வாய்களைச் சீரமைக்கவும் செயல்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் பரப்பலாறு அணையை தூர் வாருவது பற்றி சொன்னார்கள். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வடக்குகாடு கிராமத்தில் உள்ள பரப்பலாறு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவினை மீளக் கொண்டு வரும் பணிகளுக்காக ரூ.19.50 கோடியை இந்த அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. பணி நடைபெறும் இடம் வடக்குகாடு. வனத் துறையிடமிருந்து அனுமதி பெற்ற பிறகு, இந்தப் பணி துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே ஐந்து ஆண்டுகளில் 5 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என அறிவித்துள்ளீர்கள். எங்களது திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதி வழங்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டும் இன்னும் கல்லூரி தொடங்கப்படவில்லை. இருந்தபோதிலும், நீங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். திண்டுக்கல் பகுதியிலுள்ள மக்கள், மேல் சிகிச்சைக்கு செல்ல வேண்டுமென்றால், கோயம்புத்தூரிலுள்ள மருத்துவமனைக்கோ, மதுரையிலுள்ள மருத்துவமனைக்கோ செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கு செல்வதற்கு 2 மணி நேரம், 3 மணி நேரம் வரை ஆகிறது. எனவே, திண்டுக்கல் மாவட்ட மக்களின் நலன் கருதி, வருகின்ற ஆண்டில், திண்டுக்கல் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–30*

தமிழ்நாடு முழுவதும் அரசு உதவி பெறும் அரசு கலைக் கல்லூரி இல்லாத தொகுதிகளைக் கண்டறிந்து, எந்தெந்தத் தொகுதிகளில் கல்லூரிகள் இல்லையோ, அந்தத் தொகுதிகளில் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நேற்றைய முன்தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய

தொகுதியில் 1,000 பேருக்கு முதியோர் உதவித் தொகை வழங்குவதற்கான ஆணை வழங்கப்பட்டிருக்கிறது; அதேபோல, தமிழகம் முழுவதும் முதியோர் உதவித் தொகை வழங்கப்படுமா என்று வினா எழுப்பியதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான பதிலைச் சொன்னார். நான் கேட்டுக்கொள்வது என்னவெனில், தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்கப்பட வேண்டும். முதியோர் உதவித் தொகை வழங்குவதற்கான அனுமதி இன்னும் வரவில்லை என வட்டாட்சியர் அலுவலகங்களில் சொல்கிறார்கள். எனவே, தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தகுதியுள்ளவர்களுக்கும், ஏற்கெனவே முதியோர் உதவித் தொகை பெற்றவர்களுக்கும், சில மாதங்களாக, சில ஆண்டுகளாக உதவித் தொகை வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதையும் கண்டறிந்து, அவர்களுக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். முதியோர் உதவித் தொகைக்கான விவரங்களை, புள்ளிவிவரங்களோடு, ஆதாரங்களோடு நான் எடுத்து வைத்திருக்கிறேன். தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டதைக் காட்டிலும், முதியோர் உதவித் தொகை ஒவ்வோராண்டும் படிப்படியாக உயர்ந்து, தற்போது 29 சதவிகிதம் வரை கூடுதலான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, தி.மு.க. ஆட்சியில் இத்திட்டத்திற்காக ரூ.1,200 கோடி வழங்கப்பட்டது. தற்போது 4,200 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. அதாவது 3,000 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதலான நிதி ஆதாரத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்திட்டத்திற்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதையும்

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தகுதியுள்ள சில பயனாளிகளுக்கு ஒரு மாதம், இரண்டு மாதங்கள் உதவித் தொகையை வழங்காமல் நிறுத்திவிட்டார்கள் என்று கூறினார். இந்தத் திட்டம் தொடர் ஆய்வில் இருக்கக்கூடிய ஒரு திட்டம் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஒரு பயனாளி இறந்துவிட்டாலோ அல்லது பயனாளியின் பொருளாதார நிலைமை உயர்ந்துவிட்டாலோ, அந்தப் பயனாளிகளை அத்திட்டத்திலிருந்து நீக்க வேண்டிய கடமையும் அரசுக்கு இருக்கிறது. ஏனெனில், இத்திட்டம், ஆதரவற்றவர்களுக்கும், நலிவடைந்தவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவித் தொகை வழங்கும் திட்டம் ஆகும். அதனடிப்படையில், இத்திட்டம் தொடர் ஆய்வில் இருக்கக்கூடிய ஒரு திட்டமாகும். எனவே, ஆய்வின்போது, தகுதியற்றவர்களைக் கண்டறிந்து அவர்களை நீக்குவதற்கும், இறந்தவர்களை நீக்குவதற்கும், அதேபோன்று தகுதியுள்ளவர்களை இத்திட்டத்தில் இணைப்பதற்கும் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே மிகச் சிறந்த முறையில் நிருவகிக்கப்படுகிற திட்டமாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகுறித்து நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், மறுபடியும் எதிர்க்கட்சித் தலைவர் பேசியதை சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்தியாவிலேயே 'மக்களைத் தேடி அரசு' என்கிற ஒரு நிருவாகப் புரட்சியைச் செய்திருக்கிற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் வழங்கப்படும் உதவித் தொகை உட்பட, ஒவ்வொரு மாவட்டவாரியான புள்ளிவிவரங்கள் என்னிடம் இருக்கின்றன. தி.மு.க. ஆட்சியில் 21 இலட்சம் பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. தற்போது 31 இலட்சம் பயனாளிகள் வரை கொடுக்கப்படுகிறது. சில ஆண்டுகளில் பயனாளிகளின் எண்ணிக்கை 37 இலட்சம் வரைகூட உயர்ந்திருக்கிறது. ஆண்டுக்காண்டு stable ஆக, இவ்வளவு பேருக்குத்தான் தர முடியும் என்ற உச்சவரம்பு எதுவும் கிடையாது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆண்டுக்காண்டு தேவையின் அடிப்படையில் பயனாளிகளின்

எண்ணிக்கையை உயர்த்துவதற்கும், குறைப்பதற்கும் உரிய ஆணைகளை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தகுதியுள்ள அனைவருக்கும் வழங்கப்படும் என்று அறிவித்த ஆணையின்படி, இத்திட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, முதியோர் உதவித் தொகை மிகச் சிறந்த முறையில் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் பேசியபோது, எங்கெங்கு கலைக் கல்லூரிகள் தேவையோ, அப்பகுதிகளைக் கண்டறிந்து, அப்பகுதிகளில் அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்க வேண்டும் என்று சொன்னார். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், 2011–2016 ஆம் ஆண்டுகளில், தமிழகம் முழுவதும் 67 கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) திண்டுக்கல் மாவட்டத்தில் இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 3 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேலும், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, சித்தூர் கிராமத்திலும் ஓர் உறுப்புக் கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகத்தில் உயர் கல்வியில் சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் 2011 ஆம் ஆண்டில் 100–க்கு 18 பேர் என்ற நிலை இருந்தது; 2014–2015 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, 100–க்கு 44.8 பேர் உயர் கல்வியில் சேர்ந்து படிக்கின்ற நிலையை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழகம் உயர் கல்வியில் முதலிடத்தில் இருக்கிறது என்ற நிலையை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

முற்பகல் 10–35

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகையைப் பொறுத்தவரையில் இதற்கு முன்பாக வழங்கப்பட்ட பலருக்கு இப்போது நிறுத்தி வைத்திருக்கிறார்கள். மற்றொன்று தகுதிவாய்ந்த அத்தனை பேருக்கும் வழங்க வேண்டும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சதவிகிதக் கணக்கைச் சொல்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் ஆண்டுதோறும் எண்ணிக்கையினுடைய அளவு கூடிக்கொண்டே இருப்பதால், நீங்கள் முழுமையாக தகுதியுள்ள அத்தனை பேருக்கும் வழங்க வேண்டுமேயொழிய, இதிலே சதவிகிதத்தையோ அல்லது target fix செய்தோ, ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு என்று சொல்வதையோ தவிர்க்க வேண்டும். மேலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு நாள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து, அங்கே எல்லா அதிகாரிகளையும் வரவழைத்து, மனுக்களைப் பெற்று, தீர்வு காண வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதவிகிதத்தையும் புள்ளிவிவரங்களையும் தவிர்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நடைமுறையிலே செயல்படுத்தப்பட்டுவரும் திட்டத்தின் புள்ளிவிவரங்களைத்தான் சொல்கின்றோம். சிவகங்கை மாவட்டத்திலேகூட தற்போது 74,870 பேர் உதவித் தொகையை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவைக்கேற்ப பயனாளிகளின் எண்ணிக்கை உயர வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன், இன்றைய நிலைமைக்கேற்ப, தகுதிக்கேற்ப, ஓர் அரசினுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்க வேண்டும்; தேவைக்கேற்ப விதிமுறைகளைத் தளர்த்த வேண்டும். 1962–ல் 20 ரூபாயை முதியோர் உதவித் தொகையாக வழங்குகின்ற திட்டம் சென்னையிலே ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசுதான் இந்தியாவிலேயே ஆயிரம் ரூபாய் முதியோர் உதவித்தொகை வழங்குகின்ற அரசாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அரசு விதிமுறைகளை காலத்திற்கேற்றவாறு தளர்த்தியிருக்கிறது. விதிமுறையில்,

பயனாளியின் அசையா சொத்தின் மதிப்பு ரூ.5,000—க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்று இருந்ததை 50,000 ரூபாய் வரை இருக்கலாம் என்று உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோல, பயனாளிக்கு மகனோ அல்லது மகளோ இருந்தால் கடந்த காலங்களில் உதவித் தொகை பெற முடியாது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மகனும், மகளும் இருந்தாலும் அவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழேயிருந்தால் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கலாம் என்று விதிமுறைகளைத் தளர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, முன்பு மாற்றுத் திறனாளிகள், 60 சதவீதம் ஊனமிருந்தால்தான் உதவித் தொகை பெற முடியும். ஆனால், அதையும் தற்போது 40 சதவீதம் ஊனமிருந்தாலே உதவித் தொகையை வழங்கலாம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதிமுறைகளைத் தளர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விதிமுறைகளைத் தளர்த்தியதன் நோக்கம் என்னவென்று சொன்னால், அனைத்து ஆதரவற்றோர்களுக்கும் முதியோர் உதவித் தொகையை வழங்க வேண்டுமென்பதுதான். இந்த அரசினுடைய எண்ணமாக இது இருக்கிறது என்பதைத்தான் நாங்கள் இங்கே எடுத்துக்காட்டுகிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒவ்வொரு தொகுதியிலும் இதுசம்பந்தமாக கூட்டம் நடத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். நான் மீண்டும் சொல்கிறேன்; இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே, மக்களைத் தேடி அரசு என்கின்ற அடிப்படையிலே, மாவட்ட அளவிலே அல்ல, ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் வட்டாட்சியர் அலுவலகத்தைக் கொண்டு செல்கிறோம். இதுவரை 52 இலட்சம் மனுக்களைப் பெற்றிருக்கிறோம். சிவகங்கை மாவட்டம், காரைக்குடியிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க இந்த வாரம்கூட வெள்ளிக்கிழமை அன்று நானும், மாண்புமிகு அமைச்சர் திரு. பாஸ்கர் அவர்களும் ஒரு வருவாய் கிராமத்திலே நடைபெற்ற கூட்டத்திலே கலந்து கொண்டோம். அம்மா திட்ட முகாமிலே பெருந்திரளான அளவிலே மக்கள் அனைவரும் வந்து மனு கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, மற்ற குறைதீர்க்கின்ற முகாம்களிலே மனுக்களைப் பெற்றால் அதை

ஆய்விலே வைத்திருப்பார்கள். அம்மா திட்ட முகாமிலே இருக்கின்ற சிறப்பு என்னவென்று சொன்னால், அங்கு பெறப்படுகின்ற தகுதியுள்ள மனுக்களுக்கு அன்றே தீர்வு காணுகின்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிருவாகப் புரட்சியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அதிலே பங்கெடுக்கவில்லை என்று சொன்னால் நாங்கள் அதற்குப் பொறுப்பேற்க முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் விரும்பினால் அம்மா திட்ட முகாமிலே பங்கெடுத்து, அன்றைக்கே தீர்வு பெறலாம் என்பதையும், (குறுக்கீடுகள்) காலையிலே 10-00 மணிக்குக் கொடுக்கின்ற மனுக்களுக்கு மாலை 5-00 மணிக்குள் தீர்வு காண்கின்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அவர்கள் அதிலே பங்கேற்பதில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். திரு. துரைமுருகன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பங்கேற்காததற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, this is a bad precedent being created in the House. தயவுசெய்து சொல்கிறேன்; உறுப்பினர்கள் பேசும்போது மாண்புமிகு அமைச்சர்கள் short–ஆக பதில் சொல்ல வேண்டும். Lecture அடித்துக் கொண்டிருப்பதை நாங்கள் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. Same thing will happen in return. திரும்பத் திரும்ப, ஒரு மணி நேரமாகக் குறுக்கிட்டு குறுக்கிட்டு விளக்கம் சொன்னால் என்ன அர்த்தம்? குடிதண்ணீர் என்றால் போதும், உடனே எழுந்துகொள்வதா? குடிக்காத தண்ணீரைப் பற்றி

பேசுவதா? என்ன அர்த்தம்? ஒன்றைச் சொல்லிவிடக்கூடாதா? உறுப்பினர்கள் பேசுவதை உட்கார்ந்து கேட்டு, பின்னர் பதில் சொல்ல வேண்டும். நியாயமாகப் பார்த்தால் Finance Minister–தான் பதில் சொல்ல வேண்டும். அடிக்கடி மற்ற அமைச்சர்கள் எழுந்து பேசிக் கொண்டிருந்தால் அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இதற்கு என்ன அர்த்தம்?

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் துறை சம்பந்தமாக கேள்வி கேட்கும்போது துறை சார்ந்த அமைச்சர்தான் பதிலைச் சொல்ல முடியும். அப்போதுதான் சரியான பதில் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடமிருந்து பதில் வரவேண்டுமென்ற நோக்கத்தில் கேட்கின்றார்கள். அதற்கு நாங்கள் பதில் சொல்கின்றோம். அனைத்திற்கும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்வது என்பது இயலாத காரியம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சியிலும் நீங்கள் அமைச்சராக இருந்திருக்கின்றீர்கள். அப்போது எப்படி நீங்கள் பதில் சொன்னீர்களோ அதே முறையைத்தான் நாங்களும் பின்பற்றிச் சொல்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றும் இல்லை, அதற்கெல்லாம் பதில் சொல்லியாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் well–prepared ஆக இருக்கின்றார்கள் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. Prepared ஆகத்தான் வருகிறார்கள். Prepared ஆக வந்து, எல்லா

நேரத்தையும் அவர்களே consume செய்து விடுகிறார்கள். கடைசி நேரத்தில் பேசும் உறுப்பினர்களை உட்கார வைத்து விடுகிறீர்கள். அந்த ஆதங்கத்தைத்தான் சொல்கிறோம். மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது மாண்புமிகு அமைச்சர்கள் என்ன செய்வார்கள் என்றால், அதைக் குறித்து வைத்துக்கொண்டு, உறுப்பினர்கள் உரையை முடித்த பிறகு அதற்கு மாண்புமிகு அமைச்சர்கள் எழுந்து பதில் சொல்வார்கள். இதுதான் நான் பார்த்த முறை. இங்கே எரிகிற கட்சி, எரியாத கட்சி என்கிற மாதிரி பேசுவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, அவர்கள் கேட்கிற கேள்விகளுக்கு, மேற்கொண்டு அவர்கள் தவறாக இந்த அவையில் கருத்துகளைப் பதியக்கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பதில் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் யாரும் பதில் சொல்லக்கூடாது என்று சொல்வது தவறு. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் உரிய பதிலைச் சொல்வார்கள்; இதுதான் என்னுடைய தீர்ப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய ஆணைக்கு நான் கட்டுப்படுகிறேன். எங்களுடைய உறுப்பினர் துறை சார்ந்த ஏதாவது குற்றச்சாட்டுகளைச் சொல்கிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகக் குறுக்கிட்டு பதில் சொல்வதற்கு உரிமை உண்டு. கோரிக்கைகளை வைக்கிறபோது, அதைக் கேட்டுக்கொண்டு, அதற்குப் பிறகு நிறைவாக விளக்கம் சொல்வதுதான் முறையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார். நல்லதங்காள் ஓடை பற்றிச் சொன்னார்; அவர்களுடைய ஆட்சியிலே

உருவாக்கப்பட்டது, 90 சதவிகிதம் பணிகள் நடைபெற்று விட்டன என்று. இருக்கின்ற குறைபாடுகளை அவர்கள் சுட்டிக்காட்டும் போது, அந்தக் குறைபாடுகளைத் தீர்த்து வைப்பது எங்களுடைய கடமை. அந்த நோக்கத்தில்தான் நாங்கள் பதில் சொல்கிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, துறை வாரியாக கேள்வி வருகின்றபோது, அந்தந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்கள் உரிய பதில் அளிப்பதுதான் நடைமுறை. அது உங்களுடைய ஆட்சியிலும் இருந்தது. இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலும் தொடர்ந்து இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைக்கிறபோது, அந்தக் கோரிக்கைகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் அளிப்பதைத் தவறு என்று நாம் சொல்ல முடியாது. (குறுக்கீடு) இல்லை, தவறு என்று சொல்ல முடியாது. எந்த மாதிரியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர்கள் சொல்கிறார்கள். அதைத் தவறு என்று சொல்ல முடியாது. (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் சொல்வதை நான் தவறு என்று சொல்ல முடியாது. இதுதான் முறையும்கூட. மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** தமிழகத்தில் அ.தி.மு.க ஆட்சி துவங்கும்போது அதாவது 2011–2012–ல் தமிழக அரசின் கடன் சுமை 1 இலட்சத்து 3 ஆயிரம் கோடி ரூபாய் என்று இருந்தது. அது படிப்படியாக அதிகரித்து கடந்த 2015–2016 ஆம் ஆண்டில் ரூபாய் 2 இலட்சத்து 11 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் ** ஆதாரம் இருந்தால் தயவுசெய்து அதை சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்து விட்டு, கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சம்பந்தம் இல்லாமல் தவறான குற்றச்சாட்டை இங்கே பதிவு செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதாரத்தைக் கொடுத்தால் அதை அவைக் குறிப்பில் பதிவு செய்யுங்கள். ஆதாரத்தைக் கொடுக்கவில்லையென்றால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, நீங்கள் மூத்த உறுப்பினர். விதிகளைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர். என்னிடம் ஆதாரத்தைக் காட்டிவிட்டுப் பேசியிருந்தால் பரவாயில்லை. ஆகவே, அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மேற்கொண்டு பேசுங்கள். (குறுக்கீடு) எதுவும் வேண்டாம். நீங்கள் ஆதாரம் இல்லாமல் பேச வேண்டாம். நீங்கள் நன்றாகத் தானே பேசுவீர்கள்! ஏன் இன்றைக்கு இப்படிப் பேசுகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

முற்பகல் 10–45

**திரு. அர. சக்கரபாணி:** 2015–2016–ல் அரசின் கடன் சுமை 2 இலட்சத்து 11 ஆயிரம் கோடியாக இருந்துள்ளது. 2016 ஆம் ஆண்டு நிதியாண்டின் இறுதியில் 2 இலட்சத்து 52 ஆயிரம் கோடி அளவிற்குக் கடன் சுமை கூடும் என்று தெரிய வந்துள்ளது.

கடந்த மாதம் மத்திய அரசு அறிவித்துள்ள ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைப்படி, 25–7–2016 அன்று மத்திய அரசு ஊழியர்களுக்கு 7th Pay Commission–ஐ அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பின்படி மத்திய அரசு ஊழியர்களுக்கான நிலுவைத் தொகையையும்கூட 2016–2017 ஆம் ஆண்டிலேயே வழங்கிட மத்திய அரசு உத்தேசித்துள்ளது. ஆனால், மத்திய அரசு அறிவித்த பின்பு, குழு அமைத்த பின்பு, அந்த முடிவு தெரிந்த பின்புதான், குழு அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளை அளிப்பதாக நீங்கள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தெரிவித்துள்ளீர்கள். மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு 1–1–2016 ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தவிருக்கிறது. மாநில அரசு ஊழியர்களுக்கு ஏற்கெனவே நிறைய ஊதிய முரண்பாடுகள் உள்ளதால், உடனடியாக அலுவலர்கள் குழுவினை அமைத்து, எல்லா பரிந்துரைகளையும் முன்கூட்டியே தயார் செய்துகொண்டு, இந்த நிதியாண்டிலேயே அறிவிப்பு வெளியிட வேண்டுமென ஒட்டுமொத்த ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் சங்கங்களின் சார்பாக இன்றைக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை இந்த அரசு உடனடியாகச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு, பழைய ஓய்வூதியத் திட்டத்தைத் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்திட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. 26–2–2016 அன்று அமைக்கப்பட்ட இக்குழுவின் பணிக் காலம் நான்கு மாதங்கள் ஆகும். இக்குழுவின் முதல் கூட்டம் 28–3–2016 அன்று நடைபெற்றது. இக்குழுவில் இடம் பெற்றுள்ள சென்னை பொருளியல் கல்வி நிறுவன பேராசிரியர்கள் திருவாளர்கள் கே.வி. பார்த்தசாரதி மற்றும் லலிதா சுப்பிரமணியம், இக்குழுவில் தங்களால் பணியாற்றிட இயலாது என தெரிவித்துள்ளனர். இவ்விரு உறுப்பினர்களுக்குப் பதிலாக டாக்டர் பிரிஜேஷ் சி. புரோஹித், சென்னை பொருளியல் கல்வி நிறுவன பேராசிரியரை உறுப்பினராகச் சேர்த்திடவும், குழுவின் பணிக் காலத்தை 25–6–2016 முதல் மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வல்லுநர் குழு தனது முதல் கூட்டத்தில் ஓய்வூதியம் குறித்த செலவினை மதிப்பீடு செய்ய ஏதுவாக, ஓய்வூதியம் குறித்த புள்ளிவிவரங்களை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை தயாரித்திட முடிவு செய்தது. சென்னை பொருளியல் கல்வி நிறுவனம்மூலம் இப்பணி நடைபெற்று வருகிறது. ஆய்வு அறிக்கையினைப் பெற்று, அதனை ஆராய்ந்து, அதனடிப்படையில் வல்லுநர் குழு தனது மேல் நடவடிக்கையைத் தொடர்ந்திடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** தமிழகத்தைப் பொறுத்தவரையில், வருவாய் குறைவதற்கான முக்கிய காரணங்கள் என்று பார்த்தால், அரசுக்கு அதிக வருவாய் தரும் வணிக வரித் துறையில் 50 சதவிகிதப் பணியிடங்கள் காலியாக இருப்பதாக அறிகிறேன். நிலுவை வரி வசூலித்தல், வரி ஏய்ப்பைத் தடுத்தல் ஆகியவற்றில் அரசு கவனம் செலுத்தவில்லை. மாநிலத்தில் கடந்த 5 ஆண்டுகளில் பெரிய அளவில் வர்த்தகம் மேம்படவில்லை. தொழில் நிறுவனங்களுக்கு அரசு ஊக்கம் அளிக்கவில்லை. வரி விதிப்பு நடைமுறையில் தெளிவான நிலைப்பாடு எடுக்கவில்லை. ஒற்றைச் சாளர முறையில் தொழில் அனுமதி என அறிவிக்கப்பட்டுள்ளதே தவிர, அது செயல்பாட்டுக்கு வரவில்லை. ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் முதலீட்டாளர்களுக்கு அளிக்கும் சலுகைபோல, தமிழகத்தில் வழங்கப்படவில்லை. வேளாண் உற்பத்தியிலும் கவனம் செலுத்தப்படவில்லை. வரி வசூலில் செய்துள்ள குளறுபடிகளை அரசு களைய முன்வர வேண்டும். இன்று தமிழக மக்கள்மீது கடன் சுமை ஏற இதுவே காரணமாக உள்ளது. வரி வசூல் கடுமையாக சரிவடைந்துள்ளது. குறிப்பாக, தமிழகத்தின் ஆண்டு வருவாய் வளர்ச்சி 2010–2011–ல் ரூ.31,117 கோடி, 25.37 சதவிகிதம், 2011–2012–ல் ரூ.39,545 கோடி, 27.09 சதவிகிதம், 2012–2013–ல் ரூ.47,885 கோடி, 21.09 சதவிகிதம், 2013–2014–ல் 56,851 கோடி, 18.72 சதவிகிதம், 2014–2015–ல் ரூ.60,314 கோடி, 6.26 சதவிகிதம், 2015–2016–ல் 61,709 கோடி, 2.31 சதவிகிதம். அதே நேரத்தில், அரசுக்கு அதிகரிக்கும் கடன் சுமை, ஆண்டுக்கு, 2011–2012–ல் ரூ.1 இலட்சத்து 3 ஆயிரம் கோடி, 2012–2013–ல் ரூ.1 இலட்சத்து 20 ஆயிரம் கோடி, 2013–2014–ல் ரூ.1 இலட்சத்து 40 ஆயிரம் கோடி, 2014–2015–ல் ரூ.1 இலட்சத்து 78 ஆயிரம் கோடி, இந்த நிதியாண்டில், வருகின்ற 31–3–2017–ல் ரூ.2 இலட்சத்து 52 ஆயிரம் கோடியாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதனுடன் மின் வாரியம் உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்கள் பெற்றுள்ள கடனும் சேரும்போது, கடன் அளவு இரண்டு மடங்காக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக அரசுக்கு வரி வருவாய் 70 சதவிகிதம், வணிக வரியின் மூலமாகக் கிடைக்கிறது. 2015–2016 ஆம் ஆண்டில் 72 ஆயிரத்து 68 கோடி ரூபாய் வரி வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், பிப்ரவரி, 2016 வரை 50,100 கோடி

ரூபாயே கிடைத்தது. இதனால் மார்ச் மாதத்தில் 22 ஆயிரம் கோடி ரூபாய் வரி வசூலிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. இதனால் முன்கூட்டியே வரி கட்டும்படி வணிகர்களுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது. அப்படிச் செய்தும், வரி வசூல் ரூ.61,709 கோடிதான் கிடைத்துள்ளது. இது இலக்கைவிட சுமார் 10 ஆயிரத்து 359 கோடி ரூபாய் குறைவு.

முற்பகல் 10—50

வரி வளர்ச்சி விகிதம் 11.6 சதவிகிதம் வரை உயருமென்று எதிர்பார்த்தாலும், 2.3 சதவிகிதமே இன்றைக்கு உயர்ந்துள்ளது. 2011—2012—ல் 27 சதவிகிதமாக இருந்த வருவாய் வளர்ச்சி, படிப்படியாக சரிந்து 2.3 சதவிகிதமாகக் குறைந்து வந்துள்ளது. முந்தைய 4 ஆண்டுகளில் 20,000 கோடி ரூபாய் அளவிற்கு வரி வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டுள்ளார்கள். இந்நிலையில், 2015—2016—ல் மட்டும் வணிக வரிமூலம் வரவேண்டிய வருவாயில் 10,000 கோடி ரூபாய் மற்றும் பத்திரப் பதிவு, வாகன வரி வசூல் என்ற பிறவகைகளில் வரவேண்டிய வருவாயில் 1,900 கோடி ரூபாய் வரையிலும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே தற்போது, 31,870 கோடி ரூபாய் நிதி நெருக்கடியில் தமிழக அரசு சிக்கியுள்ளது. மேலும், 2016—2017 ஆம் ஆண்டில் அரசின் வருவாய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், அவர் இஷ்டம்போல தனியாக ஒரு நிதிநிலை அறிக்கையை இங்கே வாசித்துக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 2011—2012 முதல் 2015—2016 வரை வரி வசூல் எவ்வாறு இருந்தது, அது படிப்படியாக உயர்ந்து வந்திருக்கிறது என்பதை நேற்றே நான் சொன்னேன். அதாவது, இலக்கை நாம் எட்ட முடியவில்லை. இலக்கை எட்ட முடியாததற்குக் காரணம், உலகளவில் இருக்கின்ற பொருளாதார மந்த சூழ்நிலை இந்தியாவைப் பெரிதும் பாதித்திருக்கிறது. இந்தியாவின் அங்கமாக இருக்கிற நம்முடைய தமிழ்நாட்டிலும் அதன் பாதிப்பு இருக்கிறது. அதன் காரணமாக நாம் இலக்கை எட்ட முடியவில்லை. ஒவ்வோர் ஆண்டும் 15 சதவிகிதம் என்று

நாம் இலக்கு நிர்ணயிக்கிறோம். ஆனால், அந்த 15 சதவிகித இலக்கை எட்டுவதற்கு முடியும் அல்லது முடியாது என்பதற்குக் காரணம், ஏற்கெனவே இருக்கின்ற average வரி வசூலில், நமக்கு வர வேண்டிய வரி வசூலில் எந்தக் குறைபாடும் இல்லை. அதைத்தான் நேற்று நான் சொன்னேன். 2011–2012–ல் 59,517 கோடி. 2012–2013–ல் 71,254 கோடி, 2013–2014–ல் 73,718 கோடி, 2014–2015–ல் 78,656 கோடி. முதல்நிலைக் கணக்குகளின்படி 2015–2016–ல் 80,476 கோடி. ஆக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த 2011–2012–ல் 59 ஆயிரம் கோடியாக இருந்தது, சென்ற வருடம், 2015–2016–ல் அது 80 ஆயிரம் கோடியாக உயர்ந்திருக்கிறது. வரி வசூல் படிப்படியாக உயர்ந்திருக்கிறது. வரி வருவாய்த் துறையினர் சீராக வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஒவ்வோராண்டும் மத்திய அரசாக இருந்தாலும் சரி, எந்தவொரு மாநில அரசாக இருந்தாலும் சரி, இருக்கின்ற பொருளாதார சூழ்நிலைக்கேற்ப வரி இலக்கு 10%, 15%, 20% வரை உயரும் என்று எதிர்பார்க்கப்பட்டு, இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. அந்த இலக்கிலிருந்து சரிவு ஏற்பட்டதன் காரணமாகத்தான் வரி வருவாய் குறைந்தது என்பதை நான் நேற்றே விளக்கமாகச் சொன்னேன், இன்றைக்கும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்களே ஒரு தனிக் கணக்கு போட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஒற்றைச் சாளர முறை சரியாகச் செயல்படவில்லை என்று சொன்னார்கள். ஆந்திராவிலும், தெலுங்கானாவிலும் சரியாகச் செயல்படுகிறது என்று சொன்னார்கள். இந்தியாவிலேயே முதன்முதலாக Single Window system என்று சொல்லக்கூடிய ஒற்றைச் சாளர முறையை 1994 ஆம் ஆண்டு கொண்டு வந்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது உலக முதலீட்டாளர்கள் மாநாடு முடிந்ததற்குப் பின்னால் யாரெல்லாம் ஒப்பந்தம் போட்டிருக்கின்றார்களோ, அவர்களுக்கென்று ஒவ்வொருவருக்கும் ஒரு I.A.S., அதிகாரியை நியமித்து, மாதம் ஒருமுறை அது எந்த அடிப்படையில்

இருக்கின்றது, அது எங்கே நிற்கின்றது என்பதையெல்லாம் ஆய்வு செய்து, அதற்குண்டான அனுமதியை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆந்திராவிலும், தெலுங்கானாவிலும் 24 நாட்களுக்குள் செய்யவில்லையென்றால், அதிகாரிகளை suspend செய்வோம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னது மட்டும்தான். மாண்புமிகு அம்மா அவர்கள், 30 நாட்களில் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்து, கிட்டத்தட்ட 48 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழகம் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், ஏழையெளிய மக்களுக்கெல்லாம் வாழ்வளித்து, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றிவருகிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

*முற்பகல் 10–55*

மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், வேளாண்மை உற்பத்தி பற்றி குறிப்பிடவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த ஐந்தாண்டுகளில் வேளாண்மை உற்பத்தியில், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக, 2011–2012 ஆம் ஆண்டில் யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு 101.52 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், 2012–2013 ஆம் ஆண்டில் குறைந்தாலும், 2013–2014 ஆம் ஆண்டில் 110.03 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 2014–2015 ஆம் ஆண்டில் 127.95 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், 2015–2016 ஆம் ஆண்டில் 130.63 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும் உயர்ந்து,

(மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்திய அளவில் தமிழகம் முன்னிலையில் இருக்கின்றது. ஒவ்வோர் ஆண்டும் 147.80 இலட்சம் மெட்ரிக் டன்களை இலக்காகக் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டு வருவதுடன், இன்றைக்கு இந்திய அரசினுடைய மிக உயர்ந்த விருதான கிரிஷி கர்மான் விருதை உணவு தானிய உற்பத்திக்காக (மேசையைத் தட்டும் ஒலி) 3 தடவை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பெற்றிருக்கிறது என்று சொன்னால், அது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கே கிடைத்த மாபெரும் பெருமை, வெற்றி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மிகச் சிறந்த பத்திரிகைகளான India Today, Agriculture Today ஆகியவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஏற்பட்டுள்ள உணவு உற்பத்தியைப் பாராட்டி அதற்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகம் உணவு உற்பத்தியில் தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றது, முன்னேறிக் கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். உங்களுடைய கொறடாதானே பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** 2016–2017 ஆம் நிதியாண்டில் அரசின் வருவாய் ரூ.1,52,000 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல, 2016–2017 ஆம் நிதியாண்டில் அரசின் செலவு ரூ.1,61,000 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. அதோடு வரும் நிதியாண்டில் தமிழக அரசுக்கு நிதிப் பற்றாக்குறை ரூ.9,000 கோடி ஆக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 2001–2006 ஆம் ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியையும், அதன் பிறகு 2006–2011 ஆம் ஆண்டு வரையிலான தி.மு.க. ஆட்சியையும் ஒப்பிடும்போது 31–3–2006 அன்று அ.தி.மு.க. ஆட்சி செய்த, ஐந்தாண்டு காலங்களுக்குப் பின் தமிழக அரசின் கடன் ரூ.57,457 கோடியாக உயர்ந்தது. அதன் பின்னர் 2006 ஆம் ஆண்டு மே மாதம் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. 2011–ல் தி.மு.க. ஆட்சி முடிவடையும்போது அரசின் கடன் ரூ.1,01,439 கோடியாக இருந்தது. அதாவது, அ.தி.மு.க. அரசு வைத்திருந்த

கடனுக்கு மேலாக ரூ.43,952 கோடி மட்டுமே கடன் தொகை அதிகரித்து இருந்தது. அதாவது, அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டு காலம் வைத்திருந்த கடனை விட ரூ.13,475 கோடி குறைவாகவே தமிழகத்தின் கடன் தொகை இருந்தது. அந்த அளவுக்கு சிறந்த ஆட்சியை தலைவர் கலைஞர் அவர்கள் தமிழக மக்களுக்கு வழங்கினார். ஒருமுறை கூட விலைவாசி உயரவில்லை; பால், பேருந்து, மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல கூடுதலாக எந்த வரியும் விதிக்கப்படவில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சி முடியும்போது இருந்த கடனுடன் இன்றைய கடன் அளவை ஒப்பிட்டால், ஐந்தாண்டுகளில் ரூ.1,45,592 கோடி என்று அதிகரித்துள்ளது. இதனுடன் மின் வாரியத்திற்கு சுமார் ரூ.65,000 கோடி கடன் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் வைத்திருக்கக்கூடிய கடனையும் சேர்த்தால் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பெறப்பட்ட கடனைக் கழித்துவிட்டால், கிட்டத்தட்ட ரூ.3,10,592 கோடி அளவு கூடுதல் கடன் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த ஐந்தாண்டுகளில் டாஸ்மாக் வருவாயைத் தவிர வேறு எந்த வருவாயும் குறிப்பிடும் அளவுக்கு உயரவில்லை. டாஸ்மாக்மூலம் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.26,000 கோடி முதல் ரூ.30,000 கோடி வரை வருமானம் வருகிறது. ஐந்தாண்டுகளில் ரூ.1,50,000 கோடி ரூபாய் டாஸ்மாக் மூலமாக தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கிறது. 2015–2016 ஆம் ஆண்டுக்கான நிதிப் பற்றாக்குறை ரூ.31,829.19 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நிதிப் பற்றாக்குறை ரூ.36,740.11 கோடி ரூபாய் அளவுக்கு உயரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. வெளியிட்டுள்ள 2011–2012 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நிதிப் பற்றாக்குறை வெறும் ரூ.17,607.71 கோடி. ஆகவே, ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் பாதிக்கும் மேலாக நிதிப் பற்றாக்குறை உருவாகி இருக்கிறது. கடந்த 2010–2015 ஆம் ஆண்டுகளில் Budget Estimate வரையிலான காலத்தில் மிக அதிக அளவில் கடன் வாங்கியிருக்கும் மாநிலங்களில் மஹாராஷ்டிரா முதலிடத்திலே இருக்கிறது. அதிகமாகக் கடன் வாங்குகின்ற மாநிலங்களில் தமிழகம் 6–வது இடத்தில் இருந்தாலும், கடந்த ஐந்தாண்டுகளில் மற்ற மாநிலங்களைவிட மிக வேகமாக மற்றும் மிக அதிகமாகக் கடன் வாங்கிய மாநிலமாகத் தமிழகம் உள்ளது. அதிகக் கடன் வாங்கிய மகாராஷ்டிரா மாநிலம் தனது வட்டியைக் குறைத்து

வருகிறது. ஆனால், தமிழகம் கடனை வாங்கிக் குவித்து அதிக அளவு வட்டியைக் கட்டி வருகிறது. வட்டியின் அளவும் அதிகரித்தபடியே உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தின் கடன் அளவு 92 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

முற்பகல் 11–00

அதேபோல, மக்கள்தொகை அடிப்படையில் மாநிலத்திலுள்ள ஒவ்வொருவர் மீதும் உள்ள கடன் தொகை அடிப்படையில் தமிழகத்திலுள்ள தனிநபர் கடன் அதிக அளவில் உள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தின் மக்கள்தொகை 11 கோடியே 42 இலட்சம் ஆகும். தமிழகத்தின் மக்கள்தொகை 6 கோடியே 78 இலட்சம் ஆகும். இதன் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவர்மீதும் இருக்கும் கடன் அளவு 28,778 ரூபாயாக உள்ளது. இதுவே மகாராஷ்டிரா மாநிலத்தில் ஒவ்வொருவர்மீதும் இருக்கும் கடன் அளவு 29,661 ரூபாயாக உள்ளது. எனவே, இப்படிப்பட்ட கடன் சுமையிலே இன்றைக்கு தமிழகம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. எனவே, இதிலிருந்து மீள்வதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 2011 ஆம் ஆண்டு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் ஒவ்வொரு குழுக்களுக்கும் ரூ.10 இலட்சம் கடன் வழங்குவதாகவும், அந்தக் கடன் தொகையில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்கள். தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களில் எத்தனைக் குழுக்களுக்கு ரூ.10 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், அவற்றில் 25 சதவீத மானியம் எத்தனைக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தற்போது நான் அறிய விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். தமிழகத்திலுள்ள பிரதான தொழில்களில் பால் உற்பத்தித் தொழிலும் ஒன்றாகும். நாளையதினம் சேலம் மாவட்டத்தில்

பெரிய போராட்டம் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். எங்கள் தொகுதியிலும்கூட இந்தப் பிரச்சினை இருக்கிறது. அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கை என்னவென்றால், உற்பத்தி செய்யப்படும் பாலில் ஆவின் நிறுவனம் 20 சதவீத பாலை வாங்காமல் நிறுத்திவிடுகிறது. இவ்வளவுதான் பால் வாங்க வேண்டுமென்று சங்கங்கள் quota ceiling முறையை அமல்படுத்துவதுடன், பி.எம்.சி. சங்கங்களிலிருந்து பால் வாங்காமல் விட்டுவிடுகிறார்கள். எனவே, பால் உற்பத்தியாளர்கள் சங்க நிருவாகிகளை அழைத்துப் பேசி, பால் உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், பால் உற்பத்தி அதிகமாகிக் கொண்டே இருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதற்குப் பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் வாரத்தில் 5 நாட்கள் சத்துணவுடன் முட்டையையும் சேர்த்து வழங்கினார். பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு நாள்தோறும் 150 மில்லி கிராம் பால் கொடுத்தால் பாலின் தேவை அதிகமாகும். எனவே, அதையும் இந்த அரசு கவனித்து, அனைத்து பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை அழைத்துப் பேசி பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உற்பத்தி செய்கின்ற பாலை முழுவதுமாக வாங்கவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற பால் முழுவதுமாக ஒன்றியக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் பால் கொள்முதல் விலையை உயர்த்தியதன் காரணமாக, தனியார் நிறுவனங்கள் அவர்களுடைய தரமற்ற பாலை, கிராம பால்

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஊற்றுவதற்கு முற்படுகின்ற காரணத்தினால், சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அந்தத் தரமற்ற பாலை வாங்க மறுக்கின்ற காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினை எழுகின்றது. உண்மையாகவே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் உற்பத்தி செய்கின்ற பால் முழுவதையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொள்முதல் செய்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையாற்றத் தொடங்கி ஒரு மணி நேரம் ஆகப்போகிறது. (குறுக்கீடுகள்) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால் உற்பத்தி குறித்துச் சொன்னார்கள். ஏனென்றால், நாங்களும் கிராமத்திலிருந்துதான் வருகிறோம். (குறுக்கீடுகள்)

*(தி.மு.க. உறுப்பினர்கள் நின்று கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் பேசுவதை வேண்டாம் என்கிறீர்களா?

**திரு. அர. சக்கரபாணி:** எனது தொகுதியில் ஆவின் நிறுவனத்திற்குக் கொண்டு செல்கின்ற பாலை திருப்பி அனுப்பி விடுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஆய்வு செய்ய வேண்டும். எந்தப் பிரச்சினையுமே இல்லை என்று சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகப் பதிவு செய்யப்பட்ட பாலை உறுதியாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். சில தனியார்கள்... (குறுக்கீடு)

முதலில் பேச விடுங்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பால் கொள்முதல் விலையை உயர்த்தியதன் காரணமாக... (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். கிராமங்களில் தனியாருக்குக் கொடுக்கிற பால் விலை குறைவாக இருக்கிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில்... (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் பேசிக் கொண்டு இருக்கிறார். நீங்கள் குறுக்கே குறுக்கே இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? இது சரியல்ல. அப்படியெல்லாம் செய்யக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Ground–ல் என்ன நடக்கிறது என்பதை நான் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பதிவு செய்யப்பட்ட அனைத்து பால் உற்பத்தியாளர்களுடைய பால் முழுவதும் எடுக்கப்படுகிறது. (குறுக்கீடு) இவர்கள் வெளியே, தனியே பால் குறைவாக விற்பதை வாங்கி கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பால் திட்டத்திற்கு அனுப்ப வேண்டும் என்று முயற்சி செய்வதன் காரணமாக அதிகமான பாலை கொள்முதல் செய்ய முடியாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியைப் பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விரிவாக இங்கே சொல்லிவிட்டார்கள். இருந்தாலும், 2001–2006–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுது, 2006 ஆம் ஆண்டில் பால் கொள்முதல், 22 இலட்சம் லிட்டர் என்ற அளவில் அரசு கொள்முதல் செய்தது. அதற்குப் பின்னர் வந்த அரசு, 2011–ல் ஆட்சியை விட்டுச் செல்லும்பொழுது, 21 இலட்சம் லிட்டர் பால்தான் கொள்முதல் செய்தது. 5 வருடம் ஆட்சி செய்து, ஒரு இலட்சம் லிட்டர்

குறைவாகத்தான் கொள்முதல் செய்தது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பின்னால் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த கடுமையான நடவடிக்கையின் காரணமாக, 21 இலட்சம் லிட்டராக இருந்தது, கடந்த 5 ஆண்டு காலத்தில் 31 இலட்சம் லிட்டர் என்ற அளவில் கொள்முதல் உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பால் உற்பத்தியாளர்கள், கிராமத்திலுள்ள விவசாயிகள் புண்படக் கூடாது என்பதற்காக பசும்பாலுக்கு 28 ரூபாயும், எருமைமாட்டுப் பாலுக்கு 35 ரூபாயும் கொடுத்ததன் காரணமாக, இன்றைக்கு 31 இலட்சம் லிட்டர் கொள்முதல் செய்கின்ற நிலையை அடைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. ஆட்சியில் நடந்ததையும், அதற்கு பின்னால் நடந்ததையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். திரு. சக்கரபாணி, ஒரு நிமிடம் இருங்கள். தி.மு.க.–வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர், திரு. சக்கரபாணி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசி, அதற்கு நிதியமைச்சரும், பால் வளத்துறை அமைச்சரும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, மற்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று எனக்கு வாய்ப்புக் கொடுங்கள், எனக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று சொன்னால், அப்பொழுது எதிர்க்கட்சிக் கொறடா பேசிக்கொண்டிருப்பதை வேண்டாம் என்று சொல்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அவர் பேசுகிறார். அவருக்குப் பதில் சொல்லத் தெரியும். அவர் பேசுவார். (குறுக்கீடுகள்) பிறகு நீங்கள் எதற்கு குறுக்கே குறுக்கே பேசுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நிதி அமைச்சர் பேசுகிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். இங்கே பாருங்கள்

திரு. அன்பழகன், நான் உங்களை அனுமதிக்கவில்லை. இப்படி எல்லாம் செய்வது சரியில்லை. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். சபையை நடத்த வேண்டும். உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். திரு. சக்கரபாணி அவர்களிடம் ஏதாவது கேள்வி இருந்தால் பேசச் சொல்லுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அப்படி எல்லாம் வாய்ப்புத் தர முடியாது. உங்கள் உறுப்பினர் பேசும்பொழுது நான் என்ன செய்யட்டும்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த அக்கறையோடு மாண்புமிகு தி.மு.க. கொறடா அவர்கள் பால் உற்பத்தியைப் பற்றி. . . (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து நேரடியாகப் பேசிக்கொள்ளக் கூடாது. (குறுக்கீடுகள்) யார் பேசுவதாக இருந்தாலும் பேரவைத் தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டும். இப்போது திரு. சக்கரபாணி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. அன்பழகன், எனக்கு ஒரு விஷயம் தெரியவில்லை. உங்கள் கட்சியின் துணைத் தலைவர் உங்களை உட்காரச் சொல்கிறார். உங்கள் கட்சியின் கொறடா திரு. சக்கரபாணி பேசிக் கொண்டிருக்கிறார். திரு. சக்கரபாணியைப் பேச வேண்டாம் என்கிறீர்களா? (குறுக்கீடு) திரு. சக்கரபாணி பேச வேண்டாமா? (குறுக்கீடு) அப்படியென்றால் நீங்கள் உங்கள் கட்சித் தலைமையிடம் பேசி, பேசுவோர் பட்டியலில் உங்கள் பெயரைக் கொடுக்கச் சொல்லுங்கள், நான் உங்களைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். திரு. சக்கரபாணி பேசுவதை நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை,

எப்படி நான் அனுமதிப்பது? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. அன்பழகன் பேச வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், பேசுவோர் பட்டியலில் அவர் பெயரைச் சேர்த்துக் கொள்ளுங்கள். நான் அவரைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் திரு. சக்கரபாணி பெயரைத்தான் பேசுவோர் பட்டியலில் கொடுத்திருக்கிறீர்கள். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசும்போது, தி.மு.க. உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து, எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள் என்றால் நான் எப்படிக் கொடுக்க முடியும்? (குறுக்கீடுகள்) அப்படியென்றால் திரு. சக்கரபாணி பேசுவதை நிறுத்திவிடட்டுமா? (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி பேசுவதை நிறுத்திவிட்டு, திரு. அன்பழகனுக்கு வாய்ப்புத் தரலாமா? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசுவதற்கு வாய்ப்பு கேட்கவில்லை. ஏதோ ஒரு Point of order தான் கேட்கிறார். (குறுக்கீடுகள்) A Member can raise a Point of order at any time. அதை சபாநாயகர் கேட்டுவிட்டு Point of order என்றால் எடுத்துக்கொள்ளலாம். Point of order இல்லையென்றால் தள்ளிவிடலாம். ஆகையால், அருள்கூர்ந்து திரு. அன்பழகனுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அதுமாதிரியெல்லாம் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நீங்கள் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், இங்கே பாருங்கள். நான் உங்களைப் பேச அழைக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதற்கு மேல் நீங்கள் பேசினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். உங்களுடைய கட்சித் தலைவர்கள் சொல்வதற்கும் நீங்கள் கட்டுப்படமாட்டேன் என்கிறீர்கள், விதிகளின்படியும் நடந்துகொள்ளமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இதற்குமேலும் பேசினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்று உங்களை நான் எச்சரிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குமேல் என்னால் ஒன்றும் சொல்ல முடியாது. இதற்குமேல் என்னால் ஒன்றும்

சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை ஆட்சியிலிருந்தபோது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அன்றையதினம் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தார். இதேபோல் ஒரு பிரச்சினை வந்தது. பிரச்சினை வந்தபோது அமைச்சர் எழுந்து சொன்ன பதில், "ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுமதி தர முடியாது. யார் பேசுகிறாரோ அந்த உறுப்பினரிடத்திலே மற்ற உறுப்பினர்கள் எழுதிக் கொடுத்து, பேசுபவர்தான் கேள்வி கேட்க வேண்டுமேயொழிய அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுமதி தர முடியாது" என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சராக அன்றையதினம் இருந்தவர் சொல்லியிருக்கின்றார். இன்றையதினம் எந்த அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு கேட்கின்றீர்கள்? எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. சக்கரபாணி, நீங்கள் பேசுகிறீர்களா? இல்லை, திரு. அன்பழகன் பேசுகிறாரா? (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அப்படியெல்லாம் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) எதிர்க் கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அமைச்சர் அவர்கள் சொல்வது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால், அமைச்சர் correct ஆக ஞாபகத்தோடு சொல்கிறார். அமைச்சர், உண்மைக்கு மாறாகச் சொல்லமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்)

உண்மைக்கு மாறாகச் சொல்லமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) அமைச்சர் அப்போது மிகவும் பதவுசாக முன்னால் உட்கார்ந்திருந்தீர்கள். இப்போது மாதிரியில்லை. (குறுக்கீடுகள்) எனக்கு அப்போதே தெரியும். இப்போது முன்னால் வந்திருக்கிறீர்கள். இப்போது அதுவல்ல பிரச்சினை. சில நேரங்களிலே விவாதம் heat ஆகிறபோது கொஞ்சம் jovial ஆக விவாதம் அமைய ஒரு point of order கேட்பது வழக்கம். நீங்களும் அதற்கு விடவேண்டும். நாங்களும் கேட்டுக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிறீர்கள். உங்கள் கஷ்டத்தைப் பார்த்தால் எங்களுக்கு எப்படி இருக்கிறது தெரியுமா? மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) விடுங்கள். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சியிலே யாராவது பேசிக்கொண்டிருந்து, ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று நீங்கள் என்னைக் கேட்டிருந்தால் நான் consider செய்யலாம். உங்கள் கட்சியைச் சேர்ந்த கொறடாதான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார். இப்போது அவருக்கே Point of order கேட்டால், நான் யாருக்கு Point of order தருவது? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இதுவெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்ன?

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுரையில்தான் clarification கேட்க எங்கள் உறுப்பினர் விரும்புகிறார். எனவே, தயவுகூர்ந்து ஒரே ஒரு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார் என்று நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது உங்கள் கொறடா பேசாமல், வேறு யாராவது பேசியிருந்தால் அப்படி வாய்ப்புக் கொடுங்கள் என்று நீங்கள் கேட்டால்கூட நான் consider செய்ய முடியும். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியினுடைய கொறடா அதாவது, பொறுப்பில் இருக்கிற எதிர்க்கட்சிக் கொறடா பேசுகிறார். எதிர்க்கட்சிக் கொறடா பேசுவதற்கு மீறி என்னிடம் Point of order கேட்டால், நான் எப்படி இந்தச் சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இதையே ஒரு முன்னுதாரணமாக வைத்துக்கொண்டு... (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள்

உட்காருங்கள். இதையே ஒரு முன்னுதாரணமாக வைத்துக் கொண்டு நாளைக்கு எல்லோரும் கேட்டால். நான் எப்படி சபையை நடத்த முடியும்? (குறுக்கீடுகள்) எனக்காகச் சொன்னதற்கு மிகவும் நன்றி. எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு ரொம்ப நன்றி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. மிக்க நன்றி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இங்கே பாருங்கள், எதிர்க்கட்சித் தலைவர் மீதும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மீதும், இந்த அவையிலே இருக்கிற ஒவ்வோர் உறுப்பினர்மீதும் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. அந்த மரியாதையில் எல்லாம் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், சபையை நான் நடத்த வேண்டும். சபையை நடத்துவதற்கு நீங்கள் எனக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். நான் சில விதிமுறைகளை வைத்துத்தான் இந்தச் சபையை நடத்த முடியும். இப்படியெல்லாம் எல்லோரும் வாய்ப்புக் கேட்டால், எல்லோருக்கும் அப்படி வாய்ப்புக் கொடுத்தால் சபையை நடத்த முடியாது. தயவுசெய்து நீங்கள் ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள்மீது மரியாதை இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மரியாதை இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். உங்கள்மீது மிகுந்த மரியாதை இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் சொல்வதற்கெல்லாம்... .(குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இங்கே பாருங்கள் (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியாதது இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இந்த அவையிலேயே நீங்கள் நிறைய experience உள்ள உறுப்பினர். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் raise செய்யலாம். நீங்கள் raise செய்கிற Point of order–ஐ சபாநாயகர் ஏற்றுக்கொள்ள வேண்டும். பேரவைத் தலைவராகிய நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, ஏற்றுக்கொண்டால்தான் நான் அனுமதிப்பேன் நான் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், உங்களை உட்காருங்கள் என்று சொல்லிவிடுவேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. Any member can raise a Point of order if Speaker permits. (குறுக்கீடுகள்) நான் உங்களை permit செய்யவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். தயவுசெய்து இதில் விவாதம்

வேண்டாம். எதிர்க்கட்சிக் கொறடா பேசட்டும். நிறைய நேரமாகிவிட்டது. எதிர்க்கட்சிக் கொறடா பேசி நல்லபடியாக முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசிக் கொண்டிருக்கிறார். திரு. அன்பழகன் தகராறு செய்வதற்காகவே சபைக்கு வருகிறார். நான் என்ன செய்ய முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிக் கொறடா நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். உங்கள்மீது நான் மரியாதை வைத்திருக்கிறேன், அதுவெல்லாம் வேறு. ஆனால், திரு. அன்பழகன் நடந்துகொள்கிற முறை வித்தியாசமானது. அதை நீங்கள்தான் தனியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், இதற்குமேல் நீங்கள் பேசினால் நான் நடவடிக்கை எடுப்பேன். மாண்புமிகு உறுப்பினர், திரு. அர. சக்கரபாணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசவில்லையென்றால், அடுத்த உறுப்பினரை பேச அழைக்க வேண்டியிருக்கும்.

*முற்பகல் 11–20*

**திரு. அர. சக்கரபாணி:** அ.தி.மு.க. ஆட்சியில் 2001 முதல் 2006 வரை விவசாயிகளுக்கு சுய நிதித் திட்டத்தின்கீழ் 2,20,000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. அன்றைக்கு ஒரு குதிரைத் திறனுக்கு-horse power ரூ.250 கட்டி வந்தனர். தலைவர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு அ.தி.மு.க. ஆட்சியில் சுய நிதித் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு பெற்ற சுமார் 2,20,000 விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைத் தந்தார். அதேபோன்று, தற்சமயம் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2011 முதல் 2016 வரை விவசாயிகள் ஒரு யூனிட்டுக்கு ரூ.3.50 செலுத்தக்கூடிய கமர்ஷியல் சர்வீஸ் இணைப்புத் திட்டத்தின்கீழ் சுமார் 70,000 பேர் தமிழகத்திலே மின் இணைப்பு பெற்றிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். தற்சமயம் 2000 ஆம் ஆண்டுக்கான பதிவு மூப்பு அடிப்படையில்தான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. அதுபோன்று சுய நிதித் திட்டத்தில் ரூ.25,000/–, ரூ.50,000/– பணம் கட்டியிருக்கிறவர்களுக்கு 2009 ஆம் ஆண்டு பதிவு மூப்பு அடிப்படையில்தான் இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத்

துறை அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புவது என்னவென்றால், இன்றைக்கு தமிழகம் மின் மிகை மாநிலமாகிவிட்டது. மின்சாரத்தை வேறு மாநிலங்களுக்கு நாம் விற்பனை செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அதனால் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், சுய நிதித் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு பெற்றிருப்பவர்களும் சரி, அதேமாதிரி கமர்ஷியல் சர்வீஸ் இணைப்புத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு பெற்றிருக்கின்ற எல்லா விவசாயிகளுக்கும், தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே 2,20,000 பேருக்கு இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டது. நீங்களும் இன்றைக்கு கமர்ஷியல் சர்வீஸ் இணைப்புத் திட்டத்தில் மின் இணைப்பு கொடுத்திருக்கிறீர்கள். இப்பொழுது 2000 ஆம் ஆண்டு பதிவு மூப்பின் அடிப்படையில் மின் இணைப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். யார் மின்சார இணைப்பு கேட்டாலும், உடனடியாக இலவச மின்சாரம் வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 2,20,000 பேருக்கு இலவச மின்சாரம் கொடுத்தோம் என்று சொல்லியிருக்கின்றார். 2010 ஆம் ஆண்டு 2,20,000 பேருக்கு இலவச மின்சாரம் கொடுப்போம் என்று ஒரு ஆணையைப் பிறப்பித்தார்கள். 2011 வரை எத்தனை இலவச மின்சார இணைப்பு கொடுத்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? 56,000 பேருக்கு மட்டும்தான் இலவச மின்சாரம் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2,20,000 பேருக்கு இலவச மின்சாரம் கொடுக்கவேயில்லை. 2000 ஆம் ஆண்டு அடிப்படையில்தான் இப்பொழுது சீனியாரிட்டி சென்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய 5 ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கடுமையான முயற்சியின் காரணமாக மின் மிகை மாநிலமாக தமிழகத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு விவசாய மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் ஒரு

இலட்சம் ரூபாயிலிருந்து ஒன்றரை இலட்சம் ரூபாய் அளவிற்கு மின் வாரியத்திற்குச் செலவாகும். எனவே செலவு, மின்சாரத் தேவை போன்றவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்துத்தான், செய்ய முடியுமேயொழிய, எடுத்தவுடன் மின் மிகை மாநிலமாகியிருக்கிறது என்று அனைவருக்கும் மின் இணைப்பு கொடுக்க முடியாது. உங்களைவிட மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயத்திற்கு அதிகமான மின் இணைப்புகளைக் கொடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, உரையை முடியுங்கள். சற்று எனக்கு ஒத்துழைப்பு கொடுத்து சீக்கிரம் உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 1 மணி 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

**திரு. அர. சக்கரபாணி:** *நீங்களும் விவசாயிதான். சட்டமன்றப் பேரவையில் இருக்கின்ற 231 மாண்புமிகு உறுப்பினர்களில் 90 சதவிகித உறுப்பினர்கள் விவசாயிகள்தான்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் பேச ஆரம்பித்து 1 மணி 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு பாயிண்ட் மட்டும் பேசி உரையை முடியுங்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *சற்று பொறுங்கள். உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் விவசாயக் குடும்பத்திலிருந்துதான் வந்திருக்கிறார்கள். விவசாயிகளுடைய நலனைக் கருதி, விவசாய உற்பத்தியில் பசுமைப் புரட்சியை உருவாக்குவோம், உற்பத்தியை 2 மடங்கு, 3 மடங்கு பெருக்குவோம் என்று சொல்கிறீர்கள். அதனால் விவசாயிகள் நலன் கருதி கமர்ஷியல் சர்வீஸ் மின் இணைப்பு வாங்கியிருக்கிற அனைத்து விவசாயிகளுக்கும் 2000 ஆம் ஆண்டு மற்றும் 2009 ஆம் ஆண்டு பதிவு மூப்பு அடிப்படையில் உடனடியாக இலவச மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். விவசாய உற்பத்தியைப் பெருக்குவோம், பெருக்குவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயத்தில் உங்களுடைய ஆட்சிக் காலத்தைவிட, கடுமையான வறட்சியிருந்தபோதுகூட அதிக விளைச்சலை கண்டது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவதாக, மாண்புமிகு அம்மா அவர்கள், விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் 12 மணி நேரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 38 ஆம் பக்கத்தில், இரண்டாவது பத்தியில் மாநகரப் போக்குவரத்து கழகப் பேருந்துகளில் கட்டணமின்றிப் பயணிப்பதற்காக மூத்தக் குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டைத் திட்டத்தின்கீழ் இதுவரை 2,49,000 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கியிருப்பதாகக் கூறியுள்ளீர்கள். ஆனால், உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே, 2011–ல் முதியோர் மற்றும் ஆதரவற்றோர் சிறப்புத் திட்டத்தில் 58 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் உள்ளூர் மற்றும் அரசுப் பேருந்துகளிலே பக்கத்து நகரங்கள், கிராமங்களுக்குச் சென்று வர பஸ் பாஸ் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, இத்துடன் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 1 மணி 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. அர. சக்கரபாணி:** நான் வேறொன்றையும் சொல்லவில்லை. (குறுக்கீடு) இன்னும் இரண்டு கருத்துகளை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** கிராமங்களுக்குச் சென்று வர இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என்று கூறியுள்ளீர்கள். ஆனால்,

இதுவரை தமிழகத்திலே கிராமப்புறங்களிலே 58 வயது நிரம்பியவர்கள் யாருமே இல்லையா? எனவே, அவர்களுக்கும் அந்த இலவச பஸ் பாஸ் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முற்பகல் 11–25

சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய பகுதிகளில் சிங்கப்பூரில் உள்ளபடி மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று உங்களுடைய 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே அறிவித்துள்ளீர்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் இதுசம்பந்தமாக ஏன் அறிவிக்கவில்லை என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சுத்திகரிக்கப்பட்ட தூய குடிநீர்த் திட்டம். வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தூய்மையான குடிநீர் இலவசமாக வழங்கப்படும் என்று 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இதன்மூலம் 5 இலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு புதிதாக உருவாக்கப்படும். புதிதாக 1 இலட்சம் பேருக்கு போக்குவரத்துத் துறையில் வேலைவாய்ப்பு கிடைக்கும். இதன்மூலம் 20 ஆயிரம் தொழிற்சாலைகளை உருவாக்க வாய்ப்பு ஏற்படும் என்று சொன்னீர்களே, அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதை இந்த நேரத்திலே நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** அதேபோல, ஆசிரியர் தகுதித் தேர்வுகள் பல ஆண்டுக் காலமாக நடத்தப்பட்டு வருகின்ற சூழ்நிலையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, போதும். அடுத்த வாய்ப்பில் நிறைய பேசலாம். (குறுக்கீடு) உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** உரையை முடித்து விடுகிறேன். ஆசிரியர் தகுதித் தேர்வு பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட நிலையில்,

பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால், மாணவர்களின் கல்வித் தரம் குறைந்துள்ளது. ஐந்தாண்டுகளுக்குள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டிய நிலையில், கடந்த ஐந்தாண்டுகளில் இரண்டு முறை மட்டுமே ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெற்றதால், தேர்வு எழுதாமல் பணி இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்திலுள்ள வழக்கினை முடித்து, உடனடியான நடவடிக்கையை நீங்கள் துரிதமாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அர. சக்கரபாணி, போதும் விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, இதோடு உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்க முடியாது. கேட்டாலும், நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை, பக்கம் 69–ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 26.88 இலட்சம் குழந்தைகளும், நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 28.17 இலட்சம் குழந்தைகளும் மதிய உணவை உண்டு பயனடைந்து வருகின்றனர் எனவும், சத்துணவுத் திட்டத்திற்காக ரூ.1,644.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் குழந்தைகளுக்காக அறிமுகப்படுத்திய மதிய உணவுத் திட்டத்தை மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். 8 கோடி தமிழர்களின் இதயம் நிறைந்த டாக்டர் கலைஞர் அவர்கள் குழந்தைகளுக்கு

*புரதச் சத்து வேண்டுமென்பதற்காக வாரத்தில் 5 முறை முட்டை வழங்கினார்கள். ***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) நான் அதை அனுமதிக்காதபோது நீங்கள் இஷ்டம்போல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, நீங்கள் அதுசம்பந்தமாகப் பேசுவதற்கு நான் உங்களுக்கு அனுமதி தரவில்லை. (குறுக்கீடு) நீங்கள் பேச வேண்டுமென்று நான் உங்களிடத்தில் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் ஆதாரம் கொடுத்தாலும், நான் அனுமதி வழங்கிய பின்னர்தான் நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கொடுத்தீர்கள், நான் அதை சரியாகப் பார்க்க முடியவில்லை. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். இன்று காலை 9–56 மணிக்கு, என்னுடைய அறைக்கு, நீங்கள்கூட கொண்டுவந்து தரவில்லை, உங்களுடைய உறுப்பினர்தான் கொண்டு வந்து கொடுத்தார். அதை நான் சரிபார்க்க வேண்டாமா? (குறுக்கீடு) நான் அவைக்கு வருகின்ற நேரத்தில் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, உங்கள் இஷ்டத்திற்குப் பேசினால் எப்படி? (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) நான் உங்களுக்குப் பேச அனுமதி தரவில்லை. (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) இதுசம்பந்தமாக நீங்கள் பேசுவதாக இருந்தால் வேண்டாம். வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடு) இவ்வளவு நேரம் நன்றாகத்தான் பேசினீர்கள். கடைசியாக எதற்கு வம்பு? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) திரு. வேலு, நீங்கள் உங்கள் இடத்திற்குச் சென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு, நீங்கள் பேசுவதாக இருந்தால் உங்கள் இடத்தில் இருந்துதான் பேச வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*முற்பகல் 11–30*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பிரச்சினையைப்பற்றி எங்களுடைய உறுப்பினர் கொறடா திரு. சக்கரபாணி அவர்கள் ஆதாரத்தை

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கையிலே வைத்துக்கொண்டுதான் பேசுகின்றார். உங்களிடத்தில் ஏற்கெனவே தகவலையும் தெரிவித்திருக்கிறார். நீங்கள் அனுமதித்திருக்கிறீர்களா, அனுமதிக்கவில்லையா என்பது வேறு பிரச்சினை. ஆனால், அரசினுடைய ஆணையை கையிலே வைத்துக் கொண்டிருக்கிறார். அதை வைத்துக்கொண்டுதான் அவர் தன்னுடைய உரையிலே அதைக் குறிப்பிட்டுச் சொல்கிறார். ஏற்கெனவே இதே அவையில் மேட்டூர் அரசு மருத்துவமனை குறித்துப் பேசியபோது, நான் ஒரு பிரச்சினையைச் சொன்னேன். அதுமாதிரி எங்கும் நடைபெறவில்லை என்று சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருவள்ளூரில் இருக்கக்கூடிய மருத்துவமனை என்று நான் குறிப்பிட்டுச் சொன்னவுடன், விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே, இது உண்மையா, இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய முயற்சியிலே இறங்க வேண்டுமேயொழிய, இதிலே ஆதாரம் இருக்கிறதா, இல்லையா என்பதைக் கேட்க வேண்டிய அவசியமே வரவில்லை. எனவே, அவர் பேசுவதற்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதிலே எனக்கு ஒன்றும் (குறுக்கீடுகள்)....—நான் விவரம் சொல்கிறேன். நான் 9-56–க்கு அவைக்கு வரும்பொழுதுதான் கொண்டு வந்து கொடுத்தார்கள். நான் அதைப் படிக்கக்கூட இல்லை. நான் அனுமதியும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதது அல்ல. நீங்கள் கொடுத்த ஆணையை நான் முழுமையாகப் படித்து, அமைச்சர் அவர்களிடத்திலே விளக்கம் கேட்டு... (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை. இப்பொழுது என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்து, அது உண்மையாக இருக்கும்பட்சத்தில் நான் அவைக் குறிப்பில் அதை ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அமைச்சரிடம் கொடுத்து விளக்கம் வாங்கிவிட்டு, சரியாக இருந்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், அவர்களையும் பேச விடுகிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பேசச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, தவறான ruling இல்லை. நான் மாண்புமிகு அமைச்சர்

*அவர்களிடம் இன்னும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பேசலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் பேசுகிறேன்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர், ஒரு நிமிடம் இருங்கள். நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். தவறாகச் சொல்லவில்லை. காலை 9.56–க்கு என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள். நான் அதை படிக்கக்கூட இல்லை. (குறுக்கீடுகள்) 9–56–க்குக் கொடுத்தால் நான் எப்படி படிக்க முடியும்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்கிறதா? (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ ஓர் ஆணையை இங்கே தந்து. . . (குறுக்கீடுகள்) சரி, கொடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, மாண்புமிகு நிதி அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இருக்கட்டும். அது தவறாக இருக்கும்பட்சத்தில் நான் அதை நீக்குகிறேன்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே பல்வேறு விதமான கருத்துகளைப் பதிய வைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்து விடுகிறேன். நான் பேசி முடித்த பிறகு வாய்ப்புத் தரப்படும். என்னைப் பேச விடுங்கள். நான் பேசி முடித்து விடுகிறேன். பிறகு எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்புத் தருவார்கள். அந்தக் கருத்திலே மாறுபாடு இருந்தால், எதிர்க் கட்சித் தலைவர் பேசட்டும். இந்த வருட திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, 28.17 இலட்சம் குழந்தைகளுக்கு உறுதியாக சத்துணவு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக 1,644 கோடி. . . (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? பேச விடுங்கள். குறுக்கீடு செய்து கொண்டிருந்தால், யாருமே பேச*

முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். தயவுசெய்து இதுபோன்று செய்யாதீர்கள். நான் பேசுவதை முழுமையாகக் கேட்டுவிட்டு, அதிலே ஏதாவது தவறு இருந்தால் அவர் பேசட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் உரையை முடிக்கும்போது ஒரு குற்றச்சாட்டைப் பதிய வைப்பதற்கு முயற்சி செய்தார். அதற்கான பதிலைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு) நீங்கள் கடைசியில் முடிக்கும்போது என்ன சொன்னீர்கள்? அவர் சொன்னது உட்பட, நான் சொல்லப்போவது உட்பட, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

*முற்பகல் 11–35*

*நீங்கள் என்ன சொன்னீர்கள்? *** அது தவறு. எனவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஆணையில் அப்படியா போட்டிருக்கிறது? (குறுக்கீடுகள்) அதைக் கொடுங்கள் பார்ப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) நான் தெளிவாக முன்பே சொல்லிவிட்டேன். என்னிடம் முன்பே கொடுத்திருந்தால், நான் அதைப் படித்துப் பார்த்து, மாண்புமிகு அமைச்சரிடம் விளக்கம் கேட்டு, அதற்கு அனுமதி கொடுப்பதா, இல்லையா என்பதை முடிவு செய்திருப்பேன். (குறுக்கீடுகள்) ஆனால், போதுமான நேரம் எனக்குக் கிடைக்கவில்லை. இப்போது நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இதுகுறித்த தீர்ப்பை, நான் பின்னர் தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள். (குறுக்கீடுகள்) இதுகுறித்து நான் பின்னர் தீர்ப்பு சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் தெரிவிப்பது என்னவென்றால், நடைமுறையில் இருக்கின்ற எந்தத் திட்டத்தையும் அரசு கைவிடாது என்பதை இங்கே தெளிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*** நீங்கள் உங்கள் வசதிக்குத் தகுந்தவாறு இங்கே பேசுவது நியாமில்லை. 28 இலட்சம் குழந்தைகளுக்கும் உறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சத்துணவு வழங்கும் என்பதனை இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். இதுகுறித்து நான் பின்னர் தீர்ப்பு சொல்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுகுறித்து பின்னர் பேசலாம், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், இதற்குமேல் இதுகுறித்துப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, அதையெல்லாம் இங்கு படிக்க விட முடியாது. (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் மீண்டும், மீண்டும் தெளிவாகச் சொல்லிவிட்டேன். அரசாணை என்பது, இங்கே Secretariat–ல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு வருவதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) Collector போட்ட ஆணை என்று எனக்கு ஒரு copy கொடுத்திருக்கிறீர்கள். 9.56 மணிக்கு என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். அதை நான் படிக்கவில்லை. அதுகுறித்து நீங்கள் இப்போது raise செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் raise செய்ய முடியாது. அது அவைக் குறிப்புக்கு வராது. இதுகுறித்து, ஏதாவது இருந்தால், நான் படித்துப் பார்த்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விளக்கம் கேட்டு, அதற்குரிய தீர்ப்பினை நான் பின்னர் வழங்குகிறேன். அதுவரை இந்தப் பிரச்சினை எதுவும் அவைக் குறிப்பிற்கு வராது என்பதை என்னுடைய தீர்ப்பாக தற்போது தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பில் பதிவாகாது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளத்தில் வெண்மை, வாக்கினில் இனிமை, இதயமெல்லாம் தாய்மை, சொல்வதெல்லாம் வாய்மை, அதுவே நேர்மையின் அடையாளம் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறாவது முறையாக முத்தமிழ்நாட்டின் முதல்வராகி, முதலிடம் நோக்கி தமிழகத்தை முன்னடத்திச் செல்லும் முத்தான முதல்வர் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய தேசத்தின் இரும்புத் தாய், நம் இதயத்தின் கரும்புத் தாய். அம்மாவின் புன்சிரிப்பு, பூக்களின் சிரிப்பு. அம்மாவின் திருக்கரம் கொடுத்து சிவந்தது. அம்மாவின் திருவடி திருவாலயம். அம்மாவின் சொல் எங்களுக்கு தெய்வத் திருமந்திரம்.

அம்மா! நீங்கள் தமிழரின் வாழ்வில் உப்புக்–கல்! கழகத் தொண்டர்களுக்கு நீங்கள் ஒரு மைல்–கல்! உங்கள் ஆட்சியோ வைரக் கல்! (மேசையைத் தட்டும் ஒலி) காருள்ளவரை, கடல் நீர் உள்ளவரை, நிலம் உள்ளவரை, இம்மண் உள்ளவரை, தாயின் புகழ் பாடும். உலகம் வணங்கும் முகராசி, உரிமை மீட்கும் கைராசி, உழவினைக் காத்த மகராசி, உண்மையைப் போற்றும் செயல் அரசி, உழைப்பவரை உயர்த்தும் அருளரசி, பரிவால் சிறந்த பண்பரசி, தமிழகத்தை ஆளும் தமிழ் அரசி மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு சிறப்புகளால் உயர்ந்து நிற்கும் இந்தச் சட்டப் பேரவையில், வரவு–செலவுத் திட்ட பொது விவாதத்தில் உரையாற்ற வாய்ப்பு தந்த எங்களைக் காக்கும் கடவுள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைப் பணிந்து தெரிவிக்கிறேன்.

(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

*முற்பகல் 11–40*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர் பிடித்து நாட்டுக்கு சோறு போடும் வேளாண் குடும்பத்தில் பிறந்த என்னை இந்த ஊருக்கே அறிமுகப்படுத்திய உன்னதத் தாய் நம் அம்மா. கழகத்தில் பல்வேறு பணி நிலைகளிலும் பணியாற்ற வைத்து மீண்டும் என்னை இரண்டாவது முறையாக சட்டப் பேரவை உறுப்பினராக்கி, புகழ் வாய்ந்த இந்தச் சபையில் உரை நிகழ்த்த உன்னத வாய்ப்புத் தந்த தாயின் திருவடிகளுக்கு கோடானு கோடி

நன்றிகளைப் பணிந்து தெரிவிக்கின்றேன். இந்த நல்ல நேரத்தில் அம்மாவின் சொல்லை வேத மந்திரமாக எடுத்து, என்னை வெற்றி பெற வைத்த மாசற்ற மனிதநேயம் படைத்த பூம்புகார் தொகுதியின் அத்தனை மக்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கை அட்டவணையோடு சேர்த்து 90 பக்கங்களையும் படித்துப் பார்த்தால் மக்களின் துயர் துடைக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையாக இது உள்ளது என்பதை நாம் உணர முடியும். அதிலும் குறிப்பாக கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, மக்களின் அடிப்படை வசதிகள் இவற்றைக் கருத்தில்கொண்டு, தொலைநோக்குச் சிந்தனையோடு உருவாக்கப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கை இது என்றால் அது மிகையாகாது.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்."

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப, சொல்லிய வண்ணம் செயல்படுத்தும் ஆற்றல்மிக்க தலைவர் நம் அம்மா என்பதை இந்த அறிக்கை நிரூபித்துக் காட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

100 யூனிட் மின்சாரத்திற்கு விலையில்லை என்கின்ற அம்மாவின் கையெழுத்து தமிழர்களின் தலையெழுத்தையே மாற்றியுள்ளது. 500 மதுக் கடைகள் நீக்கம் என்பதன்மூலம் இன்னொரு பெரியாராக மாண்புமிகு அம்மாவை இந்தச் சமுதாயம் பார்க்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா இலக்கிய விருது, உலகத் தமிழ்ச் சங்க விருது என்ற அறிவிப்பு குணமுள்ள மனிதர்களால் இவ்வுலகு அலங்கரிக்கப்படும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை. ஏர் பிடித்து வாழும் ஏழை விவசாயிகள் வாழ்வில் ஏற்றம்பெற அவர்கள் பெற்ற ரூ.5,780 கோடி கடன் அனைத்தும் தள்ளுபடி என்ற ஒற்றை அறிவிப்பால், ஒட்டுமொத்தத் தமிழக விவசாயிகளின் முதுகெலும்பினை நிமிர்த்தியவர் அம்மா. தற்போது தமிழகத்தில் விவசாயப் பெண்கள் பாடும் பாட்டு என்ன

தெரியுமா? பொன்ஏர் பூட்டும்போதும், புது நாத்து நடும்போதும், சொல்லும் ஒற்றை நாதம் 'அம்மா வாழ்க, அம்மா வாழ்க, அம்மாவே வாழ்க' என்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம்–ஒழுங்கு. இந்திய மாநிலங்களில் இன்று மக்கள் மனநிறைவோடும், நிம்மதியாகவும், மதக் கலவரம் இல்லாது, சாதிக் கலவரம் இல்லாது, கட்டப் பஞ்சாயத்து இல்லாது, ரவுடிகள் ராஜ்ஜியம் இல்லாது, காவல் துறையின் கண்ணியத்தோடு நடக்கும் ஆட்சி, அம்மாவின் ஆட்சி, சட்டத்தின் ஆட்சி, இதற்கு மக்கள் மனமே சாட்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவு. 'செய்யும் தொழிலை சீர்தூக்கி பார்க்கின் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை' என்ற சிறப்பிற்கு உரிய தொழில் நெசவுத் தொழில். நிலத்திலும், நீரிலும், வானிலும் உயர்ந்தது வறுமையில் மானம் ஒன்றே. அம்மானம் காக்கும் நெசவாளர்களின் தன்மானம் காத்திட, கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது கட்டணமில்லாமல் வழங்கப்படும் மின்சாரத்தை 200 யூனிட்டுகளாகவும், விசைத் தறிக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மின்சாரத்தை 750 யூனிட்டுகளாகவும் உயர்த்தி வழங்கிய ஒப்பில்லா சாதனை முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் என நெஞ்சத்து நெகிழ்வோடு நெசவாளர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலிக்குத் தங்கம். நெஞ்சம் குளிர அம்மா தந்த திட்டம், ஏராளம், தாராளம். தாலிக்கு வழங்கப்படும் தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்த்தித் தரப்படும் என்ற தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்களின் நெஞ்சம் குளிர்ந்த அறிவிப்பால், தமிழகத்துப் பெண்கள் ஒட்டுமொத்தமாய் சொல்லும் ஒற்றை வார்த்தை, பெண்களின் பாதுகாவலர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள். தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றிட ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இளைஞர்களின் எதிர்காலம் வளம் பெற வழிவகை செய்துள்ளார்கள் அம்மா.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லேப்டாப். தமிழகத்திலுள்ள மாணவ, மாணவியர்களின் இதயங்கள் இப்போது லப்டப் என்று துடிப்பதில்லை, லேப்டாப் என்றே துடிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இருவிரல் பிடித்து எழுதிய அனைத்து மாணவ, மாணவியர்களும் இன்று 10 விரல் கொண்டு கணினியில் எழுதுகிறார்கள். இதுவே கருணைத் தாயின் மேன்மைமிகு ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் துறை. 2016–2017 ஆம் ஆண்டில் 3,50,000 இலவச வீடுகள், வீட்டுமனைப் பட்டா அறிவிப்பு, வீடில்லா குடும்பங்களுக்கு அடுக்குமாடி வீடுகள், கூட்டுப் பட்டா போன்ற அறிவிப்புகள் பிற மாநிலங்களே வியக்கும் முன்னுதாரணத் திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டம். 34,686 நியாய விலைக் கடைகள்மூலம் 1 கோடியே 91 இலட்சம் அரிசி அட்டைதாரர்களுக்கு விலையில்லா தரமான அரிசி வழங்கப்படும்; உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என அறிவிப்பு. அண்ணாவின் படி அரிசித் திட்டம், புரட்சித் தலைவரின் சத்துணவுத் திட்டம், இவற்றை ஒரு படி வென்று, பொற்குடத்திற்கு பொட்டு வைத்ததுபோல மாண்புமிகு அம்மா அவர்களின் விலையில்லா அரிசித் திட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை. வருவாய்த் துறையில் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களைப் பார்த்து அகிலமே வியக்கிறது இன்று. பட்டா மாறுதலுக்காக மக்கள் அலைந்ததை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள், மாநிலம் முழுவதும் நவீன கணினி பட்டா மாற்ற முறை, விரைவு பட்டா மாற்றும் திட்டம் ஆகியவற்றைக் கொண்டு வந்தார்கள். சாதாரண அடித்தட்டு மக்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் தந்திருக்கிற அற்புதத் திட்டம் இவை. அரசைத் தேடி மக்கள் வந்தது அந்தக் காலம், மக்களைத் தேடி அரசு செல்வது இந்தக் காலம். அதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியின் பொற்காலம் என்று இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்கம் 24, 25–ல் இடம் பெற்றுள்ள கால்நடை பராமரிப்பு, பால் வளம் இவற்றை உற்றுநோக்கும்போது, தியாகமும், சேவை மனப்பான்மையும் மனிதர்களுக்குள் மனிதர்கள் காட்டுவது அல்ல. காக்கையும், குருவியும் எங்கள் ஜாதி என்றான் பாரதி. வாடிய பயிரைக் கண்டபோது, என் மனம் வாடுதே என்றார் வள்ளலார். பாரதியின் மறு வடிவாய், வள்ளலாரின் பெண் உருவாய்த் திகழும் மாண்புமிகு அம்மா அவர்கள், எல்லா உயிரினமும் நம்முடைய அன்புக்குரியவைதான் என்கின்ற உயரிய எண்ணத்தின்படி, இத்துறைகளுக்கு செய்துள்ள நன்மைகள் ஏராளம், தாராளம். போக்குவரத்து, நெடுஞ்சாலை, சுற்றுலா, தகவல் தொழில்நுட்பவியல் போன்ற துறைகள் சார்பில் அறிவித்த திட்டங்களும், ஒதுக்கிய நிதிகளும் அனைவரையும் அளப்பரிய மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களும், திருக்குளங்களும், தேர்களும் புனரமைக்கப்பட்டு, அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு, திருக்கோயில்கள் சொர்க்கபுரியாக மாற்றப்படும் என்றதாலும், அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தியதாலும், தமிழக மக்களின் மனதில் நீங்கா இடத்தைப் பிடித்திருக்கிறார், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவ மக்களின் வாழ்க்கையை புரட்டிப் போட்டது, சுனாமி. சுனாமியின் சுவடே இல்லாமல் உலகமே வியக்கும் வகையில், 30 நாட்களில் மீனவ மக்களுக்கு புது வாழ்வு வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2006–2011–ல் மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுடப்பட்டார்கள்; உயிர் பறிபோனது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் எந்த ஒரு மீனவரும் சுடப்பட்டார், உயிர் இழந்தார் என்ற பேச்சுக்கே இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலோர மீனவர்களின் நலன் பேணும் வகையில், கடந்த 5

ஆண்டுகளில் வழங்கப்பட்டு வந்த மீன்பிடித் தடைக்கால உதவி, மீன்பிடி குறைவாக உள்ள காலங்களில் தரப்படும் உதவி இவ்விருத்திட்டங்களிலும் வழங்கப்பட்டுவரும் நிவாரண உதவித் தொகையை குடும்பம் ஒன்றிற்கு 5,000 ரூபாயாக இனி உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஆபத்தான காலங்களில், மீனவர்களை எச்சரிக்கை செய்வதற்காக 48 கோடி ரூபாய் செலவில் 30,000 அவசரக் காலத் தகவல் அனுப்பும் கருவிகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களின் இருண்ட வாழ்க்கையை ஒளிரச் செய்த ஒளிவிளக்கு நம் மாண்புமிகு அம்மா அவர்கள். அவர்களின் வாழ்வில் கலங்கரை விளக்கு, நம் மாண்புமிகு அம்மா அவர்கள். தெய்வம் சக மனிதர்களின் மூலம்தான் நமக்கு சகாயம் செய்கிறது என்ற செய்தியை மாண்புமிகு அம்மா அவர்களின் செயலால் இன்று அகிலமே உணர்ந்துள்ளது. உறுதியோடு இரு, துன்பங்களை வெல்வாய் என்று மீனவ நண்பனாய்த் திகழ்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி மறவாத் தன்மை மட்டும் தமிழனிடம் இருந்துவிட்டால், உள்ளாட்சி, நாடாளுமன்றம் என எல்லாவற்றிலும் இனி அம்மா அவர்களின் நல்லாட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2016–2017 ஆம் ஆண்டிலே இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட விலையில்லா 1,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படுமென்று அறிவித்து, இதற்காக 396.74 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாற்றுத் திறனாளிகளையும் தாயுள்ளத்தோடு காத்துக் கொண்டிருக்கிற ஒரே தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் பெருமையோடுனே இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறுபான்மையினர் நலனுக்காக கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் நகரத்திற்கு புனிதப் பயணம் செல்ல நிதியுதவி மற்றும் தமிழ்நாடு ஹஜ் குழுவின் வருடாந்திர நிருவாக மானியம் போன்ற இஸ்லாமிய சமுதாயத்தினரின் நலனுக்காக இந்த அரசால் வழங்கப்பட்டுவரும் உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் என்று அறிவித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிலே எந்த முதலமைச்சரும் அறிவித்த திட்டங்களை செய்து முடித்ததில்லை. ஆனால், தான் அறிவித்த அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றிய ஒரே தலைவி, ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என்கின்ற உத்தரவையும் பிறப்பித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களால், ஏற்றமிகு செயல்களால், வளர்ச்சியால், அத்தனைத் தமிழனும் நா தழு தழுக்க, நன்றியோடு உச்சரிக்கும் ஒரே மந்திரம், ‘அம்மா’ என்னும் திருமந்திரம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்மொழி வளர்ச்சி, வேளாண்மை, கூட்டுறவு, பால் வளம், கால்நடை பராமரிப்பு, மீனளம், நெடுஞ்சாலை, போக்குவரத்து, எரிசக்தி, தொழில் வளர்ச்சி, சுற்றுலா, நடுத்தரத் தொழில்கள், நகராட்சி நிருவாகம், வீட்டு வசதி, மக்கள் நல்வாழ்வு, ஆதி திராவிடர் நலன் என்று ஒவ்வொரு துறைக்கும் எண்ணி, எண்ணி திட்டங்களை வகுத்து, நிதியினை ஒதுக்கி, ஒரு சமுதாய சிற்பியினைப்போல, நிதிநிலை அறிக்கை என்னும் சிற்பத்தை வடித்துள்ளார்கள்.

எங்கள் கிராமங்களிலே மண் பானை செய்யும் குயவர்கள் பாத்திரம் உருவாக்கத் தேவையானவற்றை சேர்ப்பார்கள். அதுபோல, தமிழகத்தின் நிதிநிலை அறிக்கை என்கின்ற ‘அமுத சுரபி’ பாத்திரத்தை தன்னுடைய திட்டங்களால், செயல்களால், சிந்தனை வடிவத்தால் உருவாக்கித் தர அல்லும், பகலும் அயராது

உழைக்கும் எங்கள் தாயே! நிதிநிலை அறிக்கையிலே தந்துள்ள திட்டங்கள் எல்லாம் மகத்தான திட்டங்கள் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திலே கருத்துகளைப் பதிவு செய்ய ஒப்புயர்வற்ற நல்ல வாய்ப்பு தந்தமைக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும், தமிழகத்தின் தங்கத் தாரகை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா என்கின்ற தெய்வத்திற்கும், தங்களுக்கும் மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சம்பந்தமான ஒரு சில கோரிக்கைகளை இந்த மாமன்றத்திலே நான் எடுத்துரைக்க விழைகிறேன். எனது பூம்புகார் சட்டமன்றத் தொகுதி, விவசாயம் சார்ந்த பகுதியாகும். இங்கு பள்ளி மேற்படிப்பு படிக்க வேண்டுமானால், தொலைதூரம் சென்று பயில வேண்டிய நிலையுள்ளது. எனவே, இத்தொகுதியிலே உயர் கல்வி பயில ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தருவது குறித்த கோரிக்கையை வைக்க விழைகிறேன். அதை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சென்று ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 2014–2015 ஆம் ஆண்டு மீன் வளத் துறை மானியக் கோரிக்கையின்போது, தரங்கம்பாடியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று அறிவித்து, அதற்காக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, களப் பணியும் முடிந்திருக்கிற நிலையிலே, விரைவிலே மத்திய அரசின் அனுமதியைப் பெற்று டெண்டர் விட்டு, அந்தப் பணியைத் தொடங்க வேண்டும் என்ற என் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் செல்ல வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இந்து சமய அறநிலையத் துறை சார்பாக ஒரே ஒரு கல்லூரி உள்ளது. அந்த ஒரு கல்லூரியும் இன்றைக்கு மாணவர்கள்

படிப்பதற்குப் போதுமான வசதியில்லாத 12 வகுப்பறைகள் கொண்ட கட்டடமாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அங்கே 24 வகுப்பறைகள் கொண்ட கட்டடத்தைக் கட்டுவதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்ல நேரத்திலே இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், என்னை வாழவைத்த தெய்வம் என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதத்திற்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏக இறைவனின் திருப்பெயரால், 2016–2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே, மாநில அளவில் ஐந்து இயக்கங்களையும் (Missions), வளர்ச்சிக்கான 11 சிறப்பு நோக்கு பெரும் திட்டங்களையும் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதிலே, முக்கியமாக நீர் ஆதார மேலாண்மை, தூய்மை குறித்தும், வேளாண்மை வளர்ச்சி, சுற்றுலாத் துறை மேம்பாடு, தொழில் நிறுவனங்களை ஊக்குவித்தல், சாலைப் பாதுகாப்பில் சிறப்புக் கவனம், அனைவருக்கும் சுகாதாரம் என பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். இதை நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக வரவேற்று இதுசம்பந்தமாக என்னுடைய கருத்துகளை பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு குறித்து சொல்லப்பட்டிருக்கின்றது. இதிலே படித்த பட்டதாரிகள் பயன்பெற தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக முகாம்கள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எனது

கடையநல்லூர் தொகுதியிலே, ஆயிரக்கணக்கான பட்டதாரி இளைஞர்கள் வேலைவாய்ப்பில்லாமல் சிரமப்பட்டு வருகின்றார்கள். தமிழ்நாடு திறன் மேம்பாட்டு முகாம்கள் மூலமாக அவர்களெல்லாம் பயன்பெறக்கூடிய வகையில் என்னுடைய தொகுதியிலும் இதுபோன்ற முகாம்களை நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சி குறித்து இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் மொழி வளர்ச்சிக்காகப் பணியாற்றிய பல்வேறு அறிஞர்களுக்கெல்லாம் விருதுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சுதந்திர இந்தியாவில், அரசியல் நிர்ணய சபையிலே எந்த மொழி இந்தியாவிற்கு பொது மொழியாக இருக்க வேண்டுமென்று விவாதம் வந்தபோது, தமிழ்நாட்டைச் சேர்ந்த தலைவர்களும் மற்றவர்களும் தமிழ் மொழி குறித்து பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். தமிழ் மொழி குறித்த சிறப்பான ஒரு பதிவினை சிறுபான்மை சமுதாயத்தினுடைய வழிகாட்டியாக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கினுடைய நிறுவனத் தலைவராக இருந்த கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள், அரசியல் நிர்ணய சபையிலே எது பொது மொழி வரவேண்டுமென்ற கருத்தினைத் தெரிவிக்கும்போது, தொன்மையும், எளிமையும், இனிமையும், இலக்கணமும், இலக்கிய வளமும் நிறைந்த என்னுடைய தாய் மொழி தமிழ் மொழி வரவேண்டுமென்று அந்த அவையில் பதிவு செய்தார்கள். தமிழ் மொழி வளர்ச்சி குறித்து பல்வேறு விருதுகளை அறிவித்திருக்கக்கூடிய தமிழக அரசு அப்பேர்ப்பட்ட உயர்ந்த தலைவருடைய பெயரிலும் ஒரு விருதினை வழங்க வேண்டுமென்று இங்கே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். தமிழக பாட நூல் புத்தகத்திலே 1983 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் 5 மற்றும் 9 ஆம் வகுப்பு பாடப் புத்தகங்களிலே காயிதே மில்லத் அவர்களுடைய வரலாற்றுப் பாடம் இடம் பெற்றிருந்தது. தற்போது அது நீக்கப்பட்டிருக்கின்றது. தமிழக அரசினுடைய பாடப் புத்தகத்தில் சிறப்புக்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை இளைஞர்களும், மாணவர்களும் படிக்கக்கூடிய வகையில் மீண்டும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்பதை நான் இங்கே கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2016 ஜூலை 27 நண்பகல் 12–00

தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கையில் சாலைப் பாதுகாப்பைக் குறித்து பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய கடையநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரையில், அதிகமாக சாலை விபத்துகள் நடக்கக்கூடிய ஒரு பகுதியாக இருக்கின்றது. குறிப்பாக, குற்றால சீசன் வரக்கூடிய நேரத்தில் அங்கே பலர் மது அருந்திவிட்டு வருவதன் காரணமாகவும் மற்றும் சிலருடைய அசாதாரணமான நடவடிக்கையின் காரணமாகவும் அடிக்கடி சாலை விபத்துகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதுபோன்ற காலங்களில் அதைத் தடுக்கக்கூடிய வகையில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக தென்காசி–மதுரை நான்கு வழிச்சாலைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும். சாலை விபத்துகளைத் தடுப்பதற்காக விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் அதிகமான அளவில் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை என்னென்ன வகைகளில் செய்ய முடியுமோ, அந்த வகைகளிலெல்லாம் செய்ய வேண்டுமென்பதை இந்த அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதேபோல் மது அருந்தி வாகனங்களில் வருகின்றவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அண்டை மாநிலமான கேரளாவில் கடும் நடவடிக்கை எடுப்பதைப்போன்று, ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனங்களை ஓட்டுகின்றவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல ஓட்டுநர் உரிமம் வைத்திருந்து, மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டி வருபவர்கள்மீது, அவர்களுடைய ஓட்டுநர் உரிமத்தைத் தடை செய்யக்கூடிய கடும் நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதிகபட்சமான அபராதத்தை அவர்கள்மீது விதிக்க வேண்டுமென்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டத்தில் நான் அதிகமாகச் செல்லக்கூடிய தூத்துக்குடி–திருச்செந்தூர் சாலை என்பது பல ஆண்டுகளாகச் செப்பனிடப்படாமல் இருப்பதன் காரணமாக அங்கே பிரயாணம் செய்வதே மிகப் பெரிய சவாலாக இருந்து வருகின்றது. எனவே, உடனடியாக தூத்துக்குடி–திருச்செந்தூர் சாலையை செப்பனிட வேண்டும். கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமையவிருந்த

*திட்டம், சிலருடைய சுயநலப் போக்கால், இன்று வரை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. அதையும் துரிதமாக நிறைவேற்ற வேண்டும். தூத்துக்குடி—கன்னியாகுமரிக்கு செல்லக்கூடிய கிழக்குக் கடற்கரைச் சாலையையும். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஐந்தாண்டுகால ஆட்சியில், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் 133 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் 108.81 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டு காலமாக மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் பல சாலைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.*

*அதேபோல, ஐந்து பாலப் பணிகள் 4.83 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவர் கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார். இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில இடங்களில் நில எடுப்புப் பிரச்சினைகள் இருக்கின்றன. சில இடங்களில் புறவழிச் சாலைகள் போடப்படுகின்றன. நிலம் எடுக்கும் பணியும் நடந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பணிகள் நிறைவுற்ற பிறகு, திட்டங்கள் துவங்கப்படும் என்றாலும், ஆங்காங்கே நில எடுப்புக்கு அவசியமில்லாத பகுதிகளில் ஒப்பந்தம் விடப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சில விளக்கங்களைக் கொடுத்திருந்தாலும், கிழக்குக் கடற்கரைச் சாலையில், கடற்கரை இல்லாத பகுதிகள் வழியாக தூத்துக்குடி—திருச்செந்தூர் சாலையை அமைப்பதற்கு சிலர் சூழ்ச்சி செய்து*

வருகின்றனர். இதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கடற்கரைச் சாலை என்பதால் கடற்கரை ஓரத்தில் சாலை அமைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை எனது வேண்டுகோளாக இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் எனக் குறிப்பிட்டு அதில் பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. 'முதன்மைத் துறையின் தூணாக விளங்கும் வேளாண்மைத் துறை' என குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்—National Agriculture Development Programme, நிலையான வேளாண்மை தேசிய இயக்கம்—National Mission for Sustainable Agriculture, தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம்—National Food Security Mission, இப்படிப்பட்ட திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்படும் எனத் தெரிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். என்னுடைய தொகுதி வேளாண்மை நிறைந்த பகுதியாகும். இந்த திட்டங்களை எல்லாம் என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், அதிகமாக தென்னை மரங்கள் விவசாயம் செய்யப்படுகின்றன. எந்தத் தொழிற்சாலையும் இல்லாத கடையநல்லூர் தொகுதியில், தென்னை நாரிலிருந்து கயிறு தயாரிக்கக்கூடிய ஒரு தொழிற்சாலை அமைப்பதற்குண்டான ஒரு திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாம்பழம், எலுமிச்சை போன்ற பொருட்களின் விளைச்சல் அதிகமாக இருக்கக்கூடிய என்னுடைய தொகுதியில் மாம்பழத்தைப் பதப்படுத்தும் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டும் என்ற எனது கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலை வேண்டும். மேலும், இயற்கை விவசாயம் பாதுகாக்கப்பட வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடையநல்லூர் தொகுதியில் வேளாண்மைத் துறை மூலமாக மாம்பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்றும், வேளாண் விளைபொருட்களைப் பாதுகாக்க அவற்றைப் பதப்படுத்தும் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு வேளாண்மைத் துறையை முதன்மைத் துறையாக மாற்றிக் காட்டியுள்ளார்கள். குறு, சிறு விவசாயிகளினுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்லாமல், காவேரி டெல்டா மாவட்டங்களிலுள்ள விவசாயிகளினுடைய தொகுப்புத் திட்டத்திற்காக 54 கோடியே 65 இலட்சம் ரூபாய்க்கு மானியத்தை வழங்கியும், புதிய காப்பீட்டுத் திட்டத்திற்காக சுமார் 589 கோடி ரூபாய் நிதியை வழங்கியும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுடைய வாழ்வில் ஒளியேற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், கடையநல்லூர் தொகுதியில் வேளாண் உற்பத்தியினை உயர்த்துவதற்காக 300 மெட்ரிக் டன் தரமான விதைகள் 30 இலட்சம் ரூபாய் மானியத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் ரூ.150 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. டிராக்டர், பவர் டில்லர், சுழற்கலப்பை உள்ளிட்ட 40 பல்வேறு வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் ரூ.54.87 இலட்சம் மானியத்தில் 40 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. சூரிய ஒளியால் இயங்கும் மோட்டார் அமைக்கும் திட்டத்தின்கீழ், சூரிய சக்தி பம்புசெட்டுகள் 3.7 இலட்சம் மானியத்தில் நிறுவப்பட்டுள்ளன. பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வேளாண் பொறியியல் துறைமூலம் 256 விவசாயிகளுக்கு 656 ஹெக்டேர் பரப்பில் ரூ.88 இலட்சம் செலவில் நீர்ப்பாசன வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில், வேளாண் விளைபொருட்களை சேமித்து வைப்பதற்காக, குளிரூட்டப்பட்ட சேமிப்பு அறையுடன்கூடிய வணிக வளாகம் ரூ.220 இலட்சம்

செலவிலும், சேமிப்புக் கிட்டங்கி ஒன்று ரூ.100 இலட்சம் செலவிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசால் நிறுவப்பட்டு, அவை செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ், குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன அமைப்புகள் 311 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.122.89 இலட்சம் மானியத்திலும் 290 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 1.29 இலட்சம் ரூபாய் நிதி, பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேசிய தோட்டக்கலை இயக்ககத் திட்டத்தின்கீழ், 975 விவசாயிகளுக்கு 3,471 ஹெக்டேர் பரப்பில் ரூ.79.61 இலட்சம் மானியத்திலும் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. தோட்டக்கலைத் துறையில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 78 விவசாயிகளுக்கு 74.72 ஹெக்டேர் பரப்பில் 11.49 இலட்சம் மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வேளாண் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், விவசாயிகள் தங்கள் வாழ்வில் உயர்வதற்கும் நல்ல பல திட்டங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் செயல்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உதவிக் கரம் நீட்டுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

பிற்பகல் 12–10

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உறுதிமொழிக்கு நன்றி. என்னுடைய கோரிக்கையை கண்டிப்பாக நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கையில், கால்நடை பராமரிப்புத் துறை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியிலுள்ள கள்ளப்புலி பகுதியில் அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. மழைக் காலத்தில் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு, அதிகமாக இறக்கக்கூடிய சூழ்நிலை அங்கு இருக்கிறது. எனவே, மழைக் காலத்திற்கு முன்பாகவே கால்நடை பராமரிப்பிற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதையும் வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

சுற்றுச்சூழல் மற்றும் வனப் பாதுகாப்பு குறித்து பல்வேறு அறிவிப்புகள் இங்கே வெளியிடப்பட்டிருக்கின்றன. அணைகள் புனரமைப்பு மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கியினுடைய DRIP மூலமாக நிறைவேற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனது கடையநல்லூர் தொகுதியில் 5 அணைகளும் 32 குளங்களும் பல ஆண்டு காலமாக தூர்வாரப்படாததன் காரணமாக அங்கே தண்ணீரை சரியாக விவசாயத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இந்தத் திட்டத்தின் மூலமாக எனது தொகுதியில் உள்ள அணைகளையும், குளங்களையும் தூர்வாருவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, வன விலங்குகள் குறித்து இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியைப் பொறுத்தவரை வன விலங்குகளால் விளை நிலங்களும், விவசாயிகளும் அடிக்கடி பாதிப்பிற்குள்ளாகி இறக்கக்கூடிய சூழ்நிலையிருக்கின்றது. எனவே, முன்பு தி.மு.க. ஆட்சியில் அமைத்ததுபோல சோலார் மின்வேலியை அமைத்து விளைநிலங்களைப் பாதுகாக்கலாம். இல்லையென்று சொன்னால், அகழிகளை ஏற்படுத்தி அவற்றைப் பாதுகாக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தலாம். அதேபோல, தீவன ஆதாரங்கள், நீர்க் குட்டைகள் அமைத்தல் சம்பந்தமாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதை

கவனத்தில் கொண்டு விலங்குகளிடமிருந்து விளைநிலங்களையும், விவசாயிகளையும் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை கடையநல்லூர் தொகுதியிலே எடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும். ஏனென்று சொன்னால் அடிக்கடி வன விலங்குகள் மூலமாக விவசாயிகள் பாதிக்கக்கூடிய சூழ்நிலை எங்களுடைய தொகுதியிலே இருக்கின்றது. அவர்களுக்கு வழங்கப்படும் உயிரிழப்பிற்கான மாநிலப் பேரிடர் நிவாரண நிதியை அதிகபட்சமாக உயர்த்தி வழங்க வேண்டுமென்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நதிகள் இணைப்பு குறித்து இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களிலே, தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு இணைப்புத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதை விரைவாக இந்த அரசு நிறைவேற்றி திருநெல்வேலி மாவட்டத்தில், குறிப்பாக எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய குடிநீர்ப் பஞ்சத்தையும் விவசாயிகளுடைய குடிநீர்ப் பிரச்சினையையும் தீர்ப்பதற்குண்டான நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென வேண்டுகோள் வைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு இணைப்புத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தாமிரபரணி ஆற்றின் வெள்ள நீரை கன்னடியன் கால்வாயிலிருந்து, வெள்ளக் கால்வாய் மூலம் திசையன்விளை மற்றும் சாத்தான்குளம் ஆகிய வறட்சிப் பகுதிகளுக்கு திருப்புவதன்மூலம் தாமிரபரணி ஆற்றுடன் கருமேனியாறு மற்றும் நம்பியாறு ஆகிய ஆறுகளை இணைப்பதுதான் திட்டத்தின் நோக்கமாகும்.

தாமிரபரணி ஆற்றிலிருந்து கடலில் வீணாகக் கலக்கும் உபரி நீரை உபயோகிக்க இந்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் 369 கோடி ரூபாய் செலவில் 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு செயலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தின்

முதல் 2 பகுதிகளில் 90 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன, கருமேனியாறு வரை. கருமேனியாற்றிலிருந்து நம்பியாறு வரை இப்போது நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுவும் முடிகின்ற தருவாயில் இருக்கிறது. நில எடுப்புப் பணி முடிந்தவுடன் அந்தப் பணிகள் தொடங்கப்படும். தற்போது 369 கோடி ரூபாய் என்பது மறு மதிப்பீடு செய்யப்பட்டு, இந்தத் திட்டத்திற்கு 872.45 கோடி ரூபாய்க்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அந்தப் பணிகளை விரைவாகத் தொடங்குவதற்கு அரசு அத்தனை நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இந்தத் திட்டம் நிறைவேறுகின்றபோது திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய 2 மாவட்டங்கள் பயன்பெறும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் 32 கிராமங்களிலுள்ள 177 குளங்கள் நிரப்பப்பட்டு, 2,657 கிணறுகளில் நீர் நிலை உயர்ந்து பயன் ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தூத்துக்குடி மாவட்டத்தில் 18 கிராமங்களில் உள்ள 75 குளங்கள் நிரப்பப்பட்டு, 2,563 கிணறுகள் பயன்பெறும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், யானைகள் மற்றும் விலங்குகள் பயிர்களை நாசம் செய்வதாகவும், அதைத் தடுப்பதற்குரிய அகழிகளை வெட்ட வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். முந்தைய தி.மு.க. ஆட்சியில் செய்ததைப்போல இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக தெரிவித்துக்கொள்வதெல்லாம் நீர் பற்றாக்குறை மற்றும் உணவுப் பற்றாக்குறையின் காரணமாக யானைகள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயர்ந்து காட்டை விட்டு வெளியேறி மக்களுக்கும், பயிர் வகைகளுக்கும் மற்றும் உடைமைகளுக்கும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதைத் தடுக்கும்வண்ணமாக

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி, யானைகள் திட்டத்தின் கீழும், புலிகள் திட்டத்தின் கீழும் யானை புகா அகழிகள் அமைத்து, அதற்கு மின்வேலிகள் அமைத்து உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் எங்கெங்கு வன விலங்குகளினால் பிரச்சினைகள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், மக்களால் விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்காவது, ஏதாவது பிரச்சினை இருந்தால், அதைக் குறிப்பிட்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவற்றுக்கும் உரிய நடவடிக்கை எடுத்து பாதுகாப்பு தரப்படும் என்ற உறுதிமொழியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, திருநெல்வேலி மாவட்டத்திலே குடிநீர்ப் பஞ்சம் என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அற்புதமான திட்டங்களால், எடுத்த சீரிய நடவடிக்கைகளால் குடிநீர்ப் பஞ்சம் என்பது எங்குமே கிடையாது. இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி திருநெல்வேலி மாவட்டத்திலே, குறிப்பாக கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு ஐந்து நாளைக்கு ஒரு முறை 70 முதல் 80 லிட்டர் வரை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் இரண்டு நாளைக்கு ஒரு முறை நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதேபோல திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

அச்சம்புதூர், ஆய்க்குடி, சம்பாவர்வடகரை, வடகரை கீழ்பிடகை புதூர், பன்பொழி பேரூராட்சிகளில் நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதேபோல திருநெல்வேலி மாநகராட்சிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் குடிநீர்த் திட்டத்திற்காக 180 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக டெண்டர் விடப்பட்டிருக்கிறது. ஆகவே, எங்கே, எந்தப் பிரச்சினை இருந்தாலும் உடனடியாக அதைத் தீர்க்கும் வகையில் அற்புதமான திட்டங்களைத் தந்துள்ளார்கள். நான் நேற்றைக்கு பேசும்போதுகூட சொன்னேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம், சிறிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற அற்புதமான குடிநீர்த் திட்டங்களுக்காக 21,478.18 கோடி ரூபாயை ஒதுக்கி சரித்திர சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல முன்பிருந்த ஐந்து ஆண்டு கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே கிட்டத்தட்ட ரூ.7,250 கோடிதான் குடிநீர்த் திட்டங்களுக்காகக் கொடுத்தார்கள். தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கியதை அம்மா ஒதுக்கிய தொகையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது எவ்வளவு அதிகம் என்பது புரியும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கியதைவிட 14,198.06 கோடி அதிகம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, எங்கேயுமே குடிநீர்ப் பஞ்சம் என்பது கிடையாது. எந்த இடத்தில் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்வீர்களேயானால் கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு உறுப்பினர் முஹம்மது அபூபக்கர் அவர்கள் பேசும்போது தி.மு.க. ஆட்சியில் அமைத்தது போல சோலார் மின்வேலி அல்லது

யானை புகா அகழிகள் அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். 2014–2015 ஆம் ஆண்டு வரை யானைகள் காட்டை விட்டு வெளியேறாமல் தடுக்க 1,895.64 கி.மீ. தொலைவிற்கு ரூ.5,812.42 இலட்சத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் யானை புகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன என்ற செய்தியையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் பெருமக்கள் எல்லாம் சில தகவல்களைச் சொன்னார்கள். சோலார் மின் வேலி தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்டதுதான். அது இப்போது பழுதடைந்துள்ளது, அதை மீண்டும் சரிசெய்ய வேண்டுமென்று சொன்னேன். அதேமாதிரி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி என்று சொன்னார்கள். மைனாரிட்டி சமுதாயங்களான முஸ்லிம், கிறிஸ்துவர்களுக்கு நல்ல பாதுகாப்பான அரசாக தி.மு.க. ஆட்சி இருந்தது என்பதை இங்கே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) யாரையும் நான் குறை சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ அவர்கள் சார்ந்த கூட்டணிதான் மைனாரிட்டி சமுதாயங்களுக்கு பாதுகாப்பாக இருந்தது என்று சொன்னார்கள். தவறான கருத்தைப் பதிவு செய்திருக்கின்றார்கள். 2003 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, இந்தியா முழுவதும் பெரிய கலவரம் நடந்தபோது, தமிழ்நாட்டில் ஒரு சிறு கலவரம்கூட இல்லாமல் பாதுகாத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12–20*

*அதுமட்டுமல்லாமல், முஸ்லிம் சமுதாயத்தினர் ஹஜ் யாத்திரை செல்ல வேண்டுமென்று சொன்னால் அதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் உதவி செய்திருக்கின்றார்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி) *நோன்பு இருக்கின்றபோது, நோன்பு கஞ்சி காய்ச்சுவதற்காக 1,001 டன் அரிசியைக் கொடுப்பதும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.* (மேசையைத் தட்டும் ஒலி) *ஜெருசலேம் செல்வதற்கு உதவி செய்பவரும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.* (மேசையைத் தட்டும் ஒலி) *ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் மைனாரிட்டி சமுதாயங்களுக்குப் பாதுகாப்பு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்னுமொரு கூடுதலான தகவல். அவர்களுடைய தி.மு.க. ஆட்சி இருக்கின்றபோது, கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு நடந்ததையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிடக் கூடாது* (மேசையைத் தட்டும் ஒலி) *என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், உரையை முடியுங்கள்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து நெருக்கடி குறித்துத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, சென்னை, வேப்பேரியிலிருந்து நான் வருகின்றேன். சென்ட்ரல் இரயில்வே ஸ்டேஷன், அரசு பொது மருத்துவமனை, கார்ப்பரேஷன், பார்க் ஸ்டேஷன், பறக்கும் இரயில், சதர்ன் இரயில்வே, மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ், நேரு ஸ்டேடியம் போன்றவையெல்லாம் அங்கேதான் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே, பன்நோக்கு சந்திப்பு ஒன்று உருவாக்கப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதை விரைவாகச் செயல்படுத்தி, அங்கே underground way, flyover போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். ஏனென்று சொன்னால், பூவிருந்தவல்லி நோக்கிச் செல்லும் பெரியார் நெடுஞ்சாலையில், இரயில்வே ஸ்டேஷன் செல்ல பல இலட்சம் மக்கள் நடந்து செல்கின்றனர். இப்பணிகளை விரைவுபடுத்திட வேண்டுமென்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறுபான்மையினர் நலன் குறித்து இங்கே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, உலமாக்கள் உதவித் தொகையை ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/– ஆக உயர்த்தித் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப்போல, தி.மு.க.–வினுடைய ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் மற்றும் தளபதி அவர்களுடைய பெருமுயற்சியாலே உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியம் அமைக்கப்பட்டதை இங்கே நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முஹம்மது அபூபக்கர், உரையாற்றியது போதும், உட்காருங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** ஒரே உறுப்பினர்தான் என் கட்சி சார்பாக இருக்கிறேன். தயவுசெய்து கொஞ்சம் பேச விடுங்கள், அதிகம் பேசவில்லை. கட்டாய திருமண தடைச் சட்டத்தின்மூலமாக, இப்போது... (மணியடிக்கப்பெற்றது) நான் ஒரு உறுப்பினர்தான் இருக்கிறேன். ஒருநாள்தான் பேச வாய்ப்புத் தருகிறீர்கள், கொஞ்சம் கூடுதல் நேரம் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள். (குறுக்கீடு) உரையாற்றியது போதும், உட்காருங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** என் கட்சியில், நான் மட்டும்தான் இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 600 ரூபாயாக இருந்த உலமாக்கள் பென்ஷனை 1,000 ரூபாயாக உயர்த்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது, 1,000 ரூபாயினை 1,500 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வேறு யாராலும் உலமாக்களுக்கு சலுகை காட்டப்படவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உலமாக்கள் குறித்து பேசவா வாய்ப்புக் கேட்கிறீர்கள். திரு. முஹம்மது

*அபூபக்கர் அவர்கள் பேசிவிட்டாரே? (குறுக்கீடு) நீங்கள் பேசப் போகிறீர்களா? உலமாக்கள் குறித்து அவர் பேசிவிட்டார். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். சிறுபான்மையினருக்குசலுகைகள் தந்தது நாங்கள்தான் என்று. இப்போதுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சிறுபான்மைக்காரர்களுக்கு கொஞ்சம் நேரம் பேச அனுமதியுங்களேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. முஹம்மது அபூபக்கர் அவர்களுக்கு உரையாற்ற போதுமான வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். அதனால், அடுத்த வாய்ப்பில் அவர் பேசிக்கொள்ளலாம். திரு. அபூபக்கர், உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. திரு. அபூபக்கர், உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்தமுறை உங்களுக்கு அதிக நேரம் பேச வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்த வாய்ப்பில் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசலாம். திரு. கருணாஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. அபூபக்கர், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி உட்காருங்கள்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** ஐந்து நிமிடங்களில் உரையை முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் குறித்து சில விஷயங்களை இங்கே சொல்ல வேண்டும். இங்கே வக்ஃபு வாரியத்தின் செயல்பாடுகள் தேர்தலுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டது. கடந்த 6 மாத காலமாக, அது செயல்படாமல் இருக்கின்றது. வக்ஃபு வாரியம் உடனே செயல்படவும், வக்ஃபு தீர்ப்பாயத்தை தமிழகத்தில் அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அபூபக்கர், நீங்கள் நன்றி சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு புதிதாக வேறு ஏதோ சப்ஜெக்ட் ஆரம்பிக்கிறீர்கள். உட்காருங்கள். உங்கள் சார்பாக நானே நன்றி சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள் பேசுகின்றபோதும், மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சிக் கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்கள் பேசுகின்றபோதும் 2016–2017 ஆம் ஆண்டுக்கான மத்திய வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தொகையின் அடிப்படையில் இந்த ஆண்டிற்கான மத்திய வரிகளில் மாநில அரசினுடைய பங்குத்தொகை 23,018.12 கோடி ரூபாயாக இருக்கிறதே, ஆனால், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. அருண் ஜெட்லி அவர்கள் மாநிலங்களவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கின்றபோது, இந்த ஆண்டு சராசரியாக 35,854.60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக சொல்லியிருக்கிறாரே, அதில் வித்தியாசம் வருகின்றதே, அது எதனால் என்பதனை இங்கே ஒரு கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு விளக்கமளிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அதாவது, மத்திய வரிகளுடைய பங்கினை மாநில அரசுகளுக்குப் பிரித்துக் கொடுக்கும்போது, முதல் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு மத்திய அரசினுடைய வரி வருவாய் எவ்வளவு கூடும் என்று கணக்கிட்டு அதை சராசரியாக ஒரு வருடத்திற்கு என்ன வரும் என்று கணக்கீட்டு மாநில அரசுகளுக்கு அவர்கள் வருடாவருடம் வழங்கி வருவது வழக்கம். அந்தவகையில்தான் சென்ற பதின்மூன்றாவது நிதிக் குழு காலத்தில் 2010–2011–லிருந்து 2014–2015 வரை ஐந்தாண்டுகளுக்கு தமிழ்நாடு பெற்ற தொகை 80,943 கோடி ரூபாய். ஐந்தாண்டுகளுக்கும் சேர்த்து 80,943.5. கோடி ரூபாய். சென்ற நிதியாண்டில், அதாவது 2014–2015–ல் நாம் பெற்ற தொகை 16,189 கோடி ரூபாய். இது பதின்மூன்றாவது நிதிக் குழுவில் ஐந்தாண்டுகளில் பகிர்ந்தளிக்கப்பட்ட மத்திய வரி வருவாயிலிருந்து மாநில அரசுக்கு வழங்கப்பட்ட பங்கு. இப்போது பதினான்காவது நிதிக் குழு 2015–ல் ஆரம்பிக்கப்பட்டு, 2015–2016–லிருந்து 2019–2020 வரை ஐந்தாண்டுகளுக்கு இருக்கும். அந்த அடிப்படையில் மத்திய வரி வருவாய் கூடும் என்ற கணக்கில் 1,79,273 கோடி ரூபாய் என்று கணக்கிட்டு, அதை ஐந்தால் வகுத்து சராசரியாக ஓர் ஆண்டிற்கு 35,854.60 கோடி ரூபாய் வரும் என்று அவர்

பேட்டியளித்திருக்கிறார். ஆனால், நாம் சென்ற ஆண்டு, பதினான்காவது நிதிக் குழுவினுடைய முதல் ஆண்டான 2015–2016–ல் தமிழ்நாடு பெற்ற தொகை 20,353.86 கோடி ரூபாய்தான். இந்த ஆண்டு 2016–2017–ல் மத்திய வரவு–செலவுத் திட்ட அலுவலகக் கணக்கின்படி நாம் பெற இருக்கின்ற தொகை ரூ.23,018.12 கோடி ரூபாய். வருகின்ற மூன்றாண்டுகளில் அத்தொகை கூடும், குறையும். அதில் வரி வசூல் இவ்வளவு இருக்குமென்று ஓர் இலக்கை நிர்ணயித்திருக்கின்றார்கள். அது கூடலாம், குறையலாம். ஆனால், மத்திய நிதிக் குழு, அந்த ஐந்தாண்டுக் காலம் மொத்தமாகச் சேர்த்து, அதை ஐந்தால் வகுத்து, சராசரியாக ஒவ்வோர் ஆண்டும் மாநிலத்திற்குத் தருவது வழக்கம். அதில் ஏற்றயிறக்கம் இருக்கும். இந்த ஆண்டு நாம் நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருப்பதும் உண்மை, அவர் சொல்லியிருப்பதும் உண்மை. இதில் சில வேறுபாடுகள் ஆண்டுக்காண்டு இருக்கும் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) பேசிவிட்டு வெளியே போய்விட்டீர்கள். எல்லோரும் வெளியே சென்றபிறகு நாங்கள் பதில் சொல்ல வேண்டுமென்றால், Chair–ஐ பார்த்தா பேசுவது? நீங்கள் வந்த பிறகுதானே பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) சந்தடி சாக்கில் எதாவது ஒன்று சொல்வார்கள் என்று சொல்வார்களல்லவா! (குறுக்கீடுகள்) அதுமாதிரி என்ன சொல்லிவிட்டார். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், அவர்களுடைய ஆட்சியில், ஐந்தாண்டுகளில் விலைவாசியே ஏறவில்லை, அவர்கள் தலைவர் விலைவாசியைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார், விலையை

ஏற்றவில்லை என்று சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால். . . (குறுக்கீடு) நான் பதில் சொல்லும் முன்னே நீங்கள் சென்றுவிட்டீர்கள், அதற்காகச் சொல்கிறேன். உங்கள் ஆட்சியில் என்ன நடந்தது? விலைவாசி ஏறியிருந்ததா, இல்லையா என்று நான் சொல்லவில்லை. இந்த அவையிலே பல நடவடிக்கைகள் இருக்கின்றன. இங்கே வெங்காய மாலை போட்டு வந்தது, இங்கே நிதியமைச்சராக இருப்பவர் பருப்பு விலையைப் பற்றிப் பேசியது, மற்ற காய்கறி விலைகளைப் பற்றிப் பேசியது, இருக்கிற நிலையை எடுத்துச் சொன்னது எல்லாம் இங்கே அவையிலே பதிவாகியிருக்கின்றன. இருந்தாலும், இப்படிப் பல பதிவுகளில் முத்தாய்ப்பாக இரண்டே இரண்டு மட்டும் சொல்லிக்கொள்கிறேன். கொஞ்சம் கேட்டுக்கொள்ளுங்கள்.

அதாவது, 2008 நவம்பர் 14–ம் தேதி இந்த அவையில், விலைவாசியேற்றத்தைப் பற்றி அன்றைக்கு இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொண்டர்கள், அன்றைக்கு இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழகத்திலிருந்த விலைவாசியேற்றத்தைப் பற்றிப் பேசியபோது, அதற்கு இடைமறித்து பதில் சொன்னார் திரு. எ.வ. வேலு. அதற்கு இடைமறித்து அன்றைக்கு நிதியமைச்சராக இருந்தவர் சொல்லியிருக்கிறார் பாருங்கள். நாங்கள் சொல்லவில்லை. நன்றாகப் பாருங்கள். கடந்த முப்பதாண்டுக் காலத்தில். . . (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். அன்றைய மாண்புமிகு நிதியமைச்சர் திரு. அன்பழகன் பேசியது. “கடந்த முப்பதாண்டுக் காலத்தில், எந்தக் காலத்தில் விலை ஏறாமல் இருந்தது?” (குறுக்கீடு) கொஞ்சம் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** “காமராஜர் ஆட்சிக் காலத்தில்கூட விலை ஏறியது. அவர் ஏழைப் பங்காளரே தவிர, ஏழைகள் விலையை அதிகம் கொடுத்து வாங்குவதை, அதிகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதை அவராலேயே தடுக்க முடியவில்லை; மத்திய சர்க்காரும் தடுக்க முடியவில்லை. எந்த மாநிலத்திலும் விலையேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. எந்தப்

*பண்டத்தின் விலை ஏறவில்லை? நாம் உற்பத்தி செய்கிற எல்லாப் பொருட்களின் விலைகளும் ஏறத்தான் செய்யும். சிமென்ட் ஆக இருந்தாலும் விலை ஏறத்தான் செய்யும், செங்கல்லாக இருந்தாலும் விலை ஏறத்தான் செய்யும். விலைவாசி உயர்வு என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் இயல்பாக அமைந்து விடுகிறது. எந்த அரசாங்கமும் நூற்றுக்கு நூறு விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியாது"; இதையெல்லாம் நான் சொல்லவில்லை, அவர் சொன்னது; பக்கம் 464–ஐ பார்த்துக்கொள்ளுங்கள். அதேநேரத்தில் இன்னொன்றையும் சொல்கிறார், அன்றைய கூட்டத் தொடரில்.* (குறுக்கீடுகள்) *எதில் எடுத்தால் என்ன? இது உங்களுடைய பதில்.* (குறுக்கீடுகள்) *நிதியமைச்சர், பேராசிரியர் க. அன்பழகன் சொல்கிறார், 1944–ல் நான் முதல் முதலாக வேலைக்குச் சேர்ந்த போது என்னுடைய சம்பளம் 60 ரூபாய்...* (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *"1944 ஆம் ஆண்டு வேலைக்குச் சேரும்போது என்னுடைய சம்பளம் 60 ரூபாய். இன்றைக்கு என்னுடைய மாணவர் பேராசிரியராக இருக்கும்போது 16,000 ரூபாயாக உயர்ந்து இருக்கிறது. இதுமட்டுமல்ல, என் தகப்பனார் திருமணத்தின்போது ஒரு பவுன் விலை ரூ.27, ரூ.30. என்னுடைய திருமணத்தின்போது ஒரு பவுன் விலை ரூ.100, இப்போது என் மகனின் திருமணத்தின்போது ஒரு பவுன் விலை ரூ.1,000 ஆகியது. இன்றைக்கு ஒரு பவுன் விலை ரூ.10,000 ஆக விற்கிறது" என்று 2008 ஆம் ஆண்டு சொல்கிறார். அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்கிறார் பாருங்கள்; 466–467 ஆம் பக்கத்தையும் பாருங்கள். இதை விட்டுவிட்டு உங்கள் தலைவர் என்ன சொல்கிறார் என்றால்...* (குறுக்கீடுகள்) *விலைவாசி ஏற்றம், விலைவாசி ஏற்றம் என்று சொல்கிறார்கள்.* (குறுக்கீடுகள்) *முக்கியமான* subject, *விலைவாசி ஏற்றம். விலைவாசி ஏற்றம் குறித்து 2009–2010, 2010–2011–ல் என்ன சொல்கிறார்கள் என்றால், அன்றைய முதலமைச்சராக இருந்த, உங்கள் கட்சியினுடைய தலைவர் சொல்கிறார், "நீங்கள் விலைவாசி ஏற்றம், விலைவாசி ஏற்றம் என்று சொல்கிறீர்கள். இங்கு இருக்கிற பர்மா பஜாருக்குப் போங்கள், இங்கு இருக்கிற பனகல் பார்க்குக்குப் போங்கள், கூட்டம் இருக்கிறதா, இல்லையா" என்று. ஆனால்,*

எங்கள் அம்மா அப்படிச் சொல்லவில்லை. எங்கள் அம்மா ஓட்டுப் போட்ட மக்களுக்கு... (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியில், பொருளாதாரத்தினுடைய மேம்பாட்டில் விலைவாசி ஏற்றம் என்பது தவிர்க்க முடியாது. சம்பள உயர்வு கூடியிருக்கிறது. எல்லோருக்கும் சம்பள உயர்வு கூடியிருக்கிறது. அன்றைக்கு இருந்த சம்பளம் என்ன? இன்றைக்கு இருக்கிற சம்பளம் என்ன? ஆனாலும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இன்றைக்கு விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லியிருக்கக்கூடாது அல்லவா? ஏன் சொன்னார்கள்? சொல்லக்கூடாது அல்லவா! அதை வாபஸ் வாங்கச் சொல்லுங்கள். விலைவாசி ஏறியிருக்கிறது என்று சொன்னதை வாபஸ் வாங்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு அம்மா அவர்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்த விலை நிலைப்படுத்தும் நிதி ஆணையத்தை அமைத்து, 100 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 100 கோடி ரூபாயின் மூலமாக எந்தெந்தப் பொருளுக்கு விலை ஏறுகிறதோ அந்தப் பொருட்களை அது உற்பத்தியாகின்ற மாநிலங்களிலேயிருந்து வாங்கி தமிழக மக்களுக்குக் குறைந்த விலையில் இதுவரை வழங்கி வருகிறார்கள். அப்படி வழங்கப்பட்டதோடு 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடை, அம்மா உணவகம், ஒரு ரூபாய்க்கு ஒரு இட்லி, 3 ரூபாய்க்கு தயிர் சாதம், 5 ரூபாய்க்கு சாம்பார் சாதம் இப்படி வழங்குகிற ஓர் உத்தமத் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1 கோடியே 91 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா அரிசியை வழங்கியிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா சிமென்ட், அம்மா குடிநீர் என இத்தனைத் திட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உங்கள் ஆட்சியில் நீங்கள் ஏதாவது செய்தீர்களா, நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். நான் ஒரு statement படிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் ஒரு statement படிக்க வேண்டும். அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள்.

இன்றைக்குக் காலையில் *9–56* மணிக்கு மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் சத்துணவு குறித்து அவையில் பேசப் போவதாகத் தெரிவித்து, ஓர் ஆவணத்தை வேறொரு உறுப்பினர்மூலமாக என்னிடம் கொடுத்தார்கள். அப்போது அதை நான் படித்துப் பார்க்கவில்லை. இந்த அவையில் தி.மு.க. கொறடா அவர்கள் பேசும்போதுகூட அரசாணை என்றுதான் குறிப்பிட்டார்கள். அவர் கொடுத்த ஆவணத்தை மேலெழுந்தவாரியாக நான் பார்த்த காரணத்தினால், அது அரசாணை இல்லை என்றேன். நான் படித்துப் பார்க்காத காரணத்தாலும், நான் அனுமதிக்காத காரணத்தாலும் அது அவைக் குறிப்பில் இடம்பெறாது எனத் தெரிவித்தேன். மேலும் எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் உரையாற்றுகையில், நிதிநிலை குறித்து கருத்து தெரிவித்து, ** அது தவறான கருத்து என்பதால் அப்பொழுது அது அவைக் குறிப்பில் இடம்பெறாது எனத் தெரிவித்தேன். இப்பொழுது நான் பேசிய இந்தக் குறிப்பும் அவைக் குறிப்பில் இடம் பெறாது. தற்பொழுது அந்த ஆவணத்தைப் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அது அரசாணை அல்ல. மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணைதான். (மேசையைத் தட்டும் ஒலி) ** எனவே, தவறான தகவலை மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் தெரிவித்துள்ள காரணத்தினால் அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியது சரியே எனத்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தீர்ப்பளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) என்னுடைய தீர்ப்புக்குப் பிறகு நீங்கள் அதுகுறித்து எதுவும் பேச முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கரி. இராமசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அறிவித்த இந்தத் தீர்ப்புக்கு எதிராக யாரும் எதுவும் பேச முடியாது. இதுகுறித்து எந்தப் பத்திரிகைகளும் நான் வெளியிட்ட கருத்துக்குப் பதிலாக வேறு மாற்றுக் கருத்தை வெளியிடக்கூடாது எனவும் உத்தரவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நிறைய பேசிவிட்டீர்கள். நேரமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரும்கூட கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கட்டுப்படுத்தியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (சிரிப்பு) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்படி கூச்சல் போடுவதற்குப் பதிலாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் என்னதான் சொல்கிறார் என்பதை ஒரு நிமிடம் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களுக்கு, வாக்களித்த மக்களுக்கு விலைவாசி ஏற்றத்தால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெங்காயத்தின் விலையைப் பார்த்த மக்கள்,

அன்றைக்குக் கண்ணீர் விட்டார்கள். எப்பொழுதுமே வெங்காயத்தை உரித்தால்தான் கண்ணீர் வரும். அன்றைக்கு, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெங்காயத்தைப் பார்த்தாலே, அதன் விலையைக் கேட்டாலே கண்ணீர் வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இருந்ததா, இல்லையா என்பதை நீங்களே புரிந்துகொள்ளுங்கள். இன்னும் நிறைய சொல்ல வேண்டுமென்றாலும் என்னிடம் தகவல் இருக்கிறது. அதையும் நான் சொல்லத் தயார். எனவே, எந்தக் காலத்திலும் தமிழக மக்களுக்கு எந்த நேரத்திலும் உதவி செய்யக்கூடியவர், விலைவாசியைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், உங்களது உரை முடிந்துவிட்டது, உட்காருங்கள். இன்னொரு வாய்ப்பு பிறகு தருகிறேன். இப்பொழுது உட்காருங்கள். திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** அரசாணை இல்லை என்பது உண்மை. (குறுக்கீடு)

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நான் தெளிவாக என்னுடைய தீர்ப்பில் சொல்லிவிட்டேன். அரசாணை இல்லை, மாவட்ட ஆட்சித் தலைவருடைய செயல்முறை நடவடிக்கைதான் என்று சொல்லிவிட்டேன். அந்தத் தீர்ப்பைப் பற்றி, அந்தத் தீர்ப்பை விமர்சித்து நீங்கள் பேச வேண்டாம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்தான், திரு. முஹம்மது அபூபக்கர் பேசும்போது அவர்

சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்தவர், அவர் பேசும் வரை விட்டுவிட்டு பின்னர் பதில் சொல்லுங்கள் என்று சொன்னார். பதில் சொல்வதற்கு முன்பாகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் எழுந்து சென்று விட்டார். இப்பொழுது கேட்பதற்கு வந்திருக்கிறார், நன்றி. ஏனென்றால், அவர் ஒரு கேள்வி கேட்டார். குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவர்களின் ஓட்டுநர் உரிமத்தை இரத்து செய்வீர்களா என்று கேட்டதோடு, குடித்துவிட்டு வண்டி ஓட்டுபவர்களின் ஓட்டுநர் உரிமத்தை இரத்து செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கையையும் வைத்தார். ஏற்கெனவே, அந்தச் சட்டம் அமலில் இருக்கின்றது. குடித்து விட்டு வண்டி ஓட்டுபவர்களின் ஓட்டுநர் உரிமத்தை மூன்று முறை Interim suspension அதாவது தற்காலிகமாக நீக்கம் செய்யலாம். அதற்குப் பின்னால் மறுபடியும் அப்படிச் செய்து மாட்டிக்கொண்டார் என்று சொன்னால், நிரந்தரமாகவே அவருடைய ஓட்டுநர் உரிமத்தை இரத்து செய்து விடலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் பேசுகின்றபொழுது, "2003 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது" என்று சொன்னேன். அதை 1993–என திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், பேசி முடித்தவுடன் வெளிநடப்பு செய்து விட்டார்கள். தற்போது அவர் திரும்பி வந்திருப்பதால் அவர் கேட்டதற்குப் பதில் சொல்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011 தேர்தல் நேரத்திலே, தேர்தல் வாக்குறுதியிலே சுய உதவிக் குழு குறித்துச் சொன்னது பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசினார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பாகக் கடனைப் பற்றிப் பேசினீர்கள், 25 சதவிகிதம் மானியம் என அறிவித்தீர்கள், அது என்னவாயிற்று என்று கேட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தளவில், 2011–ல்

*54 வாக்குறுதிகளைத் தந்தார்கள். அந்த 54 வாக்குறுதிகளை நிறைவேற்றியவர் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, இன்றைக்கு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் கேட்டது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் ரூ.114.12 கோடி. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்க நிதி ரூ.78.17 கோடி. அதுபோல, கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி ரூ.262.26 கோடி. ஆகமொத்தம் ரூ.404.18 கோடி. சுய உதவிக் குழுக்களுக்கு 10 இலட்சம் ரூபாய் கடன், 25 சதவிகிதம் மானியம் என்று சொன்னீர்களே என்று கேட்டார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் 25 சதவிகிதம் மானியம் என்று அறிவித்தார்கள். ஆனால், வறுமையில் இருக்கக்கூடிய குழுக்களுக்காக அந்த 10 இலட்சத்திற்கும் முழுமையாக 100 சதவிகித மானியத்தை தாயுள்ளத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அந்த 10 இலட்சம் ரூபாயில் முதலில் ரூபாய் 4 இலட்சம், அதற்குப் பின்னால் ரூபாய் 4 இலட்சம், அதற்குப் பின்னால் ரூபாய் 2 இலட்சம் என்று முழுமையாக 100 சதவிகித மானியம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதுபோல, இன்றைக்கு முக்கியமான ஒரு* subject-*ஐ சொல்கிறேன். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் சுய உதவிக் குழுக்களுக்கு தராத வங்கிக் கடனை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருப்பது ஒரு சரித்திர சாதனை. அதாவது, எதிர்க் கட்சித் தலைவர் தேர்தல் பிரச்சாரத்திற்காக எங்களுடைய மாவட்டத்திற்கு வந்தார். விதி 110—ன்கீழ் அறிவித்ததை எதையும் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்யவில்லை என்று சொன்னார்கள். உதாரணமாக, ஊராட்சித் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளுக்கு 100 சதவிகிதம், அதாவது அனைத்திற்கும்* G.O. *போட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அப்பொழுதுதான் சுய உதவிக் குழு பற்றிப் பேசினோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011—2012—ல் ரூ.4,000 கோடி, அதற்கடுத்த வருடம் ரூ.4,000 கோடி, அதற்கடுத்த வருடம் ரூ.6,000 கோடி, அதற்கடுத்த வருடம் ரூ.6,000 கோடி, அதற்கடுத்த வருடம் ரூ.6,000 கோடி என 5 வருடங்கள் அறிவித்தார்கள். ஆக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா*

அவர்கள் அறிவித்தது ரூ.26,000 கோடி. ஆனால், கடன் கொடுத்தது ரூ.26,460 கோடி. ரூபாய் 460 கோடியை இன்றைக்கு அதிகமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். கடந்த 5 வருட தி.மு.க. ஆட்சியிலே நீங்கள் கொடுத்தது எவ்வளவு என்று பார்த்தீர்கள் என்றால், 5 வருடங்களுக்கு ரூ.9,838 கோடி கொடுத்தீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்தது ரூ.26,460 கோடி. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் இவ்வாறு வழங்கப்படவில்லை. இந்தியாவிலேயே சரித்திர சாதனையாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு சுய உதவிக் குழுக்களுக்காக வங்கிக் கடன் தந்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசும்போது சில கருத்துகளைச் சொன்னார்கள். சிறுபான்மையினருக்காக ரமலான் மாதத்திலே, நோன்புக் கஞ்சிக்காக அரிசியை கூடுதலாகக் கொடுத்துக் கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த, எல்லோரும் போற்றக்கூடிய, வணக்கத்திற்குரிய மாண்புமிகு அப்துல் கலாம் அவர்கள் ஜனாதிபதியாக மீண்டும் வர வேண்டும் என்று நினைத்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஆனால், அவரை ஜனாதிபதியாக வர வேண்டாம் என்று தடுத்தவர்கள் யார் என்பது நாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தகுதித் தேர்வு குறித்தும், ஆசிரியர் பற்றாக்குறை குறித்தும் மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆசிரியர் தகுதித் தேர்வு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் பேசுகின்றபோதே அதற்கான பதிலை நேற்றையதினம் வழங்கியிருந்தேன். ஆசிரியர் பற்றாக்குறை சம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பள்ளிகளில் தரமான, சிறந்த கல்வி அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு, கற்றலில் தகுதிவாய்ந்த ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு ஏதுவாக வெளிப்படையான போட்டித் தேர்வு முறையை அறிமுகம் செய்து ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை மொத்தம் 79,354 ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இதுவரை 74,316 ஆசிரியர் பணியிடங்கள் நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நிரப்பப்பட்டுள்ளன. இதன்மூலம் ஆசிரியர், மாணவர் விகிதாச்சாரம் தேசிய சராசரி தொடக்க நிலைக் கல்வியில் 1:30 என்பதற்குப் பதிலாக 1:25 ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) நடுநிலைக் கல்வியில் 1:35 என்பதற்குப் பதிலாக 1:24 ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) இடைநிலைக் கல்வியில் 1:40 என்பதற்குப் பதிலாக 1:26 ஆகவும், மேல்நிலைக் கல்வியில் 1:45 என்பதற்குப் பதிலாக 1:36 ஆகவும் உள்ளது. அதேவேளையில் 2006–2011 ஆம் ஆண்டுகளில், முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மொத்தம் 57,595 ஆசிரியர் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டன. ஆசிரியர்கள் நலனில் என்றைக்கும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பள்ளிக் கல்வித் துறையில் அனைத்து ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்புவதற்கு தொடர் நடவடிக்கைகளை எடுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரே நாளில் 20,920 ஆசிரியர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பணி நியமன ஆணையை வழங்கி, தேசிய அளவில் வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே இப்பேரவையில் பதிவு செய்வது எனது கடமை என்று சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, நீங்கள் பேசியதற்குத்தான் அமைச்சர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். திரும்பவும் கேட்டுக் கொண்டேயிருந்தால் விவாதம் போய்க் கொண்டேயிருக்கும். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, சுய உதவிக் குழுக்களுக்கு 10 இலட்சம் ரூபாய் கடன், 25 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று உங்களுடைய தேர்தல் அறிக்கை 2011–ல், 14 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நீங்கள் கடன் கொடுத்திருக்கலாம். எங்களுடைய ஆட்சியில் 9,700 கோடி ரூபாய் கொடுத்தோம். உங்களுடைய ஆட்சியில் 26,000 கோடி ரூபாய் கொடுத்தோம் என்று சொல்கிறீர்கள். நான் கேட்பது, பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவிகிதம் மானியம் கொடுப்பது பற்றி. தமிழ்நாட்டில் எத்தனை சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன? அத்தனைக் குழுக்களுக்கும் நீங்கள் 25 சதவிகிதம் மானியம் கொடுத்தீர்களா என்றுதான் கேட்கின்றேன். அதுமட்டுமல்ல, நீங்கள் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்குத்தான் 10 இலட்சம் ரூபாய் மானியம் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதில் ஏழை, மிகவும் ஏழை என்று கிராமத்தில் ஒரு குழுவை உருவாக்கி அந்தப் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். நான் கேட்பது, சுய உதவிக் குழுக்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த 25 சதவிகிதம் மானியம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது சமுதாய முதலீட்டு சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு, ஊராட்சி அளவில் கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன். அதேபோல் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள்; அது அற்புதமான திட்டம். (குறுக்கீடுகள்)

*அதாவது, எந்தக் குழுக்களுக்குமே. . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ஒரு வரைமுறை இருக்கிறது. (குறுக்கீடுகள்) கேளுங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் எத்தனைபேர் இருக்கிறீர்கள்? 98 பேர்தான் இருக்கிறீர்கள். நாங்கள் எவ்வளவுபேர் இருக்கிறோம்? சும்மா எதற்கெடுத்தாலும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்கிறேன் என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 6,14,000 குழுக்கள் இருக்கின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் கேட்ட கேள்விக்குத்தானே மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நீங்கள் கேள்வி கேட்டதற்கு என்ன அர்த்தம் இருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். பிறகு உங்கள் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இல்லையென்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி**: *அந்த சுய உதவிக் குழுக்களில் 92,84,000 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில், ஒவ்வொருவரும் ஒரு தொழில் செய்கிறார்கள். ஒருவர் ஒரு இலட்சம் ரூபாயில் ஒரு தொழில் செய்வார். வேறு ஒருவர் 10 இலட்சம் ரூபாயில் ஒரு தொழில் செய்வார். ஒவ்வொருவருக்கும் ஒரு வரையறை இருக்கிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழ் என்று ஒவ்வொருவருக்கும் ஒரு வரையறையை வைத்து, ரூ.10 இலட்சம் வழங்க வேண்டுமென்று சொன்னதை ரூ.4 இலட்சம் ரூ.2 இலட்சம், ரூ.4 இலட்சம் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். அதில் 25 சதவிகிதம் மானியமாகத் தருகிறேன் என்று சொன்னதை 100 சதவிகிதம் மானியமாகத் தந்திருக்கிறார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதைத்தான் சொல்ல வருகிறேன். அதேபோல், இப்போது 5 வருடங்களாகப் பார்த்தீர்களென்றால் 26 ஆயிரத்து 460 கோடி ரூபாயை சுய உதவிக் குழுக்களுக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரிவு. இந்தக் குழுவிற்கு இந்தத் தகுதி, இந்தக் குழுவிற்கு இந்தத் தகுதி என்ற அடிப்படையிலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு வங்கிக் கடன் கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ்... (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் உட்கார்ந்து கொண்டே பேசினால் எப்படி? என்ன இதெல்லாம்?

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் முதியோர்களுக்கான விலையில்லா பேருந்துப் பயண அட்டை பற்றி குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் senior citizen pass அதாவது, விலையில்லாத முதியோர் பேருந்து பயண அட்டை முதற்கட்டமாக சென்னை மாநகருக்கு மட்டும் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையிலே 24–7–2016 வரை 2,53,536 நபர்களுக்கு விலையில்லா பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பயன்படுத்தி அவர்கள் 24–7–2016 வரை 71,96,981 முறை பயணம் செய்திருக்கிறார்கள். அதனுடைய மதிப்பு ரூ.10,75,77,034 என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அது படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். சொன்னதைச் செய்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லாததையும் செய்யக்கூடியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சிக் கொறடா, இதிலெல்லாம் ஒன்றுமில்லை, உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள்.

***திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்திலே கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கும்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற திருவள்ளுவரின் திருவாக்குப்படி, இரண்டாவது முறையாக இந்தத் தமிழகத்தை ஆண்ட ஆட்சி தொடர்ந்து ஆள்வதற்கான ஓர் அங்கீகாரத்தை வழங்கிய ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களுக்கும், அந்த அரியணையிலே வீற்றிருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய முக்குலத்தோர் புலிப்படையின் சார்பாகவும், நான் சார்ந்த திருவாடனை தொகுதியினுடைய மக்கள் சார்பாகவும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிவித்த தேர்தல் வாக்குறுதிகள் சிலவற்றை முதல் கையெழுத்திலேயே நிறைவேற்றியதைத் தொடர்ந்து, அள்ள அள்ள அமுதாக சுரக்கக்கூடிய அமுதசுரபியாக 2016–2017–க்கான இந்த நிதிநிலை அறிக்கையை நான் பார்க்கின்றேன். 1954–ல் இலங்கையிலே மாணவர்களுடைய கல்விக்கான இட ஒதுக்கீட்டில் ஏற்பட்ட ஒரு பிரச்சினையைத் தொடர்ந்து 1974–ல் இந்தியாவிலே காங்கிரஸ் சர்க்காரும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சியில் இருந்தபோது கச்சத் தீவை தாரை வார்த்ததால் இலங்கை அரசு தமிழக மீனவர்களை அடிக்கடி சிறைபிடிக்கக்கூடிய பிரச்சினை தொடர்ந்து வருகிறது. அதற்குப் பிறகு, 2009–ல் மத்தியில் காங்கிரஸும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சியில் இருந்தபோதுதான் இலங்கையில் ஒரு மூத்த இனம், மொழி சார்ந்த இனம், இன்றைக்கு உலகம் முழுவதும் இருக்கக்கூடிய பரந்த ஒரு இனமான இலங்கைத் தமிழினம் முற்றிலுமாக அழியக்கூடிய கொடுமைகள் எல்லாம் நடந்தன. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் இவர்கள். இலங்கைப் பிரச்சினையைத் தொடர்ந்து, அகதிகளாகத் தமிழகத்திற்கு வந்தவர்களை அரவணைத்ததோடு மட்டுமல்லாது அவர்கள் அத்தனைப் பேருக்கும் 108 அகதிகள் முகாம்களின் மூலமாக ரூ.106 கோடி அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததோடு மட்டுமல்லாது, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய

கல்வியையும், அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையையும், அவர்களுடைய எதிர்காலத்தையும் தீர்மானம் செய்திருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் சார்பாகவும், என் முக்குலத்தோர் புலிப்படையின் சார்பாகவும், இந்தத் தருணத்திலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–55*

அதுமட்டுமல்ல, இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். நிலம் இல்லாத, வீடு இல்லாத ஏழைகளுக்கு கிட்டத்தட்ட 3,50,000 பேருக்கு இலவச வீட்டுமனையை வழங்கியிருக்கக்கூடிய ஒரே தலைவியாக (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, வரக்கூடிய 5 ஆண்டுகளில், வீடு இல்லாத ஏழைகளுக்கு 10 இலட்சம் வீடுகள் கொடுப்பதாக ஓர் அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாது, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே ஆட்சிக்கு வந்து கிட்டத்தட்ட 60 நாட்களைத் தாண்டி செல்லக்கூடிய இந்தத் தருணத்திலே, முதியோர் ஓய்வூதியத் திட்டங்களையும், மக்களுக்கு எந்தவிதமான திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்தாமல் இருக்கிறது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், அவரைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் இரண்டு நாட்களுக்கு முன்பாக இங்கே பதிவு செய்தார்கள். அவர்களைப் பொறுத்தவரை நான் புதியவனாக இருந்தாலும்கூட, திருவாடனை தொகுதியிலே நான் தேர்ந்தெடுக்கப்பட்டு, இரண்டு முறை தொடர்ந்து நடைபெறும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சராக இருக்கக்கூடிய திரு. மணிகண்டன் அவர்களுடைய தலைமையிலும், மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கக்கூடிய திரு. நடராஜன் அவர்களுடைய தலைமையிலும், 25–6–2016 அன்று கிட்டத்தட்ட 1,172 பயனாளிகள் பயன்பெறக்கூடிய வகையில் ரூ.1,38,69,970/– மதிப்பீட்டில் சலுகைகள், நலத் திட்டங்கள் வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு முறை ஆட்சிப் பொறுப்பை ஏற்று 60 நாட்களைக் கடந்த சூழ்நிலையிலே திட்டங்களை

நிறைவேற்றியிருக்கக்கூடிய இந்த அரசு நிச்சயமாகத் தொடர்ந்து மக்களுக்கான பணியைச் செய்யும். 'மக்களுக்காக நான், மக்களால் நான்' என்ற தாரக மந்திரத்தை கையிலேயெடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து சமுதாய மக்களுக்கும், அனைத்து மொழி சார்ந்த மக்களுக்கும், அனைத்து மதம் சார்ந்த மக்களுக்கும், ஒரே தலைவியாக, ஒப்பற்ற தலைவியாக இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய செயல்பாடுகளை நாம் பாராட்டித்தான் ஆக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இந்த மன்றம் எத்தனையோ பாரம்பரியமிக்க மன்றமாக விளங்கியிருக்கிறது. இதே காலகட்டத்தில் 1952–ல் இந்த மன்றத்திலே இராஜாஜி அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அந்தத் தருணத்திலே, கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. கல்யாண சுந்தரம் என்பவர். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சற்று பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். ஏதாவது ஆட்சேபணை இருந்தால் பிறகு பேசலாம். (குறுக்கீடு) திரு. கருணாஸ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** இராஜாஜி அவர்கள் இந்த மாமன்றத்திலே முதலமைச்சராக இருந்திருக்கிறார். கூர்ந்த அறிவும், பரந்த மனப்பான்மையும் இருப்பது அரசியலுக்கு முக்கியம் என்பது அனைவருக்கும் தெரியும் என்று நான் நினைக்கிறேன். எந்த ஒரு கட்சியாக இருந்தாலும், எந்த ஒரு தலைமையாக இருந்தாலும், கூர்ந்த அறிவும், பரந்த சிந்தனையும், பரந்த மனப்பான்மையும் வேண்டும்.

1952–ல் அன்றைக்கு திருச்சி மத்திய தொகுதியினுடைய வேட்பாளராக வெற்றிபெற்ற கம்யூனிஸ்டு கட்சியின் கல்யாண சுந்தரம் என்பவர், இங்கே ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்பினார். அது என்னவாக இருந்தது என்று பார்த்தால், மூன்று கோடி ரூபாயை காவல் துறைக்கு ஒதுக்கியதே தேவையற்றது என்கின்ற நிலை அன்றைக்கு இருந்திருக்கிறது. அன்றைக்கு தமிழகத்தினுடைய நிலை, வருமான ரீதியாக, தொழில் ரீதியாக மக்கள் வாழ்ந்த அந்தக் காலகட்டத்தில் அப்படியிருந்திருக்கிறது. அதேபோல், 1967 காலகட்டங்களிலே வந்த பேரறிஞர் அண்ணா

அவர்கள் லாட்டரி டிக்கெட்டை தமிழகத்திலே உருவாக்கினார். (குறுக்கீடு) லாட்டரி டிக்கெட்டை தமிழகத்திலே உருவாக்கும்பொழுது, ஒரு இலட்சம் ரூபாய் முதல் பரிசு, ‘விழுந்தால் வீட்டுக்கு, இல்லையேல் நாட்டுக்கு’ என்று சொன்னாரே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும்.

*பிற்பகல் 1–00*

**திரு. சே. கருணாஸ்:** தமிழகத்திலே அது உருவாக்கப்பட்டதா, இல்லையா? கச்சேரி ரோட்டிலே இருக்கக்கூடிய ‘இயற்கை’ படத்தினுடைய இயக்குநர் ஜெகந்நாதனுடைய தாய்க்குத்தானே அந்த முதல் பரிசு விழுந்தது. நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு மாநிலத்தினுடைய நிதி வருமானத்தை உருவாக்குவதற்காக அரசு பல திட்டங்களை யோசிக்கிறது. ஆனால், வரியில்லாத ஒரு திட்டத்தை, வரியே இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இத்தனை இலட்சம் பளு, சுமைகள் இருந்தாலும்கூட, அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்த வேண்டும்; அதேநேரத்தில், ஏழைகள் எந்தவொரு சூழ்நிலையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவே வரியே இல்லாத ஒரு நலத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி செயல்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தீர்களேயானால், தேர்தல் அறிக்கையிலே அறிவித்த அத்தனை நலத் திட்டங்களும் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்த இந்தியாவிலேயே எனக்குத் தெரிந்து தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்தவற்றை, உடனடியாக பதவியேற்றவுடனேயே செயல்படுத்திக் காட்டிய ஓர் அரசாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இருப்பதற்குக் காரணம் இல்லையென்றுதான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் பொறுத்தவரை, நான் இந்த அவைக்குப் புதியவன், இளையவன். என்னுடைய தொகுதி சார்ந்த மக்கள் மட்டுமல்லாது, ஒட்டுமொத்த முக்குலத்தோர் சமுதாய

*மக்களுக்காகவும் போராடக்கூடிய ஓர் இளைஞனாக இந்த இடத்திலே பணியாற்ற எனக்கு ஓர் அற்புதமான வாய்ப்பை வழங்கிய காரணத்தினால், நான் நிச்சயமாக இந்த அமைப்பிற்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமைக்கும் என்றைக்கும் விசுவாசமாக இருப்பேன் என்பதை நான் உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதேநேரத்தில் இங்கே இருப்பவர்கள் அத்தனைபேரும் கல்வியாளர்கள், படித்தவர்கள். உங்கள் அத்தனைபேர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான். ஓர் அரசு செய்கின்ற நலத் திட்டங்களை விமர்சனம் செய்வதும், அந்த அரசு சரியான பாதையிலே செல்வதற்கான அணுகுமுறைகளையும், வழிமுறைகளையும் சொல்வதுதான் எதிர்க்கட்சிகளுடைய கடமைகளாக இருக்க வேண்டும், ஜனநாயகத்தை விரும்புகின்ற ஒவ்வொருவருடைய தனித்துவமாகவும் இருக்க வேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்திற்கு வாய்ப்பில்லை என்று நினைக்கிறேன்.*

*அதே தருணத்திலே, ஒரு ஆற்றிலே நீர்ச்சுழல் ஏற்படுகிறது. அந்த நீர்ச்சுழலிலே ஒரு தேள் சிக்கிக் கொண்டிருக்கிறது. அதை ஒரு வழிப்போக்கர் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்த வழியிலே வந்த ஒரு பெண் துறவி அந்தத் தேளைப் பார்த்து, அதைக் காப்பாற்றுவதற்காக கையில் எடுக்கிறார். எடுக்கும்போது அந்தத் தேள் அவரைக் கொட்டி விடுகிறது. உடனே, தூக்கிப் போடுகிறார். அந்த வழிப்போக்கர் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீர்ச்சூழலிலே சிக்கிக் கொண்டிருக்கின்ற அந்தத் தேளைக் காப்பாற்ற மீண்டும் அந்தப் பெண் துறவி முற்படும்போது, மீண்டும் அது கொட்டுகிறது. அப்போது அங்கே இருக்கின்ற வழிப்போக்கர், 'ஏ பெண் துறவியே அந்தத் தேள் உன்னைக் கொட்டுகிறது என்பது உனக்குத் தெரிந்தும், மீண்டும், மீண்டும் ஏன் நீ இந்தச் செய்கையைச் செய்து கொண்டிருக்கிறாய்' என்று கேட்கிறார். அப்போது அந்தப் பெண் துறவி சொன்னது ஒன்றே ஒன்றுதான்; 'இந்த நீர்ச்சுழலிலே சிக்கி, தன் உயிரை மாய்த்துக்கொள்ள இருக்கிற இந்தத் தேளைக் காப்பாற்ற வேண்டுமென்ற குணம் உடையவள் நான். எத்தனை முறை காப்பற்ற வந்தாலும் கொட்டும் குணமுடையது தேள்' என்று சொன்னார். ஆக, எதைச் செய்தாலும் அதைக் குறை சொல்ல வேண்டுமென்ற பார்வையிலே பார்க்கக்கூடிய எண்ணம்*

உடையவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள் என்பதைத்தான் இந்த இடத்திலே நான் வெளிப்படையாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், இந்த விவாத மன்றங்கள், இந்த மாமன்றங்கள் மக்களுக்கான பணியைச் செய்கின்ற ஒரு மன்றமாக இருக்க வேண்டும். மக்களுக்கான மன்றமாக இருக்க வேண்டும்.

தமிழினுடைய வளர்ச்சிக்காக 32.94 கோடி ரூபாயை ஒதுக்கியதோடு மட்டுமல்லாது, உலகத் தமிழ்ச் சங்கத்தினுடைய விருதாகவும், அம்மா அவர்களுடைய இலக்கிய விருதாகவும் அறிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த ஆட்சியிலே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி நான் நிறைய விஷயங்களை சொல்லிக் கொண்டிருக்கலாம்.

அதே தருணத்திலே நான் ஒன்றே ஒன்றைக் கேட்கிறேன். சராசரி ஒரு இளைஞனாக, இந்த மண்ணிலே பிறந்தவனாக, 47 வயதைக் கடந்தவனாக நான் கேட்கின்ற கேள்வியின் பார்வையில் கேட்பது ஒன்றே ஒன்றுதான். எனக்குத் தெரிந்து மதுரை என்பது முத்தமிழ் நகரம் என்று சொல்வார்கள். மதுரை என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். தமிழ் என்றால் மூன்றெழுத்து, தமிழிலே முத்தமிழ், முக்கடவுள், முக்கனி இப்படித்தான் இருக்கும். அப்பேர்ப்பட்ட நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருக்கவும்.

**திரு. சே. கருணாஸ்:** மதுரையினுடைய மையப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அருமை சகோதரர் திரு. தியாக ராஜன் அவர்கள் கன்னிப் பேச்சு பேசுகின்றபோது அவர்களுடைய ஆங்கிலப் புலமையைப் பார்த்து நான் வியந்தேன். ஏனென்று சொன்னால், எனக்கு ஆங்கிலம் தெரியாது. எனக்குப் புரியவில்லை. ஆனால், இதை சம்பந்தப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழர்கள் எப்படி விமர்சிக்கின்றார்கள் என்றால், ஆங்கிலத்தில் அவர் பேசியதால் எதிர்த்து யாருமே கேள்வி கேட்கவில்லை. ஆகவே, நாங்கள் ஆங்கிலத்தில் பேசுவோம் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) நான் கேட்டதைச் சொல்கிறேன். சொன்னவரையும் என்னால் சொல்ல வைக்க முடியும்.

(குறுக்கீடுகள்) ஆனால், நான் கேட்பது ஒன்றே ஒன்றுதான். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், ஒரு நிமிடம் பொறுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் பேசி முடித்த பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள், அவராக ஏதோ கற்பனை செய்து கொண்டு பேசுவது முறையல்ல. எனவே, தயவுகூர்ந்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேசியதற்கு நீங்கள் எதிர்ப்பு தெரிவித்துவிட்டீர்கள். அது அவைக் குறிப்பில் இருக்கிறது. இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் பேசியதற்கு... (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சிக் கொறடா, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் பேசிய கருத்திற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து, பதிவு செய்திருக்கிறார். அந்த அளவோடு இந்தப் பிரச்சினையை விட்டு விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ், வேறு பிரச்சினை குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் எதிர்ப்பைப் பதிவு செய்துவிட்டார் அல்லவா? நீங்கள் வாய்ப்புக் கேட்டீர்கள். நான் வாய்ப்புக் கொடுக்காமலிருந்தால் தவறு. நான் வாய்ப்புக் கொடுத்தேன். எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய எதிர்ப்பைப் பதிவு செய்துவிட்டார். அவர் பதிவு செய்ததும் இருக்கும்,*

உறுப்பினர் திரு. கருணாஸ் பேசியதும் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ், நீங்கள் வேறு subject–க்குப் போங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சே. கருணாஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ், தமிழர்கள், தமிழர்களுடைய நலன், தமிழுக்காகப் போராடக்கூடிய ஓர் இனம், ஒரு கட்சி, ஓர் அமைப்பு என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று பறைசாற்றிச் சொல்லக்கூடியவர்கள்...* (குறுக்கீடுகள்) *மதுரையிலே, முத்தமிழ்ச் சங்கம் வளர்த்த, 4–வது முத்தமிழ்ச் சங்கம் பாண்டித்துரை தேவரால் உருவாக்கப்பட்ட அந்த மதுரை மண்ணிலே* (மேசையைத் தட்டும் ஒலி) *மதுரை மத்திய தொகுதி வேட்பாளராக நின்று வெற்றி பெற்றவர் எந்த மொழியைப் பேசுவது? மொழி என்பது ஒரு கலை. எத்தனை மொழிகளை யார் வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .* (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுங்கள், விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் கருணாஸ், நீங்கள் வேறு பிரச்சினை குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் கருணாஸ், நீங்கள் இந்த subject–ஐ விட்டுவிட்டு வேறு subject–க்குப் போங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சே. கருணாஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 12,000 கறவைப் பசுக்கள், ஒரு இலட்சம் வெள்ளாடுகள் வழங்குவதற்காக 182.33 கோடி ரூபாய் முதற்கொண்டு, கடற்கரை மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மீன்பிடித் தடைக்கால நிவாரணமான 2,000 ரூபாயை. . .* (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுங்கள், அது ஒரு பெரிய விஷயம் அல்ல.

**திரு. சே. கருணாஸ்:** *5,000 ரூபாயாக உயர்த்தியமைக்காகவும், விலையில்லாத லேப்டாப் வழங்குவதற்கு 800 கோடி ரூபாயை...* (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ், அந்த subject–ஐ விட்டுவிட்டு வேறு subject–ல் பேசுங்கள்.

*பிற்பகல் 1–10*

**திரு. சே. கருணாஸ்:** *சுதந்திர இந்தியாவிலே, விடுதலைக்காகப் போராடி, 1947–ல். . .*

(*திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.*)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய எதிர்ப்பை நான் பதிவு செய்துவிட்டேன் அல்லவா?

**திரு. சே. கருணாஸ்:** *சுதந்திரம் அடைவதற்காக பல இன்னல்களைச் சந்தித்த மகாத்மா காந்தியடிகள். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** *இந்தியாவினுடைய சுதந்திரத்தைப் பற்றி தன்னுடைய கருத்தாகச் சொல்லியது. . .* (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன் அல்லவா, எல்லோரும் கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சே. கருணாஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாஸ், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் பேசியதற்கு... (குறுக்கீடுகள்) நான் முன்பே சொன்னேன். அவர் பேசியதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இப்போது என்ன சொல்ல விரும்புகிறீர்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீக்குவது பற்றி அல்ல. (குறுக்கீடுகள்) உங்களுடைய எதிர்ப்பு என்ன? மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் ஆங்கிலத்திலே இங்கே பேசினார். அதை*

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள் குறிப்பிட்டு, முத்தமிழ் வளர்த்த தமிழ்ச் சங்கம் இருந்த தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆங்கிலத்திலே பேசலாமா என்று கேட்கிறார். திரு. கருணாஸ் அவர்கள் இந்த மன்றத்திற்குப் புதியவர். அவருக்கு இந்த மன்றத்தின் மரபு தெரியாது. நான் உறுப்பினரைக் குறை சொல்லவில்லை. (குறுக்கீடு) ஆனால், அவர் புதியவர் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும் இல்லையா? தாங்கள் அனுமதித்தால் இந்த மன்றத்திலே தெலுங்கில்கூட பேசலாம்; ஆங்கிலத்தில்கூட பேசலாம். எனவே, அவர் பேசியதை. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

**திரு. துரைமுருகன்:** எனவே, தங்களுடைய ஆணையின்பேரில் அவர் ஆங்கிலத்தில் பேசலாம். நான் உண்மையாக ஒத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்களுக்கு இந்த மன்றத்தினுடைய மரபு தெரியாது. அதனால்தான் எங்கள் உறுப்பினர் குறித்துப் பேசினார். ஆகையால், எங்கள் சட்டமன்ற உறுப்பினர் பற்றி, அவர் குறிப்பிட்டுப் பேசியதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அப்படி நீக்கினால், அத்துடன் இந்தப் பிரச்சினை முடிந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கருணாஸ், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள் பேசியதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்தார். (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள். அதை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்தேன். அதற்குப் பின்னால் அவர் பேசியதற்கு, இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தன்னுடைய எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார். ஆகவே, அவை இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கருணாஸ் அவர்கள் பேசியது ஒரு unparliamentary word அல்ல. Unparliamentary word ஆக இருந்தால் நான் அதை நீக்கியிருப்பேன். அது unparliamentary word அல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, அவர் ஒரு கருத்தைச் சொன்னார். அந்தக் கருத்துக்கு... (குறுக்கீடுகள்)

*நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் பேசுகின்றேன், எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி?* (குறுக்கீடுகள்) *எல்லோரும் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர், கொஞ்சம் இருங்கள். நான் பேச வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *எல்லோரும் உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *அதாவது நீங்கள் நீக்க வேண்டும் என்று சொல்வது* unparliamentary word *ஆக இருந்தால் கண்டிப்பாக நான் அதை நீக்க நடவடிக்கை எடுப்பேன். அவர் ஒரு கருத்தைச் சொன்னார், அந்தக் கருத்துக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் தங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வாய்ப்பை நான் கொடுத்தேன். அவர்களும் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார்கள். அந்த அளவில் அந்த இரண்டு தரப்பு கருத்துகளும் அவைக் குறிப்பில் இருக்கும். அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. அதை விட்டு விடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

*பிற்பகல் 1–15*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கருணாஸ் அவர்கள் எங்களுடைய உறுப்பினரின் பெயரைச் சொல்லியிருக்கிறார். எங்கள் உறுப்பினர், ஏற்கெனவே தமிழிலும், ஆங்கிலத்திலும் கலந்து பேசியிருக்கிறார். தமிழில் சரளமாகப் பேச முடியாத காரணத்தால்தான், அவர் ஆங்கிலத்தில் சில விவரங்களைச் சொல்ல வேண்டும் என்ற கட்டாயத்தில் அவர் பேசினார். எனவே, அதை கொச்சைப்படுத்தக்கூடிய வகையிலே, உறுப்பினர் பேசுவது முறையல்ல. அதுமட்டுமல்ல. இதே அவையிலே ஓசூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. கோபிநாத் அவர்கள் தெலுங்கிலே இந்த அவையில் பல முறை பேசியிருக்கின்றார்கள். முதலமைச்சரே அதற்கு எழுந்து பல முறை பதிலும் சொல்லி இருக்கின்றார்கள். அதையெல்லாம் கொச்சைப்படுத்திப் பேசுவது முறையாக இருக்குமா? ஆகவே தயவுகூர்ந்து அதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதுதான் முறையாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாகவே அதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். தமிழிலும் பேசலாம், ஆங்கிலத்திலும்*

பேசலாம், தெலுங்கிலும் பேசலாம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். அந்தப் பதிலை ஏற்றுக்கொண்டு, அதில் நான் ஒன்றும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் பேசியது தவறு என்று நீங்கள் சொல்லிவிட்டீர்கள், அது பதிவாகிவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை, அதற்குமேல் அவர் ஒன்றும் பேசவில்லை. அதில் விமர்சனம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். நான் இங்கே பேசிக் கொண்டிருக்கின்றேன், நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். நான் இதுசம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவரோடு பேசிக் கொண்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். இதில் உங்கள் சப்ஜெக்ட் ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசியது முழுவதையும் நான் record செய்திருக்கின்றேன், அவ்வளவுதான். அதற்குமேல் அதில் என்ன இருக்கின்றது? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள், அத்தியாயம் 14, பொது நடைமுறை விதிகள் தலைப்பிலே, மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பேரவையின் அலுவல், தமிழிலோ, ஆங்கிலத்திலோ இரு மொழிகளிலுமே நடைபெறலாம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே, இப்படி இருக்கக்கூடிய நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் ஆங்கிலத்தில் பேசியதை கொச்சைப்படுத்திப் பேசுவது எப்படி முறையாகும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே நான்தான் உங்களுக்கு சாதகமாக இருக்கின்றேன். ஆனால், என்னை நீங்கள் விடமாட்டேன் என்கின்றீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் இந்த மன்றத்திற்குப் புதியவர் என்பதால் அவர் இப்படிப் பேசிவிட்டார் என்று நான் சொன்னேன். ஆனால், அது இன்னொரு உறுப்பினரை wound செய்வதுபோல் உள்ளது. ஆகையினால் நான்

என்ன சொல்கின்றேன் என்றால் அதை எடுத்துவிடுங்கள், அதில் என்ன பெரிய பிரச்சினை உங்களுக்கு இருக்கின்றது? (குறுக்கீடுகள்) **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேரவைத் தலைவரை இப்படிப் பேசுவது முறையல்ல. அது வேண்டாம், விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். நான் முக்கியமான விஷயம் பேசிக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் எழுந்து, எழுந்து குழப்பம் செய்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள் திருமதி எஸ். விஜயதரணி, என்னுடைய அனுமதி இல்லாமல் இப்படி எழுந்திருப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்) இப்போது திரு. கருணாஸ் பேசியதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அவையில் எந்த மொழியில் வேண்டுமானாலும் பேசலாம் என்பதை மீண்டும், மீண்டும் தெளிவாக இந்த அவையிலே எடுத்து வைத்துவிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், திரு. கருணாஸ் பேசியதிலே unparliamentary word எதுவும் இல்லாததால் அதை நான் நீக்க வேண்டிய அவசியம் வரவில்லை. அப்படியிருந்தால் உங்களது கோரிக்கையை நான் பரிசீலித்திருப்பேன் என்பதைத் தெரிவித்து, மேற்கொண்டு இந்த விவாதத்தை வளர்க்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. கருணாஸ், நீங்கள் வேறு விஷயத்தைப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சே. கருணாஸ்:** மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய சுதந்திரத்தின் விடிவெள்ளியாக. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். இதில் ஒரு சின்ன விஷயம் இருக்கின்றது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது பேரவைத் தலைவரை ** நான் பேசியது உட்பட, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. கருணாஸ், நீங்கள் வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(குறுக்கீடுகள்) திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருகின்றீர்களா, இல்லையா? பேரவைத் தலைவர் நான் நிற்கின்றேன் அல்லவா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருவீர்களா, உட்காரமாட்டீர்களா? (குறுக்கீடுகள்) பரவாயில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகின்றேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னை அவையை நடத்த விடமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திருமதி விஜயதரணி, இது உங்களுக்கு சம்பந்தம் இல்லாத விஷயம். உங்களைப் பற்றிப் பேசவில்லை. நீங்கள் ஏன் எழுந்து இப்படி கலாட்டா செய்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) திரு. பழனிவேல் தியாக ராஜன் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள் பேசியதன் காரணத்தினால், திரு. தியாக ராஜன் தனது விளக்கத்தினைக் கூறலாம். (குறுக்கீடுகள்) திரு. கருணாஸ், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–20*

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாஸ், உட்காருங்கள். திரு. தியாக ராஜன், உங்கள் விளக்கத்தை மட்டும் கூறி உட்காருங்கள்.

***திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிக் கட்சியின் ஒரு நீண்டகாலக் குடும்பமாகவும், தமிழ்ச் சங்கம், திருவள்ளுவர் கழகம் இவை அனைத்தையும் உருவாக்கி வைத்த குடும்பமாகவும் விளங்கும் குடும்பத்திலிருந்து வந்த என்னால் தமிழில் technical subject–ஐப் பேச முடியாது என்கின்ற நிலைமையில், என்மீது குற்றச்சாட்டு சொல்வது நல்லதல்ல. ஏனெனில், எனக்கு இந்த அவையினரால் கொடுக்கப்பட்ட சட்டமன்ற Rules book–ல் 'அனாவசியமாக ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினர்மீது தவறாக ஏதும் சொல்லக் கூடாது' என்று உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் பேசும்போது மெனக்கெட்டு சொன்னேன், இந்த அளவிற்குப் பேசுவதற்கு எனக்குத் தமிழ் தெரியும்; நான் பொருளாதாரத்தை M.I.T University–ல் ஆங்கிலத்தில்தான் படித்தேன். எனக்கு inflationary, expansionary, revenue deficit போன்ற வார்த்தைகளையெல்லாம் தமிழில் பேசத் தெரியாது, அதனால்

நான் ஆங்கிலத்தில் பேசுகிறேன் என்று சொன்னேன். சரி, பரவாயில்லை. நீங்கள் அனைத்தையும் பதிய வைத்துக்கொள்ளுங்கள். ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். நான் பேசிய technical subject பற்றி விவாதிக்க கருணாஸுக்குத் திறமை இருந்தால், எந்த மொழியிலேயும் அவருடன் விவாதம் செய்யத் தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதனைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தியாக ராஜன், நீங்கள் பேசிய விளக்கத்தை அவை பதிவு செய்து கொள்கிறது. (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், இத்துடன் விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) இத்துடன் விட்டுவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர், திரு. கருணாஸ் வேறு பொருள் குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இது சம்பந்தமாகப் பேச வேண்டாம். வேறு பொருள் குறித்துப் பேசுங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எத்தனையோ முதல்வர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய தருணத்தில், இந்தியாவிலேயே அதிகமான மொழி தெரிந்த ஒரே முதல்வராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இருக்கிறார்கள் என்பது அனைவருக்குமே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போதுகூட, ‘நான் பேசுவது முதல்வருக்குப் புரியும்’ என்றுகூட சொன்னார்கள். (குறுக்கீடுகள்) நேற்று அவர் பேசும்போதும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ், போதும். இந்த சப்ஜெக்ட் போதும். உங்கள் உரையை இத்துடன் முடியுங்கள். உரையை முடியுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் பெண்களுக்கான சுதந்திரம் எங்கே இருக்கிறது? என்றைக்கு பெண்கள் நள்ளிரவு 12–00 மணிக்கு தனியாக பாதுகாப்புடன் வெளியே சென்று வீடு திரும்ப முடிகிறதோ அன்றைக்குத்தான் இந்தியா முழு சுதந்திரம் அடைந்ததாக அர்த்தமாகும் என்று மகாத்மா காந்தியடிகள் அன்றைக்குச் சொன்னது உண்மைதானே! (குறுக்கீடுகள்) அவர் சொல்லியது உண்மைதானே! அவர் சொன்ன உண்மையை, கண்ட

கனவை நனவாக்கக்கூடியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். உள்ளாட்சித் தேர்தலிலே பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்தி வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான நிதியையும் ஒதுக்கித் தந்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களை நான் வாழ்த்துகிறேன். இந்த வரி இல்லாத, மக்களுக்கு சுமை ஏற்படுத்தாத நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நாம் வணங்குகின்ற தெய்வங்களே நம்மைக் கைவிட்டாலும்கூட, ஒருவனுடைய முயற்சி அதனைத் திருவினையாக்கும் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு எடுத்துக்காட்டாக, தமிழகத்தின் முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு வழங்கியிருக்கக்கூடிய, அறிவித்திருக்கக்கூடிய எந்தவிதமான திட்டங்களாக இருந்தாலும், அதை நிறைவேற்றுவதில் பலவிதமான பிரச்சினைகள் வந்தாலும், அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

அருமை சகோதரர், உறுப்பினர் அவர்கள் சிறுபான்மையினரைப் பற்றிப் பேசினார். நான் போட்டியிட்ட திருவாடனை தொகுதி, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள், கிறிஸ்தவ மக்கள், முஸ்லிம் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய ஒரு தொகுதிதான். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று சொன்ன அண்ணா அவர்களுடைய வார்த்தை, 1962 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மறுக்கப்படாத ஒரு சூழ்நிலையாக இருந்த அந்தத் தொகுதியில், 12,000–க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருக்கக்கூடிய அந்தத் தொகுதியில் கடந்த தேர்தலில், 6,000–க்கு மேலான வாக்குகள் தொண்டியிலே பதிவாகியிருக்கிறது. அந்த 6,000–க்கும் மேற்பட்ட வாக்குகளில், 3,000–க்கும் மேலான வாக்குகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இரட்டை இலை சின்னத்தில் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மை மக்கள் என்று சொல்லக்கூடிய இஸ்லாம் சமூகத்தைச் சார்ந்த உலமாக்களுக்கும், இங்கிருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களுக்கும், அவர்கள்

செய்திருக்கக்கூடிய நலன்களின் பயனாகத்தான், அந்தத் தொகுதி மக்கள் நன்றியுணர்வோடு இந்தத் தேர்தலில் வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்து அனுப்பியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் பொறுத்தவரையில், நான் வேண்டுகோளாகத்தான் சொன்னேன். நான், எந்த உறுப்பினரையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காகவோ, இல்லை அவர்களைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காகவோ சொல்லவில்லை. (குறுக்கீடு) தமிழர்களே, தமிழர்களே, (குறுக்கீடு) உலகத் தமிழர்களே, உங்களிடத்திலே நான் கேட்பது ஒன்றே ஒன்றுதான். (குறுக்கீடு)

பிற்பகல் 1–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், பேசியது போதும். உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** ஆகவே, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களுக்கான உத்தமத் தலைவியாகவும், மிகவும் பிற்பட்ட நிலையிலே, ஏழ்மை நிலையிலே இருக்கக்கூடிய முதியோர்கள் முதல் குழந்தைகள் வரை, 'கருவறை முதல் கல்லறை வரை' இந்தத் தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து மதம் மற்றும் மொழி சார்ந்த மக்களுக்காக தன்னை வருத்தி, தான் வீழ்ந்தாலும், இந்த மக்களுக்காக வாழ வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு ஆட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி தொடர, மக்கள் நலப் பணி தொடர என் மனப்பூர்வமான வாழ்த்துகளை முக்குலத்தோர் புலிப் படையின் சார்பாகத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் எனக்குப் போட்டியிட வாய்ப்பை வழங்கிய, முத்தமிழ் அறிஞர், தமிழக சட்டமன்ற வரலாற்றில் 13 முறை போட்டியிட்டு, தொடர்ந்து வெற்றியை மட்டுமே பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) 93 வயதிலும் ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து, தமிழுக்கும், தமிழ்

மக்களுக்கும் தொடர்ந்து பணியாற்றிவரும் உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர், கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

இளைஞர்களின் எழுச்சி நாயகர், தமிழக மக்களின் உரிமைக்கு என்றென்றும் குரல் கொடுக்கின்ற வலிமை வாய்ந்த தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும், கழகப் பொருளாளராகவும் எங்களை வழி நடத்துகின்ற உழைப்பின் சிகரம், அமைதியின் திருவுருவம், அன்பு அண்ணன் தளபதி அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மடத்துக்குளம் தொகுதி, துங்காவி கிராமத்தில் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த இராமசாமி, வள்ளியம்மாள் அவர்களுக்கு மகனாகப் பிறந்த எனக்கு இரண்டு முறை துங்காவி ஊராட்சி மன்றத் தலைவராகவும், ஒருமுறை மடத்துக்குளம் ஒன்றிய பெருந்தலைவராகவும் பணியாற்றும் வாய்ப்பை வழங்கியும், மேலும் கழகத்தில் 12 ஆண்டு காலம் மாவட்ட இளைஞர் அணியினுடைய துணை அமைப்பாளராகவும், அதைத் தொடர்ந்து மடத்துக்குளம் ஒன்றிய கழகச் செயலாளராகவும் பணியாற்றும் வாய்ப்பை வழங்கியும், தற்பொழுது மடத்துக்குளம் சட்டப் பேரவைத் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பை வழங்கி, அதில் வெற்றி பெற வைத்து, இன்று வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தில் பேச வாய்ப்பை வழங்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், எங்கள் பாசமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது வெற்றிக்காக அயராது உழைத்த திராவிட முன்னேற்றக் கழக நிருவாகிகளுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், கூட்டணிக் கட்சியினுடைய நிருவாகிகளுக்கும், உற்றார்—உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், அதற்கும் மேலாக பெருவாரியான வாக்குகளை வழங்கி, சட்டமன்றத்தில் பேச வாய்ப்பை அளித்த வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் என் இதயங்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்று நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் பேச வாய்ப்பை வழங்கிய எங்களது கொறடா அவர்களுக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமகிருஷ்ணன், அவர் அரசு கொறடா அல்ல, உங்கள் கட்சிக் கொறடா என்று சொல்லுங்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மன்னிக்கவும். எங்களது கட்சிக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய கன்னிப்பேச்சில் முதலில் தொகுதியின் நிலைமை பற்றி சில செய்திகளை இம்மாமன்றத்தில் கூற விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியானது, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். தொகுதியில் அமராவதி சர்க்கரை ஆலை, தென்னை சார்ந்த தொழில்கள், நூற்பாலைகள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தித் தொழில் நடைபெற்று வருவதுடன் தொகுதிக்கு அருகில் தனியார் காகித ஆலைகளும் இயங்கி வருகின்றன. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, உடுமலை ஊராட்சி ஒன்றியம் மற்றும் மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியங்களில் 46 கிராம ஊராட்சிகள், 5 பேரூராட்சிகள், அமராவதி வனச் சரகம், உடுமலை வனச் சரகத்திற்குட்பட்ட 17 மலைவாழ் மக்கள் குடியிருப்பு செட்டில்மென்ட் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

பிற்பகல் 1–30

மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள PAP பாசனத் திட்டத்தின் மூலம் திருமூர்த்தி அணையிலிருந்து சுமார் 3,80,000 ஏக்கர் பரப்பளவு நீர்ப்பாசன முறையும், அதேபோல அமராவதி அணையிலிருந்து ஆற்றுப் பாசனமும் பிரதானக் கால்வாய் மூலமாக சுமார் 55,000 ஏக்கர் பாசனமும் நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு அணைகளும் இதுவரையில் தூர்வாரப்படாமல் இருப்பதன் காரணமாக சுமார் 1 டி.எம்.சி. தண்ணீரைக்கூட சேமிக்க முடியாத நிலைமை உள்ளது. ஆகவே, அரசு உடனடியாக அந்த இரண்டு அணைகளையும் தூர்வார வேண்டுமாய் தங்களின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தென்மேற்குப் பருவ மழை மற்றும் வடகிழக்குப் பருவமழை பெய்கின்ற காலங்களில் குறைந்த நாட்களிலேயே அமராவதி அணை நிரம்பும் சூழ்நிலை ஏற்படுவதால், நீர்வரத்து

அதிகமுள்ள காலங்களில் நீரைச் சேமிக்க பல ஆண்டு காலமாக ஆய்வில் உள்ள அப்பர்–அமராவதி நீர்த்தேக்கத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமாய் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் கடைசி காலகட்டங்களில், அதாவது, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பாசன சாகுபடிக்கு மேற்படி நீர்த்தேக்க நீர் பயன்படுத்தப்படவும், மின் உற்பத்தியைப் பெருக்கிடவும் இந்தத் திட்டம் வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெளிவுபட கூற விரும்புகின்றேன். ஆகவே, இந்தத் திட்டத்தை முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தினால் வருடம் முழுவதும் திருப்பூர், திண்டுக்கல், கரூர் மாவட்ட விவசாயப் பெருமக்கள் பயன்பெறுவதுடன், நிலத்தடி நீரும் உயரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல PAP பாசனத் திட்டத்திலுள்ள திருமூர்த்தி அணை மற்றும் ஆழியாறு திட்டத்தின் மூலமாக சுமார் 4,30,000 ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது. இந்த அணைக்கு அதிகபட்சமாக தென்மேற்கு பருவமழைக் காலங்களிலும், சிலநேரங்களில் வடகிழக்குப் பருவமழைக் காலங்களிலும் வருகின்ற நீர் வரத்தைச் சேமித்து வைத்து பாசனம் நடைபெற்று வருகிறது. திருமூர்த்தி அணை பாசன முறை 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, மண்டலத்திற்கு 3 அல்லது 4 சுழற்சி முறையில் பாசனத்திற்கு நீர் வழங்கப்பட்டு வருகின்றது. இது பல நேரங்களில் போதுமானதாக இல்லை. அதேபோல முழுமையான விவசாய உற்பத்தி செய்ய முடியாத நிலையும் உள்ளது. ஆகவே, PAP பாசனத் திட்டம் துவங்கிய 1958 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலுள்ள ஆனைமலை மற்றும் நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம் வருடம் முழுவதும் திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்கள் முழுமையான பயனை அடையும். ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல பொதுமக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையான அமராவதி அணை மற்றும் திருமூர்த்தி அணையை சுற்றுலாத் தலமாக மாற்றித் தரும்படி இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் தேங்காய், நெல், கரும்பு, காய்கறி மற்றும் பழவகைகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில், கடந்த சில ஆண்டுகளாக

தேங்காய்க்கு உரிய விலை கிடைப்பதில்லை. ஆனால், கொப்பரையை அரசு கொள்முதல் செய்கின்றது. இருந்தாலும், 90 சதவிகித விவசாயிகள் கொப்பரையை உற்பத்தி செய்ய முடியாது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். ஆகவே, கொப்பரை கொள்முதலுக்குப் பதிலாக தேங்காயை அரசே கொள்முதல் செய்தால் 100 சதவிகித விவசாயிகள் நேரடியாகப் பயன்பெறக்கூடிய வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, தேங்காயை நேரடியாக அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, எனது தொகுதிக்குட்பட்ட சோழமாதேவி, வேடப்பட்டி, குமரலிங்கம் பகுதிகளில் அரசு கொள்முதல் நிலையங்கள் நாள் ஒன்றுக்கு குறைந்த அளவே நெல்லைக் கொள்முதல் செய்து வருகின்றன. இதுவும் குறுகிய காலத்தில் நிறுத்தப்படுவதால் விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றார்கள். ஆகவே, அறுவடைக் காலங்கள் முழுவதும் நெல் கொள்முதல் செய்திட வேண்டுமாய் தங்கள் மூலமாக இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், இங்கு உற்பத்தியாகும் தக்காளி உள்ளிட்ட பழவகைகளை, அதிகமாக உற்பத்தியாகும் காலங்களில் சேமித்து வைக்க ஏதுவாக, அரசு நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளவாறு திருப்பூர் மாவட்டத்தில், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் குளிர்சாதன பதனிடும் கிடங்கு அமைத்திட வேண்டுமாய் தங்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1–35*

அதேபோல, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் அமராவதி சர்க்கரை ஆலை மூலமாக கரும்பு அறுவடை செய்யப்பட்டு, சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த ஆண்டு அந்த ஆலையில் சுமார் 5,600 ஏக்கர் கரும்பைப் பதிவு செய்து, சுமார் 2½ இலட்சம் டன் கரும்பு அரைக்க வேண்டிய சூழ்நிலையில், சுமார் 1½ இலட்சம் டன் கரும்புக்கு மட்டும் அறுவடை முடிந்து, இன்னும் 1 இலட்சம் டன் கரும்பு அறுவடை செய்ய வேண்டிய சூழ்நிலையில், 90 சதவிகிதம் காய்ந்த நிலையில் கரும்புகள் இருப்பதால் விவசாயிகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். ஆகவே, உடனடியாக அவர்களுக்கு தகுந்த

இழப்பீட்டை வழங்க வேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி மில்லின் வளர்ச்சிக்காக Wind Farm காற்றாலைத் திட்டம் அமைப்பதற்கு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி, பல ஆண்டுகளாக இன்னும் திரும்பி வராமல், அனுமதி பெறாமல் இருக்கின்றன.

அமராவதி சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், தமிழகத்திலேயே சிறந்த முறையில் செயல்படுகின்ற ஒரு மில்லாகும். அந்த மில்லுக்குத் தேவையான நீரை அமராவதி ஆற்றிலிருந்து பெறுகின்றார்கள். அமராவதி அணைக்கருகில் உள்ள குமணன்துறை என்ற இடத்திலிருந்து அந்த நீரைப் பெற்றால், சர்க்கரை உற்பத்தித் திட்டத்திற்கான செலவு குறையும் எனக் கூறி, அந்த திட்டத்திற்கும் அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கும் பல ஆண்டுகளாக அனுமதி வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, உடனடியாக அதற்கான அனுமதியை வழங்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் வாக்கு சேகரிக்க சென்ற நேரத்திலும், நன்றி தெரிவிக்கச் சென்றபோதும், மேலும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போதும், அனைத்துக் கிராமங்களிலும் பெண்களுக்கென்று தனியாக சுகாதார வளாகம் வேண்டுமென்று பொது மக்கள் வலியுறுத்திக் கேட்கின்றார்கள். ஆகவே, இதற்கென்று அரசு சிறப்பான ஒரு திட்டத்தை வகுத்து, அனைத்து கிராமங்களிலும், முதன்மையாக சுகாதார வளாகத் திட்டத்தை அரசே நேரடியாக செயல்படுத்தித் தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஊதியம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வாரா வாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் ஊதியம் வழங்கப்படவில்லை என்றும், இதனால் அவர்கள் அன்றாட வாழ்க்கையினை நடத்துவதற்கு சிரமப்படுவதாகவும் மிகவும் வேதனையுடன் தெரிவித்தார்கள். ஆகவே, அரசு அவர்களுடைய ஊதியத்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்

வழங்கியது போன்று வாரம் ஒரு முறை வழங்கி, அவர்களுடைய துயரைத் துடைக்குமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சியிலும் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில், ஊராட்சிக்கு ஒரு சமுதாய நலக் கூடம் என்ற சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி, முழுமையாக தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டுமாய் இந்த நேரத்தில் அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மக்கள் நல்வாழ்வு. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில், மடத்துக்குளம் அரசு மருத்துவமனை கட்டடப் பணிக்காக அரசு ஒதுக்கீடு செய்த தொகையில் சுமார் 30 இலட்சம் ரூபாயைக் குறைத்து விட்டதாகக் கூறுகின்றார்கள். ஆகவே, அதற்குரிய தொகையை முழுமையாக இந்த அரசு வழங்க வேண்டும். அரசு மருத்துவமனையில் Genset வசதி தேவைப்படுகிறது. அதனை உடனடியாக நிறுவித் தர வேண்டும். ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு ஆய்வகம் மற்றும் அவசர கால ஊர்தி வழங்க வேண்டும். காலிப் பணியிடங்களாக உள்ள மருந்தாளுநர்கள், ஆய்வக உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். கணியூர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட PHC ஆக தரம் உயர்த்தப்பட வேண்டும். மேலும், அதற்கு சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தால், உடனடியாக சுற்றுச்சுவர் மற்றும் குடிநீர் வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும். குடும்ப நல அறுவை சிகிச்சை செய்த பின்பு கவனிப்பு அறை அமைத்திட வேண்டும். ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியாக ஊசி போடுவதற்கான அறையும், அலுவலகப் பணியாளர்களுக்கு என தனி அறையும் அமைத்துத் தர வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில், அவசரகால ஊர்திக்கான ஓட்டுநர் பணியிடம் பல நாட்களாக காலியாக இருக்கின்றது. அலுவலக ஆய்வக உதவியாளர் பணியிடமும் காலியாக உள்ளது. அவற்றை நிரப்ப வேண்டும். வாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும். துங்காவி PHC–க்கு Ultra scan machine வழங்கப்பட வேண்டும்.

மலைவாழ் மக்களுக்காக எரிசாணம்பட்டி PHC–க்கு தனியாக ஒரு வாகனம் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால் அங்கிருந்து சுமார் 30, 40 கிலோ மீட்டர் வரை அந்த மலைவாழ் மக்கள் தாங்கள் வாழ்கின்ற பகுதிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, உடனடியாகக் கவனம் செலுத்தி, தனியாக ஒரு வாகனத்தைப் பெற்றுத் தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொது மக்களின் பயன்பாட்டிற்கென கழிப்பிட வசதிகள், சாய்தள நடைபாதைகள் உடனடியாக அமைத்துத் தர வேண்டும். அமராவதி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகளுக்கென காத்திருப்பு அறைகள் கட்டித் தரப்பட வேண்டும். மடத்துக்குளம் தொகுதியிலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள கிராம சுகாதார செவிலியர் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்பட வேண்டுமென இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மின் வாரியம். நமது அமைச்சர் எப்போது பேசினாலும் தமிழகத்தை மின் மிகை மாநிலம் என்று கூறுகின்றார்கள். சிறு, குறு தொழில் புரிகின்றவர்கள் வளர்ச்சி அடையும் வகையில் சோழமாதேவி, கணியூர், காரத்தொழுவு, எரிசாணம்பட்டி, குறிச்சிக்கோட்டை, தேவனூர்புதூர் ஆகிய பகுதிகளில் சிறுதொழில்கள் மேம்பட தொடர் மும்முனை மின்சாரத்தை இந்த அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–40

மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியின் கடைக்கோடியிலுள்ள தேவனூர்புதூர் ஊராட்சியில் காவல் நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். மடத்துக்குளம் தொகுதியிலுள்ள தாந்தோனி கிராமம் மற்றும் மெட்ராத்திக் கிராமம் ஆகியவை தற்போது உடுமலை வட்டத்திலுள்ள காவல் நிலையத்தின் எல்லையாக இருக்கின்றது. அதை மாற்றியமைத்து கணியூர் காவல் நிலைய எல்லைக்குள் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உடுமலையிலுள்ள அரசுக் கல்லூரியைப் போன்று, மடத்துக்குளம் வட்டத்திலுள்ள மாணவ, மாணவிகளின் அவசியத் தேவையைக் கருத்திற்கொண்டு, அங்கு ஓர் அரசுக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பாக, 12,524 ஊராட்சிகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதாக அறிவித்துள்ளீர்கள். எனவே, பொதுமக்கள், இளைஞர்கள் பயன்படுத்துகின்ற வகையில், தனியாக, ஒன்றிய அளவில், விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சம் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு விளையாட்டு மைதானமாவது அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் கல்வி மாவட்ட நிருவாகத்தை இரண்டாகப் பிரித்து, உடுமலையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுவதற்கான உத்தரவை வழங்க வேண்டும். உடுமலை ஊராட்சி ஒன்றியம், தேவனூர்புதூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் பாடப் பிரிவு அவசியம் துவங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம்தான், தமிழக அரசுக்கு அதிக வரி வருவாயை ஈட்டித் தருகின்றது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அந்த வகையில், திருப்பூர் மாவட்டத்திற்கென அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் சட்டக் கல்லூரியை அமைத்துத் தர இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மடத்துக்குளம் பேரூராட்சியில் அமராவதி ஆறு செல்வதால், கண்ணாடிப்புத்தூர் கிராமத்திலிருந்து விவசாயிகள் அருகிலுள்ள பசுபதிபுத்தூர் கிராமத்திற்குச் செல்வதற்கு, கிட்டத்தட்ட 10 கி.மீ. தூரம் நடந்து, சுற்றிச் செல்லக்கூடிய நிலைமை உள்ளது. எனவே, கண்ணாடிப்புத்தூர் கிராமத்தில், அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள கணக்கன்பாளையம் ஊராட்சி, உடுமலை சட்டமன்றத்

தொகுதியிலுள்ள பெரியகோட்டை ஊராட்சி ஆகிய இரண்டும் நகராட்சிப் பகுதியை ஒட்டியுள்ள வளர்ச்சியடைந்த பகுதிகளாகும். ஆகவே, இந்த இரண்டு ஊராட்சிகளையும், உடுமலை நகராட்சியுடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன். உடுமலை ஊராட்சி ஒன்றியம், 38 ஊராட்சிகளையும், 1 பேரூராட்சியையும் கொண்ட மிகப்பெரிய ஊராட்சி ஒன்றியமாகும். அதை இரண்டாகப் பிரித்து, அரசினுடைய திட்டங்கள் எளிமையாக மக்களைச் சென்றடைவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மடத்துக்குளம் தனி வட்டமாகப் பிரிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, அங்கு தனி தீயணைப்பு நிலையம் ஒன்றை உடனடியாக அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மடத்துக்குளம் வட்டத்தில் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று அரசாணை வழங்கப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையில், ஐந்து ஆண்டுகளில் 223 நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில், மடத்துக்குளம் இடம்பெறுகின்றதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட குமரலிங்கம் பேரூராட்சி மற்றும் எலையமுத்தூர் ஊராட்சிகளில் வாழ்கின்ற காட்டுநாயக்கன் சமுதாயத்திற்கு சாதிச் சான்றிதழ் கிடைக்கவில்லை என்பது பெரிய பிரச்சினையாக உள்ளது. அவர்களுடைய குழந்தைகள் மேல்படிப்பிற்கும், வேலைக்கும் செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது என்பதைத் தெரிவித்து, அவர்களுக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து, உடனடியாக சாதிச் சான்றிதழை வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் மேற்படி சமுதாயத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 80 பேருக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு, மேற்படி சாதிச் சான்றிதழ் தொடர்ந்து வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

சங்கரமநல்லூர் பேரூராட்சி, என்.ஜி.புதூரில் சுகாதார வளாகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டும், சுமார் 3 ஆண்டுகளாக தண்ணீர் வசதி செய்து

தரப்படாமல், மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படாமல் இருக்கின்றது. ஆகவே, தண்ணீர் வசதி செய்து கொடுத்து, உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமாய் இந்த நேரத்தில் அரசை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

திண்டுக்கல்லிலிருந்து கர்நாடகம் வரை செல்கின்ற N.H.209 நெடுஞ்சாலை சம்பந்தமாக, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதே கிட்டத்தட்ட மதிப்பீடு செய்கின்ற சூழ்நிலை இருந்தது. கடந்த 5 ஆண்டுக் காலமாக, மத்திய அரசுடன் இணக்கமாக இல்லாத சூழ்நிலையால் அது நிறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் கருதுகின்றனர். ஆகவே, உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழக நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் அமராவதி வனச் சரகம், உடுமலை வனச் சரகம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் வாழ்கின்ற மலைவாழ் மக்களின் குடியிருப்புகள் 17 இருக்கின்றன. அதில் சுமார் 2,000 பேர் வசிக்கின்றனர். அந்த மக்கள் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாமல் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அவ்விரண்டு வனச் சரக பகுதிகளுக்கும், சிறப்பு நிதி வழங்கி, அங்குள்ள மலைவாழ் மக்களுக்கான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

அதேபோல, மடத்துக்குளம் அருகில் உள்ள தனியார் காகித ஆலை பல்வேறு பொருளாதார நெருக்கடியின் காரணமாக மூடப்பட்டுவிட்டது. அந்தப் பகுதியில் காகித ஆலை தொழிற்சாலையில் பணிபுரிந்த தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதால், அவர்களுடைய துயர் துடைக்கும்பொருட்டு, அரசு சார்பில் காகித ஆலை ஒன்று நிறுவ வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், பூலாங்கிணறு குடிநீர்த் திட்டம், கணக்கம்பாளையம் குடிநீர்த் திட்டம்,

மடத்துக்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய 3 திட்டங்களில் முறையாக குடிநீர் வழங்க முடியாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, இப்போது இருக்கும் மடத்துக்குளம் தொகுதிக்கென்று தனித் திட்டம் செயல்படுத்துவதாக ஆய்வில் இருக்கிறது. அதை உடனடியாக செயல்படுத்தித் தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உடுமலை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் கடந்த 4 ஆண்டுகளாகச் செயல்பட்டு, தேர்தல் காலத்தில் அந்தப் பணிகள் சரியாக இருக்கிறதா என்று ஆய்வு செய்யாமலே அவசரமாக தார்ச் சாலைகள் போடப்பட்டுள்ளன. அந்த சாலையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் எந்த நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் விளக்கமாக தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவை மாவட்டத்தில், கோவை மாநகரத்தில், பீளமேடு பகுதியில், ஹோப் காலேஜ் பகுதியில் போக்குவரத்து நெரிசல் காரணமாக கடந்த சில நாட்களாக போக்குவரத்து மாற்றப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் கடந்த 23–7–2016 அன்று சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. கார்த்திக் அவர்கள் காவல் துறை அதிகாரிகளோடு ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டதை செய்தித்தாள்கள் மூலமாக நான் பார்த்தேன். கோவை மாநகரத்தின் மிக முக்கியமான பகுதியாக பீளமேடு பகுதி, ஹோப் காலேஜ் திகழ்கிறது. கடந்த 10 தினங்களுக்கு முன்பு 4 வழிச்சாலை சந்திக்கக்கூடிய ஜி.ஆர்.ஜி. சிக்னல் சாலையை அடைத்து வேறு மாற்றுப் பாதையை ஏற்படுத்தியதால் பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லக்கூடிய மாணவ, மாணவியர்கள், அலுவலகங்களுக்குச் செல்லக்கூடியவர்கள் குறித்த நேரத்திற்குச் செல்ல முடியாமல் அவதிப்படுகின்றார்கள். பள்ளிக் குழந்தைகளும், வயதான முதியவர்களும் சாலையைக் கடக்க சிரமப்படுகின்றார்கள். எனவே, பொதுமக்களைப் பாதிக்காத வகையில் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். ஹோப் காலேஜ் சிக்னல் பகுதியில், உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, மக்களுடைய மகிழ்ச்சியே அரசினுடைய மகிழ்ச்சி என்று நமது நிதியமைச்சர்

அவர்கள் கூறியுள்ளார்கள். உள்ளபடியே அது உண்மையாக இருந்தால், நான் குறிப்பிட்ட அனைத்துப் பணிகளையும் உடனடியாக நிறைவேற்றித் தருவதற்கான நிதியொதுக்க வேண்டும், இந்நிதிநிலை அறிக்கைக்கு ஆதரவை தெரிவித்து, அனைத்துக் கோரிக்கைகளையும் உடனே நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமூர்த்தி அணையைப் புனரமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் 4.38 கோடி ரூபாய் செலவிலே அங்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது 92 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. அடுத்து, அமராவதி அணையைப் புனரமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்போது 6.03 கோடி ரூபாய் செலவில் பணிகள் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 82 சதவிகிதப் பணிகள் முடிவு பெற்றிருக்கின்றன. வலையபாளையம் கிராமம் பாலாறு 2.21, கோடி ரூபாயில் 50 சதவிகிதப் பணிகள் முடிவு பெற்றிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கரும்பு நடவு பருவத்திற்குண்டான அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், பதிவு செய்யப்பட்ட கரும்பு, வேளாண் பெருமக்களிடம் மொத்தம் ஐந்தரை இலட்சம் டன் கரும்பு இருப்பதாகவும், தற்சமயம் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மூன்றரை இலட்சம் டன் கரும்பு அரவைப் பருவத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்டார்கள். கரும்பு விவசாயம் செய்கின்ற வேளாண் பெருமக்கள் மீது அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எஞ்சியுள்ள

கரும்பினை தனியார் சர்க்கரை ஆலையான பண்ணாரி சர்க்கரை ஆலை உரிமையாளருக்கும், சக்தி சுகர் மில் உரிமையாளருக்கும் அனுப்ப உத்தரவிட்டுள்ளார்கள். வேளாண் பெருமக்களுடைய நலன் காத்து வரும் மாண்புமிகு அம்மா அவர்கள், அங்கு கரும்பு காயாமல் கொண்டு செல்ல வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்துகளைத் தெரிவிக்கின்றபோது, என்.எச்.209 திண்டுக்கல்–கோயம்புத்தூர்–பெங்களூரு சாலை குறித்துப் பேசினார். இதுசம்பந்தமாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் இப்போது விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, இது மாநில அரசினுடைய சாலையல்ல. எனினும், மாநில அரசு, மத்திய அரசுக்கு அனைத்து ஒத்துழைப்பையும் நல்கி வருகிறது.

பிற்பகல் 1–50

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாநில அரசு ஒத்துழைப்பு கொடுக்காத காரணத்தாலே அந்தப் பணியில் சுணக்கம் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். அது தவறு. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் சாலை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற சிறு, குறு தொழில்களுக்கு

உடனடியாக மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மின் மிகை மாநிலம் என்று சொல்லிக்கொண்டிருப்பதால், அதனை வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். மின் மிகை மாநிலம் என்பது உங்கள் அனைவருக்குமே நன்றாகத் தெரியும். உங்கள் ஆட்சிக் காலத்திலே எப்படி இருந்தது, இப்பொழுது எப்படி இருக்கிறது என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல சிறு, குறு தொழில்களுக்கு மின் இணைப்பு எங்கே தர வேண்டியதாக இருந்தாலும், உடனடியாக எங்களுக்குத் தகவல் சொன்னீர்கள் என்று சொன்னால், 15 நாட்களுக்குள் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். சில காரணங்களுக்காகவோ அல்லது கம்பம் போட வேண்டுமென்ற காரணத்திற்காகவோதான் மின்னிணைப்பு கொடுக்கும் பணி நிற்குமேயொழிய, மற்றபடி கேட்கிறவர்களுக்கு 15 நாட்களில் உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுகாதார வளாகம் பற்றிப் பேசினார். ஒவ்வொரு பகுதிக்கும் வாக்கு சேகரிக்கச் செல்லும்போதும் சரி, நன்றி சொல்லச் செல்லும்போதும் சரி அங்குள்ள மக்கள் சுகாதார வளாகம் அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று சொன்னார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–2006 வரை முதலமைச்சராக இருக்கும்போது இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 12,524 ஊராட்சிகளில் 12,796 சுகாதார வளாகங்களை மகளிருக்கென்று அமைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் துணி துவைப்பதற்கு, குளிப்பதற்கு என்று அனைத்து வசதிகளும் இருக்கின்றன. அதன்பிறகு 2006–2011 ஆம் ஆண்டில் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி வந்தபோது, அம்மாவால் அமைக்கப்பட்ட 12,796 வளாகங்களையும் அப்படியே

பராமரிக்காமல் விட்டுவிட்டார்கள். எந்தப் பராமரிப்புப் பணியையும் செய்யவில்லை. அதற்குப்பிறகு மீண்டும் 2011 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, மீண்டும் அந்த 12,796 சுகாதார வளாகங்களுக்கும் ரூ.170 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அவை புனரமைக்கப்பட்டு இன்றைக்குப் பயன்பாட்டில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 770 ஆண்களுக்கான சுகாதார வளாகங்கள் ரூ.35 கோடி செலவில் 2012–2013 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு திறந்தவெளியில் மலம் கழிப்பது என்பது அறவே இருக்கக்கூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.15.17 இலட்சம் செலவில் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இன்றைக்கு ஒவ்வொரு கிராமத்திலும் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் அதிகமாகக் கட்டப்பட்டிருக்கின்றன; மாநகராட்சி, நகராட்சிகளில்கூட கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் சுகாதார வளாகம் கட்டிய பிறகுதான் மற்ற மாநிலங்களிலும் இதனைப் பின்பற்றி சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சமீபத்தில் ஆட்சிக்கு வந்த பாரதிய ஜனதா அரசுகூட, உத்தரப்பிரதேசத்திலே காலைக் கடனைக் கழிக்கச் சென்ற இரண்டு பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டிய சுகாதார வளாகங்களைப் போல அனைத்துப் பகுதிகளிலும் அமைக்க வேண்டுமென்று சுற்றறிக்கையை அனுப்பினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–55*

அதேபோல, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் பற்றிப் பேசினார்கள். அதாவது அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மேற்படி திட்டத்தின்கீழ் பணியாற்றுபவர்களுக்கு வாராவாரம் ஊதியம் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஐந்து வருடங்களாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை சிறப்பான முறையிலே செயல்படுத்தி, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை

*மாநிலமாக உருவாக்கி, கிட்டத்தட்ட 173.81 கோடி மனித சக்தி நாட்களை ஐந்து ஆண்டுகளில் உருவாக்கினார்கள்; இது சரித்திர சாதனை.*

ஒவ்வொரு வருடமும், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இதில் முதலாவது இடத்தில் இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கையின் காரணமாக, பல விருதுகளை தமிழ்நாட்டிற்குக் கொடுத்துள்ளார்கள். அடுத்து, ஊதியம் கொடுப்பதைப் பொறுத்தளவில், உங்கள் ஆட்சிக் காலத்தில் கொடுத்ததைப்போல ஒரு வாரத்திற்குள்ளே கொடுக்க வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை வழங்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், நீங்கள் நேரடியாகக் கொடுத்தீர்கள். அப்போது, பல தவறான முன்னுதாரணங்கள், தவறான முறைகேடுகள் அந்த மாதிரி சூழ்நிலைகள் எல்லாம் உருவாகின. (மேசையைத் தட்டும் ஒலி) பல பத்திரிகைகளில் அவை செய்தியாக வந்திருக்கின்றன, நாங்கள் பதில் சொல்லியிருக்கின்றோம். (குறுக்கீடுகள்) அதற்கு, பின்னர் வருகின்றேன். ஆனால், E.F.M.S. முறையில், மின்னணு நிதி மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசில், 15 நாட்களுக்குள், நேரடியாக வங்கிக் கணக்கில் ஊதியத் தொகை இப்போது சேர்க்கப்படுகிறது. அதைப்போல மத்தியில் ஆட்சி மாற்றம் வந்தபோது, அந்த நேரத்தில், மூன்று மாதங்களாக மத்திய அரசாங்கம் நமது மாநிலத்திற்கு நிதி கொடுக்கவில்லை. அப்போதும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தாயுள்ளத்தோடு 230 கோடி ரூபாயை கொடுத்து, அந்தத் திட்டத்திற்கான ஊதியத் தொகையை உடனடியாக வழங்க உத்தரவிட்டார்கள்.

அதைப்போல குடிநீர்த் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தளவில், இன்றைக்கு மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி மற்றும் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் எல்லாம் அதிகமான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்துள்ளார்கள். அதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உறுப்பினருடைய மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணியூர், குமரலிங்கம், தளி, சங்கரமடநல்லூர், மடத்துக்குளம்

பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. இப்போது 31 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மடத்துக்குளம், சங்கரமடநல்லூர், குமரலிங்கம், கணியூர் பேரூராட்சிகளிலும், மூன்று ஊராட்சிகளுக்குட்பட்ட கிராமங்களுக்கும் 2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட திட்டம்மூலம், 70 லிட்டர் தண்ணீர், நபர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

தற்போது நடைபெற்று வரும் திட்டங்கள். 54.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 158 குடியிருப்புகளுக்கான திட்டத்திற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2013 ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டு, தற்போது இந்தப் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நான் பதில் சொல்லி முடித்த பிறகு, அவரிடம் வேறு ஏதேனும் கேள்வி இருந்தால் கேட்கச் சொல்லுங்கள். நீங்கள் எல்லோரும் பேச வேண்டாம். அவர் ஏதாவது கேள்வி கேட்டால், அவருக்குப் பதில் சொல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம். அதைப்போல, 1.23 இலட்சம் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் தண்ணீர் வழங்கப்படும்.

மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட தளி, சங்கரமடநல்லூர், குமரலிங்கம், கணியூர், மடத்துக்குளம் உள்ளிட்ட 5 பேரூராட்சிகள் மற்றும் மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 251 ஊரகக் குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 18.37 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம் ஆகியவற்றை 119 கோடி ரூபாய் செலவில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அடுத்து, பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். இன்றைக்கு, தமிழகத்திலேயே உடுமலைபேட்டை நகராட்சியில்தான் மிக வேகமாக பாதாள சாக்கடைத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேர்தலுக்கு முன்னால், அப்போது இருந்த சட்டமன்ற உறுப்பினர், அங்கே இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு துணை சபாநாயகர், இப்போது இருக்கக்கூடிய மாண்புமிகு வீட்டு வசதித் துறை

அமைச்சர் இவர்களெல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வேகமாக தார்ச் சாலைப் பணிக்கு நிதி ஒதுக்கப்பட்டு, பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கும் அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைப்பற்றித்தான் உறுப்பினர் பேசினார். ஆக, பாதாள சாக்கடைத் திட்டப் பணி மிக வேகமாக நடந்து வருகிறது. பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தளவில், பல பிரச்சினைகள் இருக்கின்றன. சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல், பைப் லைன் பதித்தல் போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. அவையெல்லாம் இன்றைக்குக் களையப்பட்டு, சிறப்பான முறையில் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைப்போல, ஊராட்சி ஒன்றியங்கள், உள்ளாட்சிகளைப் பிரிப்பது பற்றி கேட்டார்கள். நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி போன்ற அந்தத் திட்டங்கள். . . (குறுக்கீடுகள்) பிரிப்பது பற்றி உறுப்பினர் கேட்டார். அவற்றைப் பிரிப்பதைப் பொறுத்தளவில், அங்கே இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்பு மன்றங்களினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் போன்றோரெல்லாம் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பரிந்துரை அனுப்பப்பட்டு, அதற்குப் பிறகு அரசுக்கு வந்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அவற்றைப் பிரிக்கக்கூடிய நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய கோரிக்கைகளை வைத்தார்கள். அந்த கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டவைகளையும், நிறைவேற்றிக் கொண்டிருக்கிற பணிகளையும் சொல்ல வேண்டியது எங்களுடைய தலையாயக் கடமை. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள், திருப்பூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் என்று சொல்கிறபோது, டெல்டா மாவட்டங்களில் 1,415 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், டெல்டா அல்லாத 16 மாவட்டங்களில் 355 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் 38 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் என மொத்தம் 1,808 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவிற்கிணங்க 16,72,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசினுடைய கட்டுப்பாடுகளையெல்லாம் தளர்த்த வேண்டுமெனக் கோரிக்கை வைத்து, விவசாயிகளுடைய நலனைக் கருதி, நடப்பாண்டில் மட்டும் 104 கோடி ரூபாயை விவசாயிகளுக்கு மானியமாக, ஊக்கத் தொகையாக வழங்கிய தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் இதுவரை 7,786 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. தற்போது, நெல் வரத்திற்கேற்ப 4 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எல்லா மாவட்டங்களிலும் எங்கே நெல் அதிகமாக விளைகிறதோ, அந்த இடங்களிலெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் தேவைக்கேற்ப, திறந்துகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதியளித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் இடத்தில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவையென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக ஆவன செய்து நடவடிக்கை எடுக்குமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, ஜாதிச் சான்றிதழ் தொடர்ந்து வழங்கப்படவில்லை, அவர்களுடைய அரசிலேதான் வழங்கப்பட்டது என்று இங்கே சொன்னார்கள். கடந்த காலங்களிலெல்லாம், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்களைப் பெற வேண்டுமென்று சொன்னால், நாம் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கோ, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கோ, கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கோ செல்ல வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற வகையிலே, முதன்முறையாக, பள்ளிகளிலேயே சான்றிதழ் வழங்குகிற திட்டத்தை தொடங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே ஆறாம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கும் சேர்த்து வழங்கி வருகின்றார்கள். காட்டுநாயக்கன் சான்றிதழ் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். குறிப்பிட்ட இனங்களுக்குச் சான்றிதழ் வழங்குகிறபோது, அதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதை ஆய்வு செய்து, அந்த ஆவணங்கள் சரியாக இருக்கிறபட்சத்திலே, போர்க்கால அடிப்படையில் சான்றிதழ்களை வழங்கி வருகிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், இதுபோன்ற காலதாமதங்களைத் தவிர்ப்பதற்காக, கடந்த காலங்களிலெல்லாம் குறிப்பிட்ட அந்த அதிகாரி மறுப்பாரானால், நீதிமன்றத்திற்குத்தான் பொதுமக்கள் செல்ல வேண்டும். வட்டாட்சியருக்கு சான்றிதழ் வழங்குகிற அதிகாரம் இருக்கிறது; அவர் மறுப்பாரேயானால், கோட்டாட்சியரிடம் செல்லலாம். கோட்டாட்சியர் மறுப்பாரேயானால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் செல்லலாம் என்று மேல்முறையீடு வாய்ப்பினை, appeal provision–ஐ மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதன்முதலாக வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காட்டுநாயக்கன் சான்றிதழ் பெற உரிய ஆவணங்களை அவர்கள் சமர்ப்பித்தால் உடனடியாக வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்

*வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு) இல்லை, இல்லை அவர் கேட்டதற்கு ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாதாள சாக்கடைத் திட்டச் சாலைகள் என்னென்ன* Heading*–ல் சீரமைக்கப்படுகின்றன என்று கேட்டார்கள். 2015–2016–ல் சிறப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் 8 கோடி ரூபாயும், 2016–2017–ல்,* PF *திட்டத்தின்கீழ், அதாவது பொது நிதியிலிருந்தும் எடுக்கப்படுகிறது. வருடாவருடம் ஒவ்வொரு* Head*–லிருந்து எடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 2–05*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்றபொழுது, மடத்துக்குளம் மருத்துவமனையைப் பற்றிக் குறிப்பிட்டு, பணிகளை வேகமாக முடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த கால பொற்கால ஆட்சியில்தான் மடத்துக்குளம் மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அந்தக் கட்டடம் கட்டுவதற்காக ஒரு கோடியே 67 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பணிகளை விரைவிலே முடித்து மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் தங்கள் பொற்கரங்களாலே திறந்து வைப்பார்கள் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, தங்களுடைய சட்டமன்றத் தொகுதியில் இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிராம செவிலியர் பணியிடங்கள், ஓட்டுநர் பணியிடங்கள் அதேபோல Para Medical Staff போன்ற பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தியாவிலேயே மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தை Medical Services Recruitment Board–ஐ உருவாக்கி, இதுவரை 16,761 மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களை நியமனம் செய்திருக்கின்றார்கள். வரலாற்று நிகழ்வாக இதுவரை யாருமே செய்ய முடியாத அளவிற்கு, ஒரே நேரத்தில் 7,243 செவிலியர்களை வெளிப்படையாக, (மேசையைத் தட்டும் ஒலி) நேர்மையான முறையிலே Medical Services Recruitment Board மூலமாகத் தேர்ந்தெடுத்து, பணியிலே அமர்த்தியிருப்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான். நீங்கள் குறிப்பிட்டிருக்கிற காலிப் பணியிடங்களைப் பொறுத்தவரையில், ஒருபுறம் தொடர் நடவடிக்கையாக புதிய பணியிடங்களைத் தேர்வு செய்யக்கூடிய நிலை, இன்னொருபுறம் கலந்தாய்வு மூலமாக எங்கெங்கெல்லாம் காலிப் பணியிடங்கள் ஏற்படுகிறதோ, அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புகின்ற பணியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, காலையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது, திருவள்ளூர் அரசு மருத்துவமனையிலே தற்பொழுது கண் புரை அறுவை சிகிச்சை செய்யும் பணி நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நிறுத்தப்பட்டதற்கும், மேட்டூர் நிகழ்வுக்கும் சம்பந்தம் இல்லை. Civil renovation work, OT renovation work, புனரமைக்கின்ற பணி அங்கே நடந்து கொண்டிருக்கிறது. புனரமைக்கின்ற பணி நடைபெறுகின்ற காரணத்தாலே, அனைத்து அறுவை சிகிச்சைகளும் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டு வாரங்களில் அங்கே கண் புரை அறுவை சிகிச்சை செய்யும் பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் 66

இடங்களில் அரசு சார்பிலே கண் புரை அறுவை சிகிச்சை செய்யும் பணி தற்போது சிறந்த முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் காலையில் அவ்வளவு நேரம் பேசினீர்கள். இடையிடையே பேசினீர்கள். திரும்பவும் வாய்ப்பு கேட்கிறீர்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, ஊராட்சி ஒன்றியங்கள், உள்ளாட்சிகளைப் பிரிப்பதற்கெல்லாம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதல் வேண்டும் என்று கூறியிருக்கிறார். எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஒன்றியங்களைப் பிரிப்பதற்கு, இரண்டு ஒன்றியங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழகத்திலே இதேபோன்று 15 ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் அனுமதிக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவிருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 15 ஊராட்சி ஒன்றியங்களையும் புதிதாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லும்போது தெளிவாகச் சொன்னேன். அப்படி அரசுக்கு ஏதாவது அனுமதிக்காக வந்திருந்தால் கண்டிப்பாக உடனடியாக எடுத்துக்கொள்வோம். இதற்கு முன்னால் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசில் 3 யூனியன்கள் பிரிக்கப்பட்டு வந்திருக்கிறது. மொத்தமாக 15 ஊராட்சிகள் என்று நீங்கள் எந்தக் கணக்கில்

*சொல்கிறீர்கள் என்று தெரியவில்லை. அது ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.எஸ். தென்னரசு, நீங்கள் பேசுங்கள்.*

**திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரம் வாய்ந்த சட்டமன்றப் பேரவையில் நிதிநிலை அறிக்கையில் பேசுகின்ற வாய்ப்பைத் தந்த மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாட்டில் ஆறாவது முறையாக அரியணை ஏறிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு நன்றியை காணிக்கையாக்குகிறேன்.*

*அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் ஆலயத்தில் 1½ கோடி உறுப்பினர்களின் ஆராதனைக்குரிய தெய்வமே, வானோக்கும் பயிருக்கு வாஞ்சையாகிப் பொழியும் மழையே, வளரும் தமிழ் பூமிக்கே, வசந்தத்தை வரவைக்கும் வையகமே, வங்கக் கடலோரம் உறங்குகின்ற வள்ளலின் வாரிசே, அவர் வலது புறத்தில் துயில்கொள்ளும் வள்ளலின் புகழ்கொடியே, வானம் முட்டும் உச்சத்தில் வலம் வர வைத்த வல்லமையே, நாடாளும் பேராற்றல் நல்லோருக்கு உண்டென்று சொன்ன பெருமக்களை குவியலாக்கிப் போராளியாய் நின்றவரே! பெண் விடுதலை என்னும் பெரியாரின் கனவுதனை போராடி வென்றெடுத்த போராளியே! முகில் கிழித்து ஒளி வீசும் முழுமதியே! மூவேந்தரின் நாடுகாக்கும் முத்தமிழின் புகழுரையே! அமுத மொழி தமிழ் காக்கும் அன்பு உள்ளமே! அம்மா நீங்கள் ஆளுகின்ற காலத்தில் நாங்கள் வாழுகிறோம் அம்மா. நீங்கள் ஆள்கின்ற காலத்தில் மட்டுமே நாங்கள் வாழ்கின்ற பாக்கியம் கிடைத்தால் போதும் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வளமைக்கு வழிவகுத்து, வளர்ச்சிக்கு வாய்க்கால் பெருக்கி வள்ளல் தாய் வழங்கிய வரியில்லா நிதிநிலை அறிக்கையில் வழக்கம்போல் வாரி வழங்குவதில் குறையில்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி நிதிநிலை அறிக்கை மீதான எனது உரையைத் தொடர்கின்றேன்.*

*பிற்பகல் 2—10*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை மாபெரும் இயக்கமான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் மூன்று முறை ஈரோடு நகர கழகச் செயலாளராக்கி, மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளராகவும், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றத் தலைவராகவும், ஈரோடு கிழக்கு தொகுதி கழகச் செயலாளராகவும், 2001 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஈரோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்ற வாய்ப்பளித்த தாயே, உங்கள் பாதம்தொட்டு வணங்குகிறேன். இரண்டு முறை என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த ஈரோடு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் 'வெத்துவேட்டு பட்ஜெட்' எனவும், சட்டமன்றத்திற்கே வராத மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் அதாவது அப்பன் 'அம்மா பட்ஜெட்' என்றும், மகன், 'சும்மா பட்ஜெட் என்றும் நிதிநிலை அறிக்கைப் புத்தகத்தை கையிலே வாங்கி பிரித்துப் பார்க்காமலேயே 'வெத்துவேட்டு பட்ஜெட்' என்றும் விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு சொன்னார்களா, இல்லையா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களங்கம் நிறைந்த மனம் உள்ளவர்களுக்கு கம்பராமாயணமும் புரியாது; பங்கம் நிறைந்த மனம் உள்ளவர்களுக்கு பகவத் கீதையும் புரியாது என்பதைப்போல அரசியல் நமைச்சலும், எரிச்சலும் மட்டுமே கொண்டவர்களுக்கு ஆக்கபூர்வ திட்டங்கள், அறிவுபூர்வ நிதிநிலையின் அறிவிப்புகள் புரியாதுதான் அம்மா! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதுபற்றி நான் கேட்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அதுபற்றி கேட்கிறேன், நீங்கள் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அதைக் கேட்டுவிட்டு முடிவு செய்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்ததால் திரு. தென்னரசு அவர்கள் பேசும்போது சரியாகக் கவனிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் நீங்கள் என்னிடம் சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு, நீங்கள் நிதிநிலை அறிக்கைமீது பேசுங்கள்.*

**திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பனும், மகனும் ஆட்சி கிடைக்கவில்லை என்று அழுது புலம்புகிறார்கள். அத்தைக்கு மீசை முளைக்கப் போவதும் இல்லை, சித்தப்பா என்று அழைக்கப்போவதும் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*பிற்பகல் 2–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. சக்கரபாணி அவர்களே, இங்கே பாருங்கள். திரு. சாமி, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) சரி, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். உட்காருங்கள். சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் செல்லுங்கள். நான் சொல்கிறேன். இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) முதலில் போய் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான், ஒரு* side–*ம் இல்லை. சரிசமமாக நடந்துகொள்கிறேன். திரு. சாமி, நீங்கள் பேரவைத் தலைவருக்குக் கட்டுப்பட்டு உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) என்னை வற்புறுத்தாதீர்கள். நீங்கள் அனைவரும் உட்காருங்கள். திரு. தென்னரசு அவர்கள் அந்த வார்த்தையைப் பேசுகிறபொழுது, நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். சரியாகக் கவனிக்கவில்லை. நான் அவைக் குறிப்பை வாங்கிப் பார்த்ததற்குப் பிறகு அதைப்பற்றி நான் சொல்கிறேன். திரு. தென்னரசு, நீங்கள்* Budget *பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) வேறு* Subject *வேண்டாம்.*

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்று சொன்ன தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாக்குக்கேற்ப கல்விக்காக 24,130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள் (குறுக்கீடுகள்) அவையை நடத்தவிடுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை. நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். நான், தெளிவான தீர்ப்பைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதை நான் பார்க்கவில்லை, கேட்கவில்லை. நான் அவைக் குறிப்பை வாங்கிப் பார்த்துவிட்டு, என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள் பொறுமையாக இருங்கள். இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பினை வரவழைத்து, படித்துவிட்டு என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். அதுவரை நீங்கள் என்ன சொன்னாலும் கேட்க முடியாது. அதையெல்லாம், என்ன சொன்னாலும் கேட்க முடியாது. நான் அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 2–20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டு, என்னுடைய தீர்ப்பைச் சொல்வதாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப்

*பார்த்துவிட்டுத்தான் சொல்ல முடியும். பார்க்காமல் சொல்ல முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல யோசனையை இப்போது சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உடனுக்குடன் எழுந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்துவிட்டு தீர்ப்பு வழங்குவதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) திரும்பவும் அந்தப் பிரச்சினையை ஏன் கிளப்புகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நடவடிக்கைக் குறிப்பை அவர் பார்க்கட்டும். பார்த்துவிட்டு அவர் தீர்ப்பு வழங்குவார். (குறுக்கீடுகள்) அதுவரை கொஞ்சம் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள்.*

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்குக்கேற்ப கல்விக்காக *24,130* கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. தென்னரசு, ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எதிர்க்கட்சிக் கொறடா என்ன சொல்கிறீர்கள்? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் அனைவரும் அவரவர் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்களை அவரவர் இருக்கைக்குப் போகச் சொல்லுங்கள். அவரவர் இருக்கைக்குப் போகச் சொல்லிவிட்டு, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் ஏற்கெனவே சட்டமன்றத்தில் பணியாற்றியவர். இப்போது எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் உங்கள் கட்சித் தலைவரைப் பற்றியோ, மற்றவர்களைப் பற்றியோ குறை சொல்லிப் பேசுவதில்லை. அவர் நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குற்றச்சாட்டுகளை சொல்ல வேண்டாம். ஏனென்றால், பெயரைச் சொல்லி, குடும்பத்தைப் பற்றியெல்லாம் பேச வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதை நீங்கள் படித்துவிட்டு தீர்ப்பு சொல்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். எனவே, அவர் பேசி முடித்தவுடனேயே எங்களுக்கு தீர்ப்பு வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவைக் குறிப்பைப் படித்துவிட்டுச் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. அர. சக்கரபாணி:** உங்களுடைய நியாயமான தீர்ப்பை நான் எதிர்பார்க்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நான் சொல்கிறேன்.

**திரு. அர. சக்கரபாணி:** உங்களிடமிருந்து நியாயமான தீர்ப்பு வரும் என்று எதிர்பார்க்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். மாண்புமிகு உறுப்பினர் சக்கரபாணி, நீங்கள் சொல்வது குறித்து, நான் அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டு என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு மதிப்பு கொடுத்து உட்காருங்கள். சபையை நடத்த விடுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. தென்னரசு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்) கண்டிப்பதற்கு இதில் ஒன்றும் இல்லை. நீங்கள் சொன்னதைத்தான் நான் சொன்னேன். அவர் 'வெத்து பட்ஜெட்' என்று சொன்னார், இவர் 'அம்மா பட்ஜெட்' என்று

சொன்னார். அதைத்தான் சொன்னேன். இதில் கண்டிப்பதற்கு என்ன இருக்கிறது? நீங்கள் சொல்லவில்லை என்று மறுப்பு சொல்லுங்கள் பார்க்கலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்குக்கேற்ப கல்விக்காக 24,130 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மடிக் கணினி, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், 4 சீருடைகள், பேருந்து கட்டணச் சலுகைகள், மிதிவண்டிகள், காலை, மதியம் உணவுகள் என கடந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் வழங்கப்பட்டிருக்கின்றது.

பிற்பகல் 2–25

கடந்த 5 ஆண்டுகளில் 221 தொடக்கப் பள்ளிகள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 112 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுக் காலத்தில் 72,843 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 14,711 ஆசிரியர்கள் அல்லாத பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. பள்ளி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும் என்ற அறிவிப்பின்படி, 32 இலட்சத்து 67 ஆயிரத்து 311 மாணவர்களுக்கு, 5,612 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் மடிக்கணினி போன்றவற்றை வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் கருணைக் கடலாக விளங்குகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ், 12,000 ரூபாய் மகப்பேறு நிதியுதவியாக வழங்கப்பட்டு வந்தது. இப்போது அதை 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்கும் ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே மகப்பேறு திட்டம் கொண்டு வந்த, முதல்வருக்கெல்லாம் முதல்வர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத்

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருப்பதும் மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மாவின் கருணை உள்ளத்தால் இந்தத் திட்டத்தின்கீழ் 31 இலட்சத்து 19 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு 2,910 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு, உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. கே.எஸ் தென்னரசு:** இரண்டு நிமிடங்களில் என்னுடைய உரையை முடித்து விடுகிறேன். விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்றும், விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

“என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்,
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்,
ஒழுங்காய்ப் பாடுபடு வயல்காட்டில்,
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்”

என்ற பாடல் வரிகளுக்கேற்ப புரட்சித் தலைவர் வழி வந்த அம்மா அவர்கள், விவசாயிகளுக்காக 31–3–2016 வரை குறுகிய கால, மத்திய கால, நீண்ட காலக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்தவர், விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட அன்புத் தாய், புரட்சித் தலைவி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வட்டி உள்ளிட்ட மொத்தத் தொகையும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு, உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

***திரு. ஆர். கணேஷ்:** இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு சட்டமன்ற உறுப்பினராக வாய்ப்பளித்த அன்னை சோனியா காந்தி, இளம்

தலைவர் ராகுல் காந்தி, மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள், மரியாதைக்குரிய தளபதி ஆகியோருக்கு இந்த மன்றத்தின் மூலமாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு அரசியல் முகவரி தந்து என்னை உருவாக்கி, இந்த மன்றத்திலே பேசும் உரிமையைத் தந்த என் அரசியல் ஆசான், குரு, என் உயிருக்கும் மேலான மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர், நீலமலை நாயகன் திரு. ஆர். பிரபு அவர்கள் பாதம் தொட்டு என் கன்னி உரையை ஆரம்பிக்கிறேன்.

என்னை தங்களில் ஒருவனாகப் பாவித்து, சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த, என் உதகை தொகுதி மக்கள் அனைவருக்கும் இந்த மன்றம் மூலமாக என் இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் என் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சியினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே கல்விக்கென நிதி ஒதுக்கியபோது, கல்விக் கண் திறந்த காமராஜர் வழங்கிய மதிய உணவுத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, சத்துணவுத் திட்டமாக மாற்றி செம்மையாக நடக்கும் இந்தத் தருவாயில், உலக சுகாதார மையமான WHO ஆய்வின்படி, கிட்டத்தட்ட 70 சதவிகிதம் தொற்றுநோய்கள் பரவுவதற்கு நமது கையைக் கழுவாமையே முக்கியக் காரணமாக உள்ளதாகச் சொல்கிறது. ஆகவே, பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத்தைக் கருத்தில்கொண்டு, தொற்றுநோய் பரவாமல் இருக்க கை கழுவும் பழக்கத்தை உருவாக்க இந்த அரசு அனைத்து பள்ளி மையங்களுக்கும் சோப்பு மற்றும் handwash–க்கு நிதியை ஒதுக்கி வழங்க ஓர் ஆணை பிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–30

எனது தொகுதி, நமது மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரியாத தொகுதி அல்ல. 2011 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த வாக்குறுதியில், படுகர் இன மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். அதன்

தொடர்ச்சியாக மத்திய அரசுக்கு ஒரு தீர்மானமாக அது அனுப்பி வைக்கப்பட்டது. எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த படுகர் இன மக்கள் சார்பாக அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மத்திய அரசின் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ள அந்த affidavit என்ற உத்தரவின்மீது மாநில அரசு இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேயிலைக்குக் கட்டுப்படியான விலை ஏற்படுத்தித் தரப்படும் என்று மரியாதைக்குரிய முதலமைச்சர் கூறியிருந்தார்கள். தேயிலை தொழிற்சாலைகளிலுள்ள 20,000 தேயிலை விவசாயிகளுக்கு மட்டும் ரூ.2 மானியம் வழங்கப்படுகிறது. மற்றபடி, தேயிலை சாகுபடி செய்யக்கூடிய 45,000 விவசாயிகளுக்கு அந்த மானியமானது வழங்கப்படுவதில்லை. மேலும், நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலையாளம் பேசக்கூடிய ஈழுவதியா மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. இன்னும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. அதற்காக மனமுவந்து ஏதேனும் உதவி செய்து, அந்தச் சமூக மக்களின் குழந்தைகளினுடைய உயர் கல்விக்கும், வேலைவாய்ப்புக்கும் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டமானது மலைப் பிரதேசம். எங்கு பார்த்தாலும் மரங்கள், செடிகள்தான் அதிகமாக இருக்கின்றன. அங்கே அடிக்கடி, மரங்கள் விழும்போது மின்சாரம் பாதிக்கும் அபாயம் இருக்கிறது. அந்த இடங்களில் underground cable, நிலத்திற்கு அடியிலே மின் கம்பிகளைப் பதிக்க வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நமது முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் ஐயா அவர்கள், உலகம் சுற்றும் வாலிபன் படக் காட்சிகளை முடித்துக்கொண்டு முதன்முதலாக நீலகிரிக்கு வருகை தந்தபோது, மலர்க் கண்காட்சியிலே ‘ஜப்பான், சீனா நாடுகளிலே கண்ட கனவாகிய ரோப் கார் வசதி, பார்க்கிங் வசதி மற்றும் அடிப்படை வசதிகளை நிச்சயமாக இந்த நீலகிரி மாவட்டத்திற்குச் செய்து தருவேன்’ என்று எனது மாணவ காங்கிரஸ் பருவத்திலே கூறியிருந்தார்கள். எனது காதினிக்கக் கேட்டிருந்தேன். அதனைச் செவ்வனே செய்து இன்று

** நீலகிரி மாவட்டத்தை உலகத் தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக்க சிறப்பு நிதியினை ஒதுக்கி, இந்த அரசு செய்து தர வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைவேடர் மக்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்களுக்கு மீண்டும் பழங்குடியினர் சாதிச் சான்றிதழை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

படுகர் இன மக்களாகிய எங்களுக்கு கூட்டுப் பட்டா மட்டும்தான் இருக்கிறது. எங்களுக்கென்று settlement deed ஏதும் இல்லை. தமிழ்நாட்டில் நாங்கள் எந்த வங்கிக்குச் சென்றாலும், எங்களுக்கு டாக்குமென்ட் வேண்டுமென்றால், நிச்சயமாக எங்களுக்கு சிட்டா இருக்க வேண்டும். ஆக, ஒரு முறை settlement–க்கு வழி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உதகை மாரியம்மன் கோயிலுக்குக் கிட்டத்தட்ட 16 ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடக்காமல் இருக்கிறது. மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து அதை கருத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நீலகிரி மக்கள் தெரிந்தோ, தெரியாமலோ, ஏழையெளிய மக்கள் தங்களுக்கென ஒரு வீடு வேண்டுமென்று நினைத்து, அப்ரூவல் வாங்காமல் சில வீடுகளைக் கட்டிவிட்டார்கள். அவற்றை இடிக்கும் ஆணையை இந்த அரசு பிறப்பித்திருக்கிறது. தயவுசெய்து ஏழையெளிய மக்களின் கனவுத் திட்டமான வீட்டை இடிக்கும் உத்தரவை இரத்து செய்து, உடனடியாக அதனைச் சீரமைத்து, ஒரு முறை வரன்முறைப்படுத்துதல் திட்டத்திற்கு உள்ளாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்திற்கு சுற்றுலாத் தலம் என்ற முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும். தேயிலைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*பிற்பகல் 2–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

*****மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் இயக்கத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள், தன்னுடைய கன்னிப் பேச்சு என்று பேச ஆரம்பித்து, பேச்சினூடே... (குறுக்கீடு) கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். திரு. சேகர்பாபு, இங்கே இருக்கின்றபோது அடக்கமாக இருந்தீர்கள். அங்கே போனவுடனே மாறியுள்ளீர்கள். (குறுக்கீடு) இங்கே இருந்தவரை கட்டுப்பாடாக இருந்தீர்கள். அங்கே போனவுடனே மாறிவிட்டீர்கள். எவ்வளவு கட்டுப்பாடாக இருந்தவர், அங்கே போனவுடனே ஆடுகின்றார். எதையோ மென்று கொண்டேயிருக்கிறார். வாயை மென்று கொண்டேயிருக்கிறார்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர், தங்களது பதிலைச் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் ** என்று காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய கன்னிப் பேச்சில் குறிப்பிட்டார்கள். ஆனால், மாநில அரசு நிதியின்மூலம் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்காக 2001–2006 மற்றும் 2011–2016 ஆம் ஆண்டுகளில் ரூ.276.95 இலட்சம் செலவு செய்திருக்கிறோம் என்கின்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுலாத் துறை மேம்பாட்டுக்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, கடந்த ஆண்டுகளிலும் சரி, வரப்போகின்ற ஆண்டுகளிலும் சரி, மைய அரசும், மாநில அரசும் சேர்ந்து பல நிதியாதாரங்களை அளித்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

***திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கன்னிப் பேச்சில் குறிப்பிட்ட ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒரு மாவட்டத்தைக் குறிப்பிடுவதால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே தன் உயிராய்; தமிழினமே தன் உறவாய்; அறிவுப் பெருங்கடலாய்; ஆற்றலின் பிறப்பிடமாய்; அச்சம் வருவதுமில்லை, அஞ்ச ஏதுமில்லை; தனித்து நின்று எதிரிகளை வென்று மீண்டும் சாதனைகள் படைக்க அரியணை அமர்ந்திருக்கும் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் வாழ்த்தும் ஒற்றைச்சொல் அம்மா; எல்லா உயிர்க்கும் முதல் சொல் அம்மா; உலகத் தமிழரின் ஒரே நம்பிக்கை அம்மா; தேர்தல் கடலில் வெற்றி என்றால் அம்மா; உலக வல்லரசுகள் வாழ்த்தும் நல்லரசு அம்மா என தமிழக மக்கள் அன்போடு அழைக்கும் எங்கள் இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியத்தில், 100 வீடுகள்கூட இல்லாத பன்னீர்குட்டை என்ற சிறிய கிராமத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, அரசுப் பள்ளியில் படித்து

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வழக்கறிஞரான என்னை, கழகப் பணியாற்றிட மாவட்ட மகளிர் அணி பொருளாளராகவும், கழகப் பொதுக் குழு உறுப்பினராகவும் பணியாற்ற நல் வாய்ப்பளித்து,

> "என்ன கொடுப்பான் எவை கொடுப்பான்
> என்றிவர்கள் எண்ணும் முன்னே
> பொன்னும் கொடுப்பான் பொருள்கொடுப்பான்
> போதாது போதாது என்றால்
> இன்னும் கொடுப்பான்
> எதுவும் கொடுப்பான்"

என்ற வரிகளுக்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) கலியுகத்து கர்ணனாய் வாழும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள், என்னை மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகவும், செங்கோட்டையில் பறந்த முதல் தேசியக் கொடியை வடிவமைத்து அனுப்பிய குடியாத்தம் நகராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு, இஸ்லாமிய சகோதரர்களின் புனிதத் தலமான மக்காவில் நபிகள் நாயகத்திற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட படிக்கட்டு எங்களுடைய பேரணாம்பட்டு நகரத்தில் இருந்து சென்றது என்ற நம்பிக்கையைக் கொண்ட பேரணாம்பேட்டையை உள்ளடக்கிய குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, வல்லவர்களும், வளமைப் படைத்தவர்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும் போற்றி வணங்கும், எங்களது இதய தெய்வம் அமர்ந்து அலங்கரிக்கும் இந்த அவையில், ஒன்றரை கோடி தொண்டர்கள் கொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பேரியக்கத்தின் கடைகோடி தொண்டனான என்னை, இந்த அவையில் அமர்த்தி, அழகு பார்க்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மண் பார்க்கா திருக்கமல பாதங்களில் எனது கோடானுகோடி நன்றிகளைச் சமர்ப்பித்து, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். "மாற்றம் தந்த எங்களுக்கு ஏற்றம் தந்தீர், இந்த ஏற்றம் மீண்டும் தொடர, இனி மாற்றமே இல்லை, என்றும் அம்மாதான்" என்று (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் என்றும் அம்மாவின் பக்கம் என்பதை நிரூபிக்கும் வகையில் அம்மா அவர்களுக்குப் பெருவாரியான வாக்குகளை அள்ளிக் கொடுத்து, என்னை வெற்றிபெறச் செய்த எனது குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் நிதிநிலை அறிக்கை தமிழக மக்களுக்கு நளபாக விருந்தாக வழங்கப்பட்டு, மக்கள் அனுதினமும் அதைச் சுவைத்து, வரியில்லாத பட்ஜெட் வழங்கியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்தி வருகின்றனர். ஆனால், ஒருசிலர் அதன் சுவை தெரிந்தும் பாராட்ட மனமில்லாமல், "வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ" என்று பேசுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். அவர்களின் பேச்சை புறந்தள்ளி, இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டும் நல்மனம் படைத்தவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுமையில்லாத பட்ஜெட்டை அளித்த மாண்புமிகு அம்மாவின் நல்லாட்சியை எண்ணும்போது, கவிச்சக்கரவர்த்தி கம்பன் பெருமகனார் அவர்களின், "வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்; திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்; உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்; வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்" எனும் வார்த்தைகள்தான் நினைவிற்கு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, பெருமிதமாக தங்களை மூன்றாம் தலைமுறை அரசியல் பாரம்பரியம் படைத்தவர்கள் என்று அவர்களுக்கே உரிய அடக்கத்துடன் தெரிவித்தார்கள். அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அவர்களுக்குத்தான் அங்கு வாய்ப்பு கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் இயங்கும் இந்த இயக்கத்தில் அம்மாவின் கடைக்கண் பார்வை பட்டால் மட்டுமே போதும். எந்த ஒரு தலைவரின் வாரிசுகளாகவும், மிட்டா மிராசுகளாகவும், செல்வச் சீமான்களாகவும், பரம்பரை பணக்காரர்களாகவும் இருக்கத் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மாவின் விசுவாசமிக்க பிள்ளையாக இருந்தால் மட்டும் போதும் எந்தவொரு சாதாரண தொண்டனையும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக,

அமைச்சர்களாக ஆக்கும் ஆற்றலும், மக்கள் செல்வாக்கும் இந்த உலகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழ்நாடு முதலமைச்சர் அம்மாவைத் தவிர வேறு எவருக்குமில்லை என்பதைத் தங்கள் வாயிலாக இந்த மன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் பள்ளிக் குழந்தைகளுக்காக விலையில்லா மடிக்கணினிகள், கல்வி உபகரணங்கள், சீருடைகள், புத்தகப் பைகள், மிதிவண்டி, காலணிகள் போன்றவற்றிற்கென பள்ளிக் கல்வித் துறைக்காக 2,705 கோடி நிதி ஒதுக்கி, எங்கள் கிராமத்து குப்பன், சுப்பன் வீட்டுத் திண்ணையில் குழந்தைகள் தங்கள் மடியில் மடிக்கணினியை வைத்துக்கொண்டு உலக நடப்புகளைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதிலும், என் பக்கத்து வீட்டுப் பெண் தன்னுடைய லேப்டாப்பில் தட்டிப்பார்த்துச் சொல்கிறாள், “அக்கா, அமெரிக்காவிலிருந்த முன்னாள் அதிபரின் மனைவியும், வெளியுறவுத் துறை அமைச்சருமான திருமதி ஹிலாரி கிளின்டன் சென்னைக்கு வந்து அம்மாவை சந்தித்துவிட்டுச் சொன்னாராம், “Madam, you are invited to U.S., so that Americans will know the achievements of Tamil Nadu” என்று” அந்த அளவிற்கு இன்று மாண்புமிகு அம்மாவின் விலையில்லா மடிக்கணினி திட்டம் பள்ளி மாணவர்களின் அறிவியல் பசிக்கு விருந்தாக உள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள், தனிக் கவனம் செலுத்தி கல்வி இடைநிற்றலின் விகிதத்தைக் குறைத்ததால்தான், எட்டாக் கனியாக இருந்த உயர் கல்வி, இன்று என் கிராமத்தின் பெண் குழந்தைகளுக்குக் கிட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இல்லாவிட்டால், என் வீட்டு சுப்பனும், குப்பனும் ஒரு லேப்டாப் வாங்கும் விலையிலேயே அந்தப் பெண்ணிற்குத் திருமணத்தை முடித்திருப்பார்கள். இந்த உணர்வுபூர்வமான திட்டங்களைப் பாராட்ட மூன்றாம், நான்காம் தலைமுறை செல்வாக்கு படைத்த மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நிச்சயம் மனம் இருக்காது. ஆனால், பயன் பெற்ற அந்தப் பள்ளிக் குழந்தைகளின் தூய்மையான உளப்பூர்வமான நன்றிகள் என்றும் மாண்புமிகு அம்மாவிற்குச் சேர்ந்து கொண்டேயிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசதியான வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே விளையாடி வந்த செஸ்

விளையாட்டை இன்று அரசுப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு முதன்முறையாகக் கற்றுக் கொடுத்து, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெறவைத்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவ, மாணவியர் படிப்பில் மட்டுமல்லாது, sports and games மற்றும் extra curricular activity–களிலும் சிறந்து விளங்க ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் வழங்கி வருவது மாண்புமிகு அம்மாவின் அரசைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Sports Development Authority of Tamil Nadu என்ற அமைப்பே மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் மட்டும்தான் செயல்படுகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக்காட்டாக, SAF Games மற்றும் International Chess Championship ஆகியவற்றை நடத்தியது. உலகத்தரம் வாய்ந்த Nehru Indoor Stadium, Velachery Swimming Complex, Tennis Court என்பது மட்டுமல்லாமல், முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து நடத்த இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.30.19 கோடி நிதி மற்றும் 12,524 கிராம ஊராட்சிகளில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்த ரூ.75.15 கோடி நிதியும் ஒதுக்கிய மாண்புமிகு அம்மாவிற்கு என்றும் இளைஞர் சமுதாயம் நன்றிக்கடன்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ, மாணவியரின் ஒழுக்க நலன் கருதி, தற்போது மாண்புமிகு அம்மாவின் நல்லாசியோடு, பள்ளிக் கல்வித் துறை வெளியிட்டுள்ள 11 Disciplinary Guidelines தற்போது பெற்றோர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அவை மாணவர்களின் எதிர்காலத்தை சிறப்பான முறையில் மாற்றியமைக்கும் என்ற நம்பிக்கை அனைவரின் மனதிலும் எழுந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அரசியல் வரலாற்றில் எந்த நாட்டிலேயும், எந்த ஆட்சியாளரும், எந்த அரசியல் தலைவரும் சிந்தித்திராத மகத்தான திட்டங்களான பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், மகளிர் காவல் நிலையம், திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் உயர் கல்வியை ஊக்குவிக்க ரூ.50,000/- திருமண உதவித் திட்டம் ஆகிய பெண்கள் நலத் திட்டங்களை உருவாக்கி, அவ்வப்போது அவற்றை மெருகேற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வருவதை அரசியல் ஆர்வலர்கள் ஆச்சரியத்துடன் பார்த்து வருகிறார்கள்.

புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தைத் துவங்கியபோது, முதல் நபராக ஓடிச்சென்று 1983–ல் ரூபாய் 40,000 நிதி உதவி அளித்து, ஏழை பள்ளிக் குழந்தைகளின் பசியாற்றிய வள்ளல் எங்கள் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் இந்த அவையில் பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பங்களிப்பில் உதயமான திட்டத்தில் நானும் பள்ளிப் பருவத்தில் சத்துணவு உண்டிருக்கிறேன் என்பதை பெருமையுடனும், நன்றியுடனும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டும் என்பார்கள். ஆனால், எனக்கு உப்பிட்ட என் அன்னைக்கு உயிருள்ள வரை விசுவாசம் காட்ட, என் அன்னையே எனக்கு வாய்ப்பளித்துள்ளதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த பங்களிப்பில் உதயமான சத்துணவுத் திட்டம், இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மேம்படுத்தப்பட்டு "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்" என்று சிறப்பாகச் செயல்பட்டு, ஊட்டச்சத்து மிக்க உணவுகளை பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கு இந்நிதிநிலை அறிக்கையில் ரூ.1,644.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதைப் பாராட்டாத கல் மனம் படைத்தவர்கள் தமிழனாகவே இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகள் நலன்மீது அக்கறை கொண்டு, காவேரி பிரச்சினை என்றாலும், முல்லைப் பெரியாறு பிரச்சினை என்றாலும் சட்டப் போராட்டங்கள்மூலம் தொடர் வெற்றி பெற்று வருகிறார்கள்.

தேர்தலில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற, பதவியேற்ற முதல் நாளிலேயே சிறு, குறு விவசாயிகளின் கடனையெல்லாம் தள்ளுபடி செய்து, 8,35,360 குறு மற்றும் 8,58,785 சிறு விவசாயிகள் வாழ்க்கையிலே விளக்கேற்றி வைத்த ஒரே தலைவி எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமன்றி, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, விவசாய உபகரணங்கள் அத்தனைக்கும் 50 சதவிகித மானியமும், அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளிடம் ஊக்கத்தை வரவழைக்க வேண்டும் என்பதற்காக கிராமப்புற இளைஞர்களுக்குத் தனியாக 40 சதவிகித மானியத்துடன் வேளாண் இயந்திரங்களை வழங்கி, அவற்றைக் கொண்டு வாடகை மையம் அமைத்து அவர்கள் வாழ்வை வளப்படுத்திக்கொள்ள 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி. விவசாயிகளும், இளைஞர்களும் நன்றிகள் உரைக்க வார்த்தை இல்லாமல் ஆனந்தக் கண்ணீர் சிந்துவதைப் பார்த்து, பிற மாநில அரசுகளும் மனமாரப் பாராட்டுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்கும்போது, இருளிலே மூழ்கியிருந்த தமிழகத்தை மீட்டெடுத்து, சீரிய திட்டங்கள் மற்றும் ஆளுமைத் திறத்தினால், மின் பற்றாக்குறை என்ற வார்த்தையை TANGEDCO அகராதியிலிருந்து நீக்கி, தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

191 இலட்சம் நுகர்வோர்கள் பயன்பெறும் வகையிலே, 100 யூனிட் வரை கட்டணம் இல்லா மின்சாரமும், கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் மின்சாரமும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் மின்சாரமும் கட்டணமில்லாமல்

வழங்க உத்தரவிட்டு, இந்த நிதியாண்டில் மின்சார மானியத்திற்கு ரூ.9,007 கோடி நிதி ஒதுக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நெசவை பிரதானத் தொழிலாகக் கொண்டுள்ள மக்கள் வாழும் எனது குடியாத்தம் தொகுதியில் உள்ள பல்லாயிரக்கணக்கான நெசவாளர்களின் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Small Bus என்ற புதிய திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு, ஏழையெளிய மக்கள் பயன்பெற்று தங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து வருகின்றனர்.

தற்போது மக்களுக்கு மேலும் பயன் அளிக்கும் வகையில் Senior Citizen’s Bus Pass Scheme மூலம் இதுவரை ரூ.2.49 இலட்சம் மூத்த குடிமக்கள் பயன் அடைந்துள்ளனர் என்பதை அறிந்தும் இதனைப் பாராட்டாமல் ரசம் பூசாத கண்ணாடி என்று கூறும் நபர்களுக்கு

“இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு”

என்ற வள்ளுவரின் குறளை நினைவூட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இதுவரை 34.57 இலட்சம் கர்ப்பிணி தாய்மார்கள் 3,239 கோடி நிதி பெற்றுள்ளனர். அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், அம்மா ஆரோக்கிய திட்டம் போன்றவற்றைக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், உலகத்தில் எந்த ஓர் அரசியல் தலைவரும் சிந்திக்காத வகையில் கருவறையில் இருக்கும் சிசுவையும் காக்க வேண்டும் என்ற நோக்கில் கொண்டு வந்த இத்தகைய மகத்தான திட்டங்களை எண்ணும்போது, முன்னால் California கவர்னரும் ஹாலிவுட் நடிகருமான மரியாதைக்குரிய Thiru Arnold அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்தித்த பிறகு, “The work you do for women and children really touched me. I am not surprised at all, that the people of Tamil Nadu call you Amma” என்று கூறியது என் நினைவுக்கு வந்தது. அதை இந்த அவையில் நினைவுபடுத்த கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

என்ற குறளின் வரிக்கேற்ப மக்கள்மீது அன்பு செலுத்தி நல்லாட்சி புரியும் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தொலைநோக்குத் திட்டமான "Tamil Nadu Vision 2023" (மேசையைத் தட்டும் ஒலி) மூலம் செம்மையான முறையில் இலக்கை அடைய துறை வாரியாக தேவையான நிதியினை இந்த நிதிநிலை அறிக்கையில் வழங்கியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின் இந்த Revised Budget 2016–2017–ல், ஏற்கெனவே 120 வட்டாரங்களில் செயல்படும் புது வாழ்வுத் திட்டம் தவிர 900 கோடி செலவில் 120 வட்டாரங்களில் தமிழ்நாடு கிராமப்புற புதுவாழ்வுத் திட்டம் செயல்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக ரூ.355.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டங்களுக்கு ரூ.350 கோடி நிதி ஒதுக்கீடு, 2016–2017 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் இளைஞர்களுக்காக திறன் மேம்பாட்டுப் பயிற்சி இயக்கத்திற்காக ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு; Vision 2023 திட்டங்களைச் செயல்படுத்த அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்காக, Tamil Nadu Industrial Development Fund–க்காக இந்த ஆண்டு மேலும் 100 கோடி ரூபாய் Project Preparation Fund–க்காக ஒதுக்கீடு; இந்திய நாட்டிலேயே முதன்முறையாக Alternative Investment Fund Category என்பதை உருவாக்கி SEBI மூலம் 3,000 கோடி ரூபாய் திரட்ட நடவடிக்கை எடுத்த ஒரே அரசு அம்மாவின் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் உணர்ச்சிகளை தன் சுயநலத்திற்காக மட்டுமே பயன்படுத்தி தனக்குத்தானே பட்டமளிப்பு விழாக்கள் நடத்தி வந்த நபர்கள் தமிழக மக்களால் நிரந்தரமாக ஓரம் கட்டப்பட்டு, தமிழ் அன்னையே போற்றும் அளவிற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்காக, பெண்

எழுத்தாளர்களுக்கு அம்மா இலக்கிய விருது, உலகில் சிறந்த தமிழ் அறிஞர்களுக்கு உலக தமிழ்ச் சங்க விருது, சிறந்த மொழி பெயர்ப்பாளர்களுக்கு விருது ஆகியவற்றை வழங்க தமிழ் வளர்ச்சித் துறைக்கு ரூ.32.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழையும், தமிழ் பேசும் மக்களுக்கு தனிப்பெருமையும் சேர்த்துத் தந்துள்ளவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மேலும், அரசு நிருவாகத்தை மக்களின் இல்லத்திற்கே கொண்டு சேர்க்கும் அம்மா திட்டம், 24 மணி நேரமும் மக்கள் குறைகளைக் கேட்டு தீர்வுகளை வழங்க 'நவீன ஆராய்ச்சி மணி' என அரசியல் வல்லுனர்களால் பாராட்டப்படும் அம்மா அழைப்பு மையம் மற்றும் இ–சேவை மையங்கள், Online Patta Transfer முறை மற்றும் 2016–2017 ஆம் ஆண்டில் 3.50 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் அறிவிப்புகளை வழங்கி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குழந்தைகளுக்காகவும், பெண்களுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும், தமிழகத்தினுடைய பாதுகாப்பிற்காகவும் அத்தனை பேருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் சிறப்பான ஆட்சியைக் கொடுத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எத்தனையோ திட்டங்களைக் கொடுத்தாலும்கூட, மேற்கூறிய சிறப்பு ஒதுக்கீடுகள் என்பது பதத்திற்காக ஒரு சோறு மட்டும் தான், முழு உணவையும் படைக்க வரும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், கருவில் உள்ள குழந்தை முதல் கல்லறை செல்லும் மனிதன் வரை அனைவருக்கும் பலன் அளிக்கக்கூடிய வகையில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை வழங்கியுள்ளதை நினைக்கும்போது,

"சேர்த்த பணத்தை பத்திரமாய், செலவு செய்ய பக்குவமா
அம்மா கையில் கொடுத்து போடு செல்ல கண்ணு
அவங்க ஆற நூறு ஆக்குவாங்க சின்ன கண்ணு" (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற பட்டுக்கோட்டை பாடல் வரிகளைக் கேட்டு வளர்ந்த என் தமிழ் மக்கள் இந்த நாட்டையும், அதன் வளர்ச்சியையும் நம் புரட்சித் தலைவி அம்மாவின் கையில் கொடுத்துள்ளார்கள். அவர்கள் ஆறை நூறு ஆக்குவார்கள், அதற்கான வல்லமையும், ஆற்றலும் பெற்றவர்கள். எனவே, இந்த பட்ஜெட் மட்டும் அல்ல, இனி வருங்காலங்களில் வரும் அனைத்து பட்ஜெட்டுகளும் தமிழக

மக்களுக்கு ஏற்றமாகவே அமையும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இந்த நல் வாய்ப்பை அளித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

**தொகுதிக் கோரிக்கைகள்**

பெண்களுக்காக ஓர் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தரும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியின் தலைநகரமாக விளங்கும் குடியாத்தம் நகராட்சி அதிக மக்கள்தொகை கொண்ட நகராட்சியாகும். அலுவலக நேரத்தில் குறைந்தபட்சம் 10,000 இரு சக்கர வாகனங்களும், 2,000 நான்கு சக்கர வாகனங்களும் அரசு மற்றும் தனியார் பேருந்துகளும், கல்லூரி, பள்ளி மற்றும் தொழிற்சாலை வாகனங்களும் ஒரே நேரத்தில் பயணிப்பதால் அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்பட்டு பொதுமக்களும் மருத்துவ சிகிச்சைக்காக செல்லும் நோயாளிகளும், பள்ளி மாணாக்கர்களும் குறித்த நேரத்தில் சென்றடைய இயலாமல் மிகுந்த அவதிக்குள்ளாவதால் வி.கோட்டா சாலைக்கு ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தரவேண்டும். எனவே, மேற்படி குடியாத்தம் நகரத்திற்கு ஒரு புதிய புறவழிச் சாலை விரைவாக அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் தொகுதியின் நீண்டகாலத் தேவையான பேரணாம்பட்டு ஒன்றியத்தில், பத்திரப்பள்ளியில் மாண்புமிகு அம்மா அவர்களால் 2003–2004 ஆம் ஆண்டில் ஒரு புதிய அணை கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அது பின்னர் வந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியால், ஒப்பந்ததாரருக்கு தேவையற்ற தொந்தரவு கொடுத்து அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டார்கள். அந்தத் திட்டத்திற்கு புத்துயிர் தந்து மறு மதிப்பீடு செய்து தேவையான நிதியை ஒதுக்கி அந்த அணையை கட்டித் தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கைகளான பேரணாம்பட்டு நகரத்திற்கு சுற்றுச்சாலை, பேருந்து நிலையம்,

உருது துவக்கப் பள்ளி அமைக்கப்பெற வேண்டும். பேரணாம்பட்டு ஒன்றியம், நரியம்பட்டு மலட்டாற்றின் குறுக்கே மேம்பாலம், பேரணாம்பட்டு ஒன்றியம், அழிஞ்சிகுப்பம் ஊராட்சியில் பாலாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம், குடியாத்தம் ஒன்றியம் சேம்பள்ளி ஊராட்சி, கொட்டாரமடுவு ஆற்றின் குறுக்கே மேம்பாலம், பேரணாம்பட்டு ஒன்றியம் கொத்தூர் ஊராட்சி மலட்டாற்றின் குறுக்கே மூலைக்கொள்ளை பகுதியை இணைக்கும் வகையாக தரைப்பாலம் அமைக்க வேண்டும்.

பேரணாம்பட்டு ஒன்றியம், பாலூர் ஊராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம், குடியாத்தம் ஒன்றியம் வளத்தூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த வேண்டும்.

தீப்பெட்டி தொழிற்சாலைகளை நெறிப்படுத்தி தொழில் வளர்ச்சியைப் பெருக்க தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கான ஒரு பிரத்யேக சிட்கோ தொழிற்பூங்கா, கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்க குடியாத்தத்திற்கு லுங்கி ஏற்றுமதி ஜவுளி வளாகம் (Textile Export Zone) மற்றும் ஒரு ஜவுளி பூங்கா (Textile Park) அமைக்க வேண்டும்.

பேரணாம்பட்டு தாலுகாவிற்கு ஒரு புதிய அலுவலகக் கட்டடம், குடியாத்தம் தொகுதியில் தொழிற்சாலைகளை ஊக்குவிக்க ஒரு சிப்காட் மையம் அமைக்க வேண்டும்.

பேரணாம்பட்டு ஒன்றியம் மற்றும் நகரம் பல்வேறு தோல் தொழிற்சாலைகளை கொண்டுள்ளது. குடியாத்தம் தொகுதியில் தயாரிக்கப்படும் leather shoes உலக அளவில் பிரசித்தி பெற்றவை. இந்தத் தொழிலை மேலும் ஊக்குவிக்க ஓர் ஏற்றுமதி மையம் மற்றும் தோல் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குடியாத்தம் நகரில் கவுண்டன்ய ஆற்றின் குறுக்கே உள்ள தரைப் பாலத்தில் புதிய மேம்பாலம் அமைக்க வேண்டும்.

பேரணாம்பட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தீயணைப்புத் துறைக்கு சொந்த கட்டடம், பேரணாம்பட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கும் விடுதிக்கு ஒரு சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும்.

பேரணாம்பட்டு நகரத்தில் இயங்கி வரும் அரசு மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும்.

பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலையில் உள்ள வீரப்ப ஏரி, கடலப்ப ஏரி, தாம ஏரி ஆகிய ஏரிகளை ஆழப்படுத்தி அகலப்படுத்தி படகு குழாம் அமைத்து, அரவட்லாவை சுற்றுலா மையமாக மாற்ற வேண்டும்.

பேரணாம்பட்டு ஒன்றியத்தில் மாணவ/மாணவியர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக Mini Stadium அமைக்க வேண்டும்.

குடியாத்தம் தொகுதி மக்களின் நீண்ட கால மேற்படி கனவுகளை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களில் சமர்ப்பித்து மேற்படி திட்டங்களை நிறைவேற்றித் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28–7–2016) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2–55 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*20. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 16–2–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்கள் 20 மற்றும் 21 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

[2016 ஜூலை 27

*21. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்* (*மத்தியச் சட்டம் 1/1956*) *619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*] (*தமிழ், ஆங்கிலம்*)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–

--------

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the**
**Director of Stationery and Printing,**
**Chennai-600 002.**